விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 42 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 32 வியாழக்கிழமை (16.08.2012) | பக்கங்கள்: பதினாறு + iv

**நல்லைக் கந்தன் தேர்திருவிழா சிறப்பு பக்கங்கள் உள்ளே...**

## முன்னாள் புலிகளின் புனர்வாழ்வு பற்றி புலம்பெயர் தமிழர்கள் அரசுடன் பேச்சு

புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று இலங்கைக்கு வந்த புலம்பெயர் தமிழர்கள் குழு பாதுகாப்பு செயலர் கோட்டபாய ராஜபக்ஷவிடம் கோரியுள்ளது.

இலங்கை வந்த புலம்பெயர் தமிழர்கள் கடந்தவாரம் கோட்டபாய ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, சுவீடன், பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 22 புலம்பெயர் தமிழர்கள் கடந்தவாரம் இலங்கை வந்தனர். இவர்கள் பாதுகாப்பு செயலர் கோட்டபாய ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினர்.

புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு தொடர்பில் முக்கியமாக அவர்கள் கலந்துரையாடினர். குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றி கலந்துரையாடினர்.

இலங்கைக்கு விஜயம் செய்த இவர்கள் புலம்பெயர் தமிழர்கள் வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம் வெலிக்கந்தை - கந்தக்காடு சேனபுர ஆகிய புனர்வாழ்வு முகாம்களுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர். அவர்களுக்கு தேவையான சிறு உதவிகளையும் வழங்கினர். வவுனியா பூந்தோட்டம் முகாமிலுள்ள தமிழினி உட்பட முன்னாள் பெண் போராளிகளுக்கு மூன்று தையல் இயந்திரங்கள் மற்றும் இரண்டு கணனிகள் என்பவற்றை புலம்பெயர் தமிழர்கள் நன்கொடையாக 02

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம் பிளவுபட்டது

யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் நேற்று இரண்டாகப் பிளவுபட்டது. சுமார் 23 பேர்கள் அங்கம் வகிக்கும் இந்த சங்கத்தில் முன்னாள் நீதிபதிகள் ஐந்து பேர்கள் உள்ளனர். சுமார் இருபது முன்னணி சட்டத்தரணிகள் தற்போதைய சட்டத்தரணிகள் சங்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். மேல் நீதிமன்ற சங்கத் தலைவர், இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு முன்னாள் மாவட்ட நீதிபதி சுகந்தசேனன், வீரகத்திப்பிள்ளை ஆகியோர் இந்த மனுவில் கைச்சாத்திட்டுள்ளனர்.

யாழ் சட்டத்தரணிகள் சங்கம் இரண்டாக நேற்றுப் பிளவுபட்ட பின்னர் முன்னாள் நீதிபதிகள் ஐந்துபேர் பிளவுபட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். சுமார் முன்னணி சட்டத்தரணிகள் தற்போதைய சங்கத்திலிருந்து 02

## யாழ். ஆர்ப்பாட்டத்தில் இந்நாள், முன்னாள் எம்.பி.க்கள்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று யாழ். நகரில் பஸ்நிலையத்திற்கு எதிரே கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டப் போராட்டம் காலை பதினொரு மணியளவில் ஆரம்பமாகி நண்பகல்வரை நீடித்தது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சரவணபவன் 02




யாழ். நகரில் நேற்று நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டம்... (படம்: கே.சந்திரா)

## பக்ஸில் அனுப்பினோம் அம்பலமாக வாய்ப்பில்லை

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களுக்கான திருத்தங்கள் பக்ஸ் மூலம் பரீட்சை நிலையங்களுக்கும் பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டதால் சம்பந்தப்பட்ட கேள்விகள் பற்றிய விபரங்கள் பலருக்குத் தெரியவந்து விட்டன என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்த குற்றச்சாட்டு தவறானது என்று பரீட்சைகள் ஆணையாளர் எம்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார். 02

## தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்படும் வரை போராட்டங்கள் தொடரும்

- யாழ். பஸ் நிலைய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுரேஷ் எம்.பி.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் அரசாங்கமும், சர்வதேசமும் தலையிட்டு அவர்களை விடுவிக்கும் வரையில் கைதிகளின் விடிவுக்கான இத்தகைய போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

சிறைச்சாலைகளில் தமிழ்க் கைதிகள் தகுந்த விசாரணைகள், மருத்துவ வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விடுவிக்கப்படல் வேண்டும். இவர்கள் தமது சொந்த வாழ்க்கையில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும். சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இதனை கவனத்தில் 02

## 'பக்ஸ்' மூலம் ஜீ.சீ.ஈ. (உ.த) வினாத்தாள் திருத்தங்கள்

**கேள்விகள் அம்பலமாகின எனச் சாடுகிறார் தொழிற்சங்கவாதி**


"ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களில் கண்டுபிடிக்கப்பட்ட தவறுகளுக்கான திருத்தங்கள் பக்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதால் அந்தத் திருத்தங்கள் பற்றிய விபரம் பல தரப்பினருக்கு தெரியவந்துள்ளது. இதனால் பரீட்சைகள் தொடங்குவதற்கு முன்னதாகவே கேள்விப் பத்திரத்திலுள்ள விடயங்கள் தெரியவந்துள்ளது. இது பொறுப்பான அதிகாரிகளின் பொறுப்பற்ற

தன்மையை எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுக் காரியதரிசி ஜோசப் ஸ்டாலின் 02

## தமிழர்களுக்காக இலங்கையை இந்தியா வற்புறுத்த வேண்டும்

**- ஜெயலலிதா**

"சிங்களவர்களுக்கு சமமான உரிமைகளை இலங்கைத் தமிழர்கள் பெறுவதற்கு இனிமேலாவது இலங்கை அரசை வலியுறுத்தி வழிவகை செய்து அவர்களின் துயரை நீக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார். இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றுச் சென்னையிலுள்ள கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி



வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு 02

## யுத்தத்தில் பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகள் 578 பேர் யாழ். மாவட்டத்தில்

யாழ் மாவட்டத்தில் யுத்தத்தினால் பெற்றவர்கள் இருவரையும் பறிகொடுத்த 578 பிள்ளைகள் உள்ளனரென்று யாழ் மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். இதற்குப் புறம்பாக பெற்றோர்களை இழந்த 348 பிள்ளைகள் உள்ளனரென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் நலன்புரி நிலையங்களில் 1128 பிள்ளைகள் உள்ளனர். பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளைகள் 496 பேர் உள்ளனரென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாய்மாரை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 1239. தகப்பன்மாரை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 4440. அத்துடன் 65 பிள்ளைகள் சிறுவர் தொழிலாளர்களாக 02




## குக்கர் வெடித்து தீப்பற்றியதால் குடும்ப பெண் மரணம்

**வல்வெட்டித்துறை**

கரவெட்டியைச் சேர்ந்த ஜெயராசா கிருஷா என்ற குடும்பப் பெண்மணி குக்கர் அடுப்பு வெடித்துத் தீப்பற்றியதால் ஏற்பட்ட காயங்கள் காரணமாக நேற்றுக் காலமானார். இரண்டு பிள்ளைகளின் தாயாரான இவர் கடந்த பதினொராம் திகதி தீக்காயங்களுக்கு உள்ளானார். 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# நல்லைக் கந்தனின் சப்பறத் திருவிழா காட்சிகள்

# சமத்துவத்தை சீர்குலைக்க ஈழவாதிகள் முயற்சி

## - ஜனாதிபதி

நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சமத் துவம் மற்றும் நம்பிக்கை என்பவற்றை வீழ்ச்சியடையச் செய்ய ஈழவாத சக்திகள் மீண்டும் முயற்சிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.குருவிட்ட இராணுவ முகாமில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரை யாற்றிய ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றுகையில்,

தான் பிறந்த நாடு குறித்து வெளிநாடுகளில் அல்லது வெளிநாட்டு நபர்களிடம் விமர்சனம் செய்ய தாய்நாட்டை நேசிக்கும் எவரும் இடமளிக்கக் கூடாதென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.நாடு குறித்து மக்கள் மனங்களில் உள்ள நல்ல அபிப்பிராயத்தை இல்லாதொழிக்க ஈழ வாதிகள் முயற்சிக்கின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம்... (தொடர்)

வெளியேறியுள்ளனர்.

இளைப்பாறிய நீதிபதி மு. திருநாவுக்கரசு, முன்னாள் மாவட்ட நீதிபதி வசந்தசேனன், மு. வீரகத்திப்பிள்ளை ஆகியோர் பிளவுபட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய சங்கத்தின் தலைவராக முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலும் சட்டத்தரணிகள் சங்கத்திலும் இளைப்பாறிய நீதிபதிகள் ஆறு பேரிலே ஐந்து பேர் உள்ளனர்.

புதிய சங்கத்தில் இணைந்துள்ளார்கள். முன்னணி சட்டத்தரணிகளும் ஏற்கனவே இருபதுக்கும் அதிகமான சட்டத்தரணிகள் இணைந்து உள்ளார்கள்.

திரு. ஸ்ரீகாந் திருநா வுக்கரசு மேல் நீதிமன்ற நீதிபதி இளைப்பாறிய மாவட்ட நீதிபதி வசந்தசேனன் உப தலைவர்க ளாக மாவட்ட நீதிபதி எல். வீரகத்திப்பிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## குக்கர் வெடித்து...

மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரின் உடல் நிலை மோசமடையவே, யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பலனளிக்காததால் நேற் றுக் காலை காலமானார். மரண விசாரணைகளின் பின்னர் இவரது சடலம் உறவினர்களிடம்கையளிக்கப்பட்டது.

## தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்படும் ... (தொடர்)

எடுக்க வேண்டும். இவர்களை விடுவிப்பதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளான நிமலரூபன் மற்றும் புல்ரொக்ஷான் ஆகியோரது மரணங்களை கண்டித்தும், வடக்குக்கிழக்கில் காணி அபகரிப்பு இடம்பெறுவதாக குற்றம்சாட்டி அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் யாழ். நகரில் பஸ் நிலையத்துக்கு எதிரே கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகளின் நல் வாழ்வுக்காகத்தான் நாம் இன்று போராடிக்கொண்டிருக்கின்றோம். இந்தப் போராட்டம் இத்துடன் முடித்துவிடாது இலங்கை அரசு இவர்களை விடுதலை செய்யும் வரை, சர்வதேச சமூகம் தலையிட்டு இவர்களை விடுதலை செய்யும் வரையில் இந்தப் போராட்டங்கள் பல்வேறுபட்ட இடங்களில் தொடர்ந்தும் நடைபெறத்தான் போகின்றது.

இலங்கை அரசாங்கம் சிறைச்சாலைகளில் தடுப்பில் இருந்த போது மரணமானவர்கள் தொடர்பாக உடனடியாக விசாரணை செய்யப்பட வேண்டும். குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும். அவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் பாரபட்சம் இன்றி தண்டிக்கப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கை.

மேலும் விசாரணைகள், மருத்துவ வசதிகள் இன்றி இன்னும் பலர் சிறைகளில் உள்ளனர். அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும். சரியான மருத்துவ வசதிகள் வழங்கப்படல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக சிறைக் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும்.

## யாழ். ஆர்ப்பாட்டத்தில்... (தொடர்)

ஸ்ரீதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களுடன் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் புதிய ஜனநாயக சோசலிஷ லெனின் கட்சியின் தலைவர் சி.க. செந்தில்வேல் நவ சமாஜவாதி கட்சியின் உறுப்பினர் ஜனகன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கரா உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது நிமலரூபன், டில்ரொக்ஷன் ஆகியோரது மரணங்களுக்கு கண்டனம் தெரிவித்தும், இம்மரணங்கள் குறித்து விசாரணை நடத்தப்படல் வேண்டும் என்று கோரியும் கோஷம் எழுப்பப்பட்டதோடு வடக்கு கிழக்கில் காணிகள் அபகரிக்கப்படுவதாக குற்றம் சாட்டியும் கோஷங்களை எழுப்பினர்.

மேலும் இப் போராட்டத்துக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

## பக்ஸ்’ மூலம் ஜீ.சீ.ஈ. (உ.த)... (தொடர்)

தெரிவித்தார். ஒன்பது ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் கொழும்பில் ஒழுங்கு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

கேள்விப் பத்திரங்கள் பொதிசெய்து அனுப்புவதற்கு முன்னதாகவே திருத்தங்கள் அச்சிடப்பட்டு அந்தந்தப் பொதிகளுக்குள் வைத்து அனுப்பப்படுவதே வழமையானது. பாதுகாப்புக் கருதி அப்பொதிகள் சீல் செய்யப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் தொடர்பாக இரகசியங்கள் பேணப்பட வேண்டுமென்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது அதுவே வழமையான நடைமுறை ஆனால் இந்தத் தடவை பரீட்சைத் தினத்துக்கு முன்னதாகவே ‘பக்ஸ்’ மூலம் திருத்தங்கள் அனுப்பி வைக்கப்பட்டதால் பலருக்கு அதுபற்றி தெரியவந்துவிட்டது என்றும் ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் இஸற் புள்ளிச் சர்ச்சையில் சிக்கியிருக்கும் பரீட்சைத் திணைக்களத்துக்கு இது ஒரு புதிய நெருக்கடியைத் தருமென்றும் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார்.

விவசாயம் பழைய பாடத்திட்ட இரண்டாவது கேள்விப் பத்திரம், பௌதீகவியல் கேள்விப் பத்திரம் ஆகியவற்றில் தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு திருத்தங்கள் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பக்ஸில் அனுப்பினோம்... (தொடர்)

“திருத்தங்களைப் பாதுகாப்பாக பரீட்சை நிலையங்களுக்கும், பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கும் நேரடியாக எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கு எம்மாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டும் அப்படி வழங்கக்கூடிய சாத்தியங்கள் தென்படாத இடங்களுக்கே பக்ஸ் மூலும் திருத்தங்கள் அனுப்பப்பட்டன.

இருந்தும் திருத்தங்கள் மற்றும் கேள்விகள் பற்றிய விப ரங்கள் வெளியே தெரியாதவாறே பக்ஸ் மூலம் அனுப்பினோம் என் றார் பரீட்சைகள் ஆணையாளர்.

## முன்னாள் புலிகளின் ... (தொடர்)

வழங்கினர். அத்தோடு வெலிகந்தை முகாமிலுள்ளவர்களுக்குத் தேவையான அடிப்படை பொருட்கள் சிலவற்றையும் வழங்கினர்.

## யுத்தத்தில் பெற்றோரைப்... (தொடர்)

வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளன என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் மொத்தமாக ஓர் இலட்சத்து 98 ஆயிரத்து 68 பிள்ளைகள் வாழ்கின்றனர் இவர்களில் 426 பிள்ளைகள் வலது குறைந்தவர்கள்.

240 பேர் மனநோயால் பீடிக்கப்பட்டவர்கள். மருத்துவக் கவனிப்பின்றி வாழ முடியாத பிள்ளைகளின் எண்ணிக்கை 120 என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர்களுக்காக... (தொடர்)

தெரிவித்தார்.

இலங்கையில், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்த இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பு, சென்னையில் திமுக சார்பில் தமிழ் ஈழ ஆதரவாளர் மாநாடு நடத்தப்பட்டு, இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஜெயலலிதாவும் சுதந்திர தின உரையில் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்திருக்கிறார்.


## எங்கள் அம்மாவின் ஈராண்டு நினைவலைகள்...

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 1952 | 2010 |
| * | * |
| 04 | 08 |
| * | * |
| 06 | 08 |



திருமதி **பூரணம் கந்தையா**

**அன்னையே!**
**வாழும் காலம் வரை**
**எங்களுக்காக வாழ்ந்த**
**உங்களின் ஈராண்டு நாளில்**
**எங்கள் விழிநீரை ஏற்று**
**ஆசீர்வதித்திடுங்கள்**
**ஆண்டவன் பாதங்களில்**
**பெறுக சாந்தி அம்மா!**

உங்கள் நினைவுடன்,
**கணவன், மகன், மகள்மார்.**

*உடுவில் தெற்கு சுன்னாகம்.*

# முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கிழக்கில் கூட்டமைப்பு ஆட்சியமைக்கும்

**இரா. சம்பந்தன் உரை**



கிழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான இரா.சம் பந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கணிசமான ஆசனங்களை பெறும் பட்சத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்போம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் நாங்கள் ஏற்கெனவே பேசியுள்ளோம். எங்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தொடர்பு இருக்கின்றது. அந்த வகையில், கிழக்கு மாகாணசபையில் கணிசமான ஆசனங்களை பெற்று ஆட்சி அமைப்போம்.

தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தோம். இந்த பேச்சுவார்த்தைகளில் இருந்து அரசாங்கம் நழுவிச்சென்றதே தவிர, நாங்கள் இதில் இருந்து நழுவிச்செல்லவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினை சரவேதசத்திற்கு சென்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கும் ஜெனீவாவுக்குமாக தமிழ் மக்களின் பிரச்சினை இன்று சர்வதேசத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. இந்த நிலையில் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரவணைக்க வேண்டிய நிலையில் உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்று சர்வதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டது என்றால் அதற்கு முழுக் காரணமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பது அனைவருக்கும் தெரியும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் 85 வீதம் வாக்களிக்க வேண்டும். அவ்வாறு வாக்களிக்கும்போது மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 8 உறுப்பினர்களையும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 5 உறுப்பினர்களையும் அம்பாறை மாவட்டத்திலிருந்து 3 உறுப்பினர்களையும் பெற்றுக்கொள்ளமுடியம்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஏன் நடத்தப்படுகின்றது? எதற்காக நடத்தப்படுகின்றது? என்பது மக்களுக்கு நன்கு தெரியும். ஆகவே தான் இந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனைத்து தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும்'' என்றார்.

“2008ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட கிழக்கு மாகாணசபையும் ஏற்படுத்தப்பட்ட விதமும் அது இயங்கிய விதமும் எமக்கோ எமது மக்களுக்கோ திருப்தி அளிப்பதாக இருக்கமுடியாது. இருக்கவும் இல்லை.

எமது ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டியது, கட்டியெழுப்ப வேண்டியது உங்களினதும் எங்களினதும் கடமை. அதன் மூலமாக எமது மக்களுக்கு அதிகப்படியான பலத்தை நாம் சேர்ப்போம்.

எப்போதும் இல்லாதளவு தமிழர் பிரச்சினை இந்த நாட்டில் சர்வதேச மயமாக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச சமூகத்தின் கருத்தென்ன. அமெரிக்கா கூறுகிறது, இந்தியா கூறுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேசி ஒரு தீர்வைக்காண வேண்டும் என்று கூறுகிறார்கள். இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வந்திருக்கிறது. அது தொடரக்கூடாது.

இங்கு வாழும் தமிழ் மக்கள் இழப்புகள், அழிவுகளை அனுபவித்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருப்பதனாலேயே அவர்கள் அதனைக் கூறுகிறார்கள்.

அதற்கு ஒரு முடிவுவரவேண்டும் என்ற வகையில் நியாயமான வகையில் தீர்க்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினையை ஒருமித்த நாட்டுக்குள் தீர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்திருக்கிறது. தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது என்ற வகையில் அரசாங் கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி முடிவுக்கு வர வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றார்கள். என்றார்.

மேலும் எமது மக்கள் கௌரவமாக, சுயமரியாதையுடன், பாதுகாப்பாக, தமது அரசியல், கலாசார, பாரம்பரிய அபிலாஷகளை தங்களுக்குக் கிடைக்ககூடிய சுயாட்சி மூலமாக நிறைவேற்றி வாழக்கூடிய சூழ்நிலை உருவாகப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதன் நிமித்தம்தான் பல்வேறு நெருக்கடிகளை அரசாங்கம் எதிர்கொண்டிருக்கிறது. அவற்றினை அரசாங்கம் சமாளிக்க வேண்டிய கடப்பாடும் அதற்கிருக்கிறது“ என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் ரி.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் உள்ளிட்ட கலந்துகொண்டனர்.

## பல்கலை ஆசிரியர்கள் நாட்டின் பெறுமதி மிக்க சொத்துக்கள்

**- மேர்வின்**

பல்கலைக்கழக ஆசிரியர்கள் விசேட பிரிவினராக கருதி அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பது அரசாங்கத்தின் கடமை என பொது மக்கள் உறவுகள், பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

பியகமவில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

”“அரசாங்கத்திற்கு கூறுவதற்கு என்னிடம் சில விடயங்கள் உள்ளன. பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் நாட்டின் சொத்துக்களாவர். கொள்கலன்கள் மூலமாகக்கூட இச்சொத்துக்களை இறக்குமதி செய்ய முடியாது. இவர்கள் இலங்கையர்களின் சொத்துக்களாவர். மாபெரும் நான்கு நதிகளைவிட இது பெரிய சொத்தாகும். எனவே அவர்களை விசேட பிரிவினராக கருதி அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பது அரசாங்கத்தின் கடமையாகும்” என அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

அதேவேளை, கலந்துரையாடல்களுக்கு வருமாறும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்தார். ”அவர்களின் தலைமுறையினருக்கு அவர்கள் விசுவாசமாக இருக்காவிட்டால் அது பெருந்தவறாகும்” என அவர் கூறினார்.

## தேர்தல் காலத்தில் 270 சுகாதார ஊழியர்கள் நியமனம்: சப்ரகமுவவில் முறைப்பாடு

தேர்தல் காலத்தில் சப்ரகமுவ, மாகாணத்தில் 270 சுகாதார ஊழியர் நியமனங்கள் செய்யப்பட்டிருப்பது தேர்தல் திணைக்களத்தின் கவனத்துக்கு வந்துள்ளதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நியமனங்கள் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்துக்கு இரண்டு நாளுக்கு முந்திய திகதயிட்ட கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்கள் என்ன அடிப்படையில் செய்யப்பட்டன என்ற விபரத்தையும் நியமன திகதி பற்றிய விளக்கதையும் தரும்படி மாகாண சுகாதார அதிகாரிகளிடம் தேர்தல் திணைக்களம் கேட்டுள்ளது.

இது அப்பட்டமான தேர்தல் சட்ட மீறல் என பவ்ரல் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி டெய்லி மிரருக்கு தெரிவித்தார்.

ஆளும் கட்சியின் வேட்பாளர்களால் பயன்படுத்தப்படுவதாக கூறப்படும் அரசாங்க வாகனங்களை பொலிஸார் தேடி வருகின்றனர். ஆளுங்கட்சி வேட்பாளர்கள் அரச வாகனங்கள் பயன்படுத்தி வருவதாக ஹெட்டியாராச்சி கூறினார்.

## அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மீது அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

இரண்டு அரசியல் கட்சிகளுக்கு இடையில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற மோதல் தொடர்பில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகலவிற்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பொலிஸ் மா அதிபர் என். கே.இளங்ககோனிடம் முறையிட்டுள்ளார். பொலிஸார் சிறந்த முறையில் செயற்படாமையினாலேயே குறித்த பிரச்சினை பாரதுரமானதாக மாறியது என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இதன் காரணமாக சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணகலவை நீக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

“குறித்த பொலிஸ் அதிகாரி அமைச்சர் அதாவுல்லாவின் கையாள் போன்று கடந்த திங்கட்கிழமை செயற்பட்டார். இது தொடர்பில் நான் பொலிஸ் மா அதிபரிடம் பேசியுள்ளேன். பின்னர் எழுத்து மூலம் முறைப்பாடும் செய்யவுள்ளேன் என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவாளர்களிடையே கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோதல் காரணமாக பல வாகனங்கள் மற்றும் தேர்தல் காரயாலயங்கள் தேசமாக்கப்பட்டன.

இதனால் ஏற்பட்ட பதற்ற நிலையை பொலிஸார், மற்றும் இராணுவத்தினர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்தல் திணைக்கம் கோரியுள்ளது என பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் தெரிவித்தார்.

## இன்றைய இராசி பலன் (16.08.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 32 ஆம் நாள் வியாழக்கிழமை**

**நட்சத்திரம்** : பூசம் இரவு 10.18 வரை அதன்பின் ஆயிலியம்
**திதி** : சதுர்த்தசி இரவு 10.18 வரை அதன்பின் அமாவாசை
**சுபநேரம்** : 7.35-9.05 **இராகுகாலம்** : 1.35-3.05
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)
**மேடம்** : பொருள் சேர்க்கை, வாகன சுகம், இல்ல மகிழ்ச்சி.
**இடபம்** : காரிய நஷ்டம், சிறு தூரப்பிரயாணம், சகோதர சஞ்சலம்.
**மிதுனம்** : வீண் செலவு, மன சஞ்சலம், போசன சுகக்குறைவு.
**கடகம்** : பொருள் வரவு, அந்நியர் உதவி, சகோதர நன்மை.
**சிங்கம்** : பொருள் விவரம், உடல்நலக் குறைவு, யோசனை மிகுதி,
**கன்னி** : மனமகிழ்ச்சி, எதிர்பாராதா வரவு, போசன சுகம்.
**துலாம்** : செலவினம், தொழில் சஞ்சலம், மன உழைச்சல்.
**விருச்சிகம்** : பணவரவு, நற்செய்கை, தந்தைவழி உதவி.
**தனுசு** : ரோகபயம், கடன்தொல்லை, கஷ்ட ஜீவனம்.
**மகரம்** : பிரயாணம், விருந்துபசாரம், நண்பர் உதவி.
**கும்பம்** : யோசனை மிகுதி, ஆரோக்கிய கேடு, எதிரிகளால் தொல்லை
**மீனம்** : பொருள் இலாபம், தெய்வதரிசனம், புத்திரசுகம்.

**- ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

## யாழ்ப்பாணத்தில் இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டம்

இந்தியாவின் 66ஆவது சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில நேற்றுப் புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

யாழ். பலாலி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்தியாவின் தேசியக் கொடியை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.மகாலிங்கம் ஏற்றி வைத்தார்.

இந்தியாவின் சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியினால் விடுக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியை இந்தியத்துணைத் தூதுவர் எஸ்.மகாலிங்கம் இதன்போது வாசித்தார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# யுத்த காலத்தில் கூடப் பள்ளிவாசலைப் பாதுகாத்த பருத்தித்துறை மக்களுக்கு நன்றி

## இப்தார் நிகழ்வில் மௌலிமன்சூர்

"நாட்டில் துரதிஷ்டவசமாக நீண்டகாலமாக கொடிய யுத்தம் நிகழ்ந்தது. இந்த யுத்தகாலகட்டத்தில் கூட பருத்தித்துறையில் இருந்த இம் முஸ்லிம் பள்ளிவாசலை அவர்கள் பாதுகாத்துள்ளனர். பருத்தித்துறையில் எந்த முஸ்லிம் மகனுக்காவது எந்தவிதமான இன்னல்களும் இடம்பெறவில்லை. இப்பிரதேச மக்கள் மிகப் பாராட்டுக்குரியவர்கள். வடமராட்சிப் பிரதேசத்தில் இருக்கும் ஒரேயொரு முஸ்லிம் பள்ளிவாசல் இதுதான்".

மேற்கண்டவாறு பருத்தித்துறை முகைதீன் ஹமீதியா ஜும்மா பள்ளி வாசலில் நடைபெற்ற "இப்தார்" விசேட நிகழ்விலே உரையாற்றிய பள்ளிவாசலின் இமாம் மௌலவி எம்.எஸ்.எம்.மன்சூர் குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் அப்பாஸ் ராசீக் தலைமை தாங்கினார்.

இவ் இப்தார் விசேட நிகழ்விலே பருத்தித்துறை நகரபிதா சட்டத்தரணி சபா இரவீந்திரன், பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர் எஸ்பத்மநாதன், பருத்தித்துறை மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் எஸ்.உதயமூர்த்தி உட்பட வர்த்தகர்கள், அரச உத்தி யோகத்தர்கள், பிரமுகர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து உரையாற்றிய மௌலவி மன்சூர் குறிப்பிட்டதாவது:

ஒவ்வொரு மனிதனும் சமய வழி நின்றொழுகும் போது அவனது வாழ்க்கை உயர்வடையும். வாழ்க்கையில் ஒளிவீசும். பௌத்த, இந்து, முஸ்லீம் , கிறிஸ்தவ மத மக்கள் அனைவரும் இறைநம்பிக்கையுடனே வாழ்கின்றனர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நபிகள்நாயகம் சமூகத்தில் வாழ்ந்த சகல சமயத்தவர்களுடனும் சிநேகமாக உறவும், நெருக்கமான பிணைப்பும் கொண்டு மிக அன்பாக வாழ்ந்து காட்டியுள்ளார். அதன்படி நாங்களும் வாழ வேண்டும்.

முன்னர் போலல்லாது தற்போது தேவைகள் அதிகரித்துள்ளன. இதனால் இப்பள்ளிவாசலைத் திருத்திப் புனரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்பள்ளிவாசலைப் புனரமைப்பதற்கான அனுமதியை கலாசார அமைச்சு வழங்கியுள்ளது.

இப் பள்ளிவாசலைத் திருத்திப் புனரமைப்பதற்கான ஆலோசனைகள், ஒத்துழைப்புக்களை நீங்களும் வழங்க வேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் எந்த வேறுபாடுகளுமின்றி ஒற்றுமையுடனும் அமைதியுடனும் வாழும்போது நமது நாடு பல்வேறு வகைகளிலும் உயரவடையும் என்றும் கூறினார்.

# தேர்தல் களம் நெருங்க, நெருங்க வன்முறைகள் அதிகரிக்கின்றன

## 'பவ்ரல்' அமைப்பு

தேர்தல் தினம் நெருங்க நெருங்க வன்முறைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகும். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குக் கட்சித் தலைவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹொட்டயாராச்சி தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதம் கிழக்கு, வடமத்தி மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைவெறவிருக்கும் நிலையில், இதுவரை கட்சி மோதல் சம்பவங்கள் இரண்டு பதிவாகி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சப்ரகமுவ மாகாணம் கேகாலையில் ஒரு சம்பவமும், கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றில் ஒரு சம்பவமுமே பதிவாகியுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரிக்காமலிருக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவமொன்றில் அரசியல் கட்சியொன்றின் 4 மோட்டார் வாகனங்களும், 2 மோட்டார் சைக்கிள்களும் சேதமாக்கப்பட்டிருப்பதுடன், கட்சி அலுவலகமொன்றும் தீயிடப்பட்டுள்ளது. இச் சம்பவங்களில் 2 பேர் காயமடைந் திருப்பதாகவும் முறைபாடு கிடைக்கப் பெற்றிருப்பதாக, ரோஹன ஹெட்டயாராச்சி தெரிவித்தார்.

தேர்தல்கள் நடைபெறவிருக்கும் 7 மாவட்டங்களில் இதுவரை 60 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் அரச வளங்கள் சட்ட விரோதமாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவது சம்பந்தமானவையும் அடங்கும் என்றும் கூறினார்.

# ஐயாயிரம் ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தில்...

உடுவில்

ஐயாயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை கல்விக் கோட்டப் பிரிவுகளில் பத்துப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் கோட்டத்தில் யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயம், யா/சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலயம், மாதகல் புனித தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை மற்றும் மாதகல் நுணசை வித்தியாலயம் ஆகியவையும் சங்கானைக் கோட்டத்தில் யாழ்.வட்டுக்கோ[illegible] திருநாவுக்கரசு வித்தியாலயம், யாழ். பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை, யா.வட்டு கார்த்திகேய வித்தியாலயம் மற்றும் யாழ்.சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம் ஆகியவையும் தெரிவுசெய்யப்பட்டு தலா ஐந்து லட்சம் ரூபா செலவில் பௌதீக வள அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.


# யுத்தம் முடிந்தாலும் இன்னமும் இனக் குரோதம் ஒழியவில்லையே

## -மட்டக்களப்பில் அமைச்சர் திஸ்ஸ விதாரண

"யுத்தம் முடிந்தபோதும் இனக் குரோதம் இன்னும் முடிவடையவில்லை. நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செல்வதன் மூலமே சரியான அரசியல் தீர்வொன்றை காண முடியும்" என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். கல்லடி ஓசியானிக் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் கூட்டத்திலேயே இவ்வாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக எனது தலைமையில் சர்வகட்சி குழு அமைக்கப்பட்டு மாநாடுகள் நடைபெற்றன. அதில் 17 கட்சிகளுடன் பேசினோம். அதற்கு 13 அரசியல் கட்சிகளால் 21 அம்சங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்னர் 5 அம்சங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அனைவரும் ஒன்றுபடுவதன் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். இந்த வகையில் தான் இவ்வாறான விடயங்களை முன்வைத்து கிழக்கு மாகாணத்தில் நாம் தனியாக போட்டியிடுகின்றோம். அம்பாறையில் இரண்டு ஆசனங்களையும் திருகோணமலையில் ஒரு ஆசனத்தையும் மட்டக்களப்பில் ஒரு ஆசனத்தையும் பெறுவோம். எங்களது சோஷலிச மக்கள் முன்னணி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பெண் வேட்பாளர் உட்பட சிறந்த வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம் என்றார். தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைபபாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் கணபதிப்பிள்ளை பரணி-கரன் உட்பட வேட்பாளர்கள் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# 2006 இல் கொல்லப்பட்டவர்களுக்கு ஆத்ம சாந்தி பிரார்த்தனை


(தீவகம்)

அல்லைப்பிட்டியில் உள்ள புனித பீலிப் நேரியார் ஆலயத்தில் 2006ம் ஆண்டு ஆவணி மாதம் 13ம் திகதி இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் எறிகணைத் தாக்குதலின் போது குண்டு ஆலயத்தின் மீது விழுந்து வெடித்த போது ஆலயத்தில் தஞ்சம் அடைந்த பொதுமக்களில் இருபது பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

கொல்லப்பட்டவர்களினது ஞாபகார்த்தமாகவும், அவர்களினது ஆத்மா சாந்தி அடைவதற்காகவும் 13-ம் திகதி திங்கட் கிழமை ஆலயத்தில் இறை[illegible] பாடுகள் இடம்பெற்றன.

அமலத்தியாகிகள் சபையைச் சேர்ந்த எஸ். இரத்தினராஜ் அடிகளார் தலைமையேற்று இந்தப் பூஜை வழிபாடுகளை நடாத்தி வைத்தார்.

இந்த நிகழ்வில் இறந்தவர்களின் தாய், தகப்பன் மார்கள் உறவினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர



வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள தனியார் மீன்வலை உற்பத்தி தொழிற்சாலை ஒன்றைக் காண்கிறீர்கள். வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் இயங்கும் இத்தொழிற்சாலையில் 28பேர் பணிபுரிகின்றனர்.

# வறிய மாணவர்களுக்கு கல்வி நிதி உதவி

உடுவில்

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் வறிய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இவ் வருடம் புகைத்தல் எதிர்ப்பு தினத்தை யொட்டி சேரிக் கப்பட்ட நிதியில் இருந்து வறிய மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டிற்காக ஒரு வருடத்திற்கு உதவிகள் வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தில் பயன்பெறவுள்ள மாணவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இ.போ.ச. பஸ் நடத்துனரிடம் டிக்கட் புத்தகம் அபகரிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புனரமைக்கப்பட்ட இ.போ.ச. பஸ். சுகததாச விளையாட்டரங்கு சமீபமாகச் சென்று கொண்டிருந்த போது திடீரென வந்த இனந்தெரியாத நபரொருவர் நடத்துனரின் கையிலிருந்து டிக்கட் புத்தகத்தைப் பறித்துக் கொண்டு செனறுவிட்டார். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் இடம்பெற்றது.

## குப்பிளான் காளி அம்மன் ஆலய அலங்கார உற்சம்

(உடுவில்)

குப்பிளான் காணி அம்பாள் ஆலய அலங்கா உற்சவம் கடந்த 8ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். இவ் உற்சவ தினங்களில் செஞ் சொற்செல்வர் இரா.கேதீசனின் 'கம்பராமாயணம்' சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது.

# பெண்களுக்கு ஒப்பனைப் பயிற்சி

உடுவில்

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பெண்களுக்கான தலையலங்காரம் மற்றும் முக ஒப்பனைப் பயிற்சி நெறி ஆரம் பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சியில் பயிலுநராக சேர விரும்பும் பெண்கள் எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கிரம அபிவிருத்திப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

இப் பயிற்சி ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# புனர்வாழ்வு பெற்றவர்களுக்காக முச்சக்கர வாகன கடனுதவி திட்டம்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு முச்சக்கர வாகன கடனுதவி வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையில் இம் முச்சக்கர கடனுதவி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது அலைன்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் ஆண், பெண் இருபாலருக்கும் புதிய முச்சக்கர வாகன கடனுதவி வழங்குவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பதிவுகள் மேற்கொண்டவர்களுக்கு தெரிவின் அடிப்படையில் சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய முச்சக்கர வாகன கடனுதவி வழங்கப்படவுள்ளன.

கடன் பெற்றவர்கள் இரண்டாவது மாதத்திலிருந்து 45 மாதங்கள் குறைந்த கால அடிப்படையிலும் 72 மாதங்கள் கூடிய கால அடிப்படையிலும் தவணை கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான நடைமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கபடவுள்ளன.

இக்கடனுதவியில் சாரதி அனுமதிபத்திரம் உட்பட பதிவுகள் அனைத்தும் அலைன்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு ஆவணங்கள் உரியவரிடம் கையளிக்கப்படவுள்ளன.

முச்சக்கர வாகன கடனுதவியை பெறுவதற்கு பதிவுகளை மேற் கொண்டவர்களின் விபரங்களையும் முச்சக்கர கடனுதவி வழங்கும் நிறுவனங்களின் ஆவணங்கள் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே உரியவர்களிடம் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், சாரதி அனுதிப்பத்திரம் பெற்று தற்போது மாற்றுதிறனாளிகள் ஆனவர்கள், இனி வரும் காலங்களில் சாரதி அனுமதிபத்திரம் பெற்றுகொள்ள இருப்பவர்களுக்கும் தொழில்நுட்ப மாற்றங்கள் மூலம் முச்சக்கரவாக னத்தை செலுத்த முடியுமானால் அவர்களுக்கும் முச்சக்கர வாகன கடனுதவி வழங்கப்பட்டு சாரதி அனுமதிபத்திரம் வழங்கப்படும்.

## இந்து சமய பேரவையில் கலந்துரையாடல்

வலிகாமம்

இன்றைய இந்து மக்களின் நிலை சம்பந்தமான கலந்துரையாடல இலங்கை இந்து மகா சபையினால் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள கந்தர் மடத்தில் அமைநதிருக்கும் இந்து சமயப் பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து மகா சபைத் தலைவர் வைத்தியகலாநிதி ஆர்.சிவசங்கா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தற்போதைய நிலையில் இந்து சமயம் இந்து ஆலயங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் வளர்ச்சி போன்ற பல்வேறு விடயங்களும் ஆராயப்படவுள்ளன.

## ஐந்து வயது சிறுமி ஒருவர் மண்வெட்டியால் வெட்டிக் கொலை

மாத்தறை - வெலிகமை - கோட்டேகொட பிரதேசத்தில் ஐந்து வயதுச் சிறுமி மண்வெட்டியினால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

பாத்திமா அப்ரா என்ற சிறுமியே நேற்று முன்தினம் மாலை இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி பிரிதொரு சிறுமியுடன் விளையாடிக் கொண்டிருந்த போதே அப்பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் சிறுமியை மண்வெட்டியால் வெட்டிக் கொலை செய்து பின்னர் சடலத்தை வயலொன்றுக்குள் வீசியுள்ளார்.

இதைக் கண்ட மற்றைய சிறுமி ஓடிச் சென்று சம்பவத்தை வீட்டில் கூறியதையடுத்தே ஊர் மக்களால் சடலம் மீட்கப்பட்டது.

சந்தேகநபரை பிடித்த ஊர் மக்கள், சந்தேக நபரை தாக்கி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னரே சந்தேகநபர் கொழும்பிலிருந்து வெலிகமையிலுள்ள தனது வீட்டிற்கு வந்துள்ளார். இவர் மனநிலை பாதிக்கப்பட்டவரெனக் கூறப்படுகிறது. வெலிகமை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## டெசோ மாநாட்டினால் இலங்கை தமிழர்களுக்கு நன்மை இல்லை

### இந்திய கட்சிகள் கண்டனம்

டெசோ மாநாடு என்ற நாடகத்தை, தி.மு.க., வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இதனால், இலங்கைத் தமிழர்களுக்கு எந்த காலத்திலும், நன்மை கிடைகாது என, பா.ஜ., குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து, அக்கட்சியின் மாநிலத் தலைவர் பொன்.ராதா கிரு'ணன் அளித்த பேட்டியில்

தி.மு.க., தலைவர் கருணாநிதி, பராசக்தி நாடகத்தை, "டெசோ" என்ற பெயரில் மீண்டும் அரங்கேற்றியுள்ளார். இந்த மாநாட்டால், இலங்கைத் தமிழர்களுக்கு எந்தப் பலனும் இல்லை. ஆயிரக்கணக்கான தமிழர்களை கொன்று குவிக்க உடந்தையாக இருந்து விட்டு, எஞ்சியுள்ளவர்களின் நலனுக்காக, "டெசோ" மாநாட்டை நடத்துவதாக கருணாநிதி கூறுகிறார்.

இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க.,வால் எப்போதும் நன்மை கிடைக்காது.

இதேவேளை இந்திய தேசிய முஸ்லிம் லீக இது குறித்துத் தெரிவிக்கையில்

உண்மையான இலங்கைத் தமிழர்கள் யாரும் "டெசோ" மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. இம் மாநாட்டால், ஈழத் தமிழர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காது.

தி.மு.க., ஆட்சியில் இருக்கும் போது, ஈழத் தமிழர்கள் நலனுக்கு எதையும் செய்யவில்லை. அமைச்சர் பதவிக்காக, காங்கிரசை மிரட்டும் தி.மு.க., இலங்கைத தமிழர் நலனுக்காக அது போன்ற நடவடிக்கையை ஏன் எடுக்கவில்லை என, இந்திய தேசிய முஸ்லிம் லீக் மாநிலத் தலைவர் ஜவஹர் அலி கேள்வி எழுப்பியுள்ளார்.

## யுனிசெப் அமைப்பின் ஆதரவுடன் சிறுவர் துஷ்பிரயோக ஒழிப்பு

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு யுனிசெப்புடன் இணைந்து பிள்ளைகளுக்கான வன்முறைகள் அற்ற சமூகம் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது. திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்ச்சி அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

அங்குரார்ப்பண வைபவத்தின் பின்னர் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோருக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

பிள்ளைகளுக்கான வன்முறைகள் இல்லாத சமூகம் என்ற திட்டமானது சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்து, மௌன கலாசாரத்தைக் கலைக்க எத்தனிக்கிறது.

பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி சமுதாயத்திலும், பாடசாலைகளிலும், இல்லங்களிலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை சிறப்பாக இனங்கண்டு, அவர்களின் தேவைகளை வினைத்திறன் வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்காகவும் நாட்டில் அதிக பாதிக்கப்பட்டதும், இடர் மிக்கதுமான மாவட்டங்களில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சர் திஸ்ஸ கரல்லியத்த உரையாற்றுகையில், அப்பாவி மக்கள் மக்கள் மீதானன துஷ்பிரயோகத்தை தடுத்து, பிள்ளைகள் இளம்பராயத்தை சுதந்திரமாக அனுபவிப்பதற்குரிய சூழ்நிலையை அமைத்து பிள்ளைகளுக்காக வன்முறைகள் அற்ற சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் தொலைநோக்காகும் என்றார்.

## பெரிய புராணத்தில் சைவ சித்தாந்தம்: நூல் வெளியீடு

(மாவிட்டபுரம்)

சைவப்புலவர் கு.ரஜிபனின் பெரிய புராணசூசனத்தில் சைவசித்தாந்தம் எனும் நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கு சைவசிந்தாநத ஆய்வு நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாபூசனம் சைவப் புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை சைவப்புலவர் க.ரமணனும் ஆசியுரையினை பண்டிதர்அ.தங்கமயிலும் வாழ்த்துரைகளை யாழ் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர்எஸ்.சத்தியசீலன் ,யாழ் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன ஆகியோர் நிகழ்த்துவர்

அறிமுகவுரையினை யாழ்பல் கலைக்கழக இந்துநாகரிகத்துறை வாழ்நாட்பேராசிரியர்ப.கோபாலகிருஸ்ணஐயரும் வெளியீட்டுரையினை யாழ்பல்கலைக்கழக இந்து நாகரி கத்துறைத தலைவர் மா. வேதநாத னும் நிகழ்த்துவர். ஆய்வுரைக ளில் "தமிழ் உரை மரபும் சூசனமும்" எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் அ.சண்முகதஸ்," பெரியபுராண சூசனமும்சைவசித் தாந் தமும்" எனும் தலைப்பில் உரையாற்றுவர்.

## கொள்ளுபிட்டியில் ரயில் விபத்து: ஒருவர் பலி

கொள்ளுபிட்டி பகுதியில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுபிட்டி - பம்பலபிட்டி ரயில் பாதைக்கு இடையே நேற்று முன்தினம் இரவு இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

மருதானையில் இருந்து காலி நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

ரயிலில் மோதுண்டு உயிரிழந்தவர் பன்னிபிட்டிய - தெப்பானம பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞராவார்.






சுன்னாகம் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு திடீரென மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்று தீப்பற்றியதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. தீ பற்றியெறிவதைக் கண்ட அயல் கடைக்காரர்கள் மற்றும் அப்பகுதி இளைஞர்களின் உதவியுடன் தீயை அணைத்தனர். (படம்: வலிகாமம்)

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி வியாழக்கிழமை

## யாழ் மாவட்டம் பாழ்படக் கூடாது

யுத்த காலத்தில் தாய், தந்தையர் இருவரையும் இழந்த 578 பிள்ளைகள் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்கின்றனர் என்று யாழ் செயலகத்திலுள்ள சிறுவர் நலப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. 4440 பிள்ளைகள் தமது தந்தையர்களை இழந்துள்ளனர் என்றும் 1239 பிள்ளைகளுக்கு தாய்மார் இல்லையென்றும் அந்த அறிக்கை கூறுகிறது. பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை 360 என்றும், 65 பேர் சிறுவர் தொழிலாளர்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 1100க்கு மேற்பட்ட பிள்ளைகள் . சிறுவர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர், சுமார் 330க்கும் மேற்பட்ட பிள்ளைகள் உறவினர், நண்பர்களின் வீடுகளில் வாழ்கின்றனர் என்றும் அறிக்கை கூறுகிறது.

சுமார் மூன்று தசாப்தகால யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் யாழ். மாவட்டமும் ஒன்றுதான். யாழ் மேயராகவும், எம்.பி.யாகவும் விளங்கிய அல்பிரட் துரையப்பாவின் படுகொலையோடு ஆயுதப் போராட்டத்துக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக முன்னாள் அரசாங்க அதிபர்களான பஞ்சலிங்கம், ஞானச்சந்திரன், அந்தோனிமுத்து, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா, உரும்பிராய் இந்துக்கல்லூரி உப அதிபர் வி. மகாலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் ஆயுத வேட்டுகளுக்கு இலக்காகி அகால மரணமானார்கள். ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் இடம்பெற்ற படுகொலைகள் இவை. இதே காலப்பகுதியில் மக்களும் பழிவாங்கப்பட்டார்கள். உட்கட்சி மோதல்களால் கொல்லப்பட்டவர்கள், சகோதரப் படுகொலைகளினால் தீர்த்துக் கட்டப்பட்டவர்கள் என்று எண்ணிலடங்கா புள்ளி விபரங்களும் உண்டு.

அரச படைகளுக்கும், ஆயுதக் குழுக்களுக்குமிடையிலான மோதலில் பெருமளவு மக்களும் பலியெடுக்கப்பட்டிருக்கிறார்கள். சொத்து, சுகங்களைப் பறிகொடுத்திருக்கிறார்கள். அநாதரவாக வீதிக்கு வந்திருக்கிறார்கள்.

யுத்தம் எங்கு நடந்தாலும் மிக அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் பெண்களும், பிள்ளைகளும்தான். யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்த பின்னரும் யாழ். மாவட்டத்தில் அநாதரவாக வாழும் பிள்ளைகள் பற்றிய விபரங்களே மேலே சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

1990ல் இடம்பெற்ற இரண்டாவது ஈழ யுத்தத்தின்போது சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் வன்னிக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்தார்கள். 1995ல் யாழ்ப்பாணம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் மக்கள் மத்தியில் நிலவிய பீதியும், அவல நிலையும் தொடர்கதையாகவே இருந்தது.

ஆயுதப் போராட்ட காலத்திலென்றாலும் சரி, அதற்கு முன்னரோ, பின்னரோ இருந்த நிலைமைகளிலும் சரி யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை, சவால்கள் நிறைந்ததாகவே விளங்கியது. யுத்தம் முடிவடைந்து மூன்றாண்டுகள் கழிந்துவிட்டாலும், பொதுவாக. மீள் கட்டுமானப் பணிகளும், புனர் நிர்மாண வேலைகளும் போதியளவு விரைவாக மேற்கொள்ளப்படவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் நிறையவே இருக்கின்றன.

பதினாறு வயதுக்கு கீழ்ப்பட்டவர்களையே சிறுவர், சிறுமியர் என்று வகைப்படுத்துகிறார்கள். இவர்கள் கொடூரமான அகப் புறச் சூழ்நிலைகளால் பெரிதும் பாதிக்கப்படக் கூடியவர்கள். உடல் ரீதியான பாதிப்புக்களும், மன ரீதியான பாதிப்புகளும் பிள்ளைகள், மனிதர்களாக வளர்ந்த பின்னரும் தொடரவே செய்யும்.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் புனர்வாழ்வுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் போதியளவுக்கில்லையென்றே கூறவேண்டும். மனோரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்காக உளவளத்துணை வழங்கும் சேவைகள் விஸ்தரிக்கப்படவேண்டும். பெற்றோரை இழந்து, வாழ்வின் வசந்தங்களைப் பறிகொடுத்து வாழும் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகக்கூடிய நிலைமைகள் நிறையவே உள்ளன.

"கடந்த காலங்களில் பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற சம்பவங்களுக்கு இராணுவத்தினரையே குற்றம்சாட்டி வந்திருக்கிறோம். ஆனால் இப்போது உறவினர்கள், கடைக்காரர்கள் ஏனையோரும் துஷ்பிரயோக சம்பவங்களில் ஈடுபடுகின்றனர்" என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டினார். "ஒரு துண்டு பாணுக்காகவும் ஒரு போத்தல் எண்ணெய்க்காகவும் மற்ற ஆண்களுக்கு சேவை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் வடக்கில் சில விதவைப் பெண்கள் இருக்கிறார்கள்" என்றும் சுமந்திரன் எம்.பி. பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். வடபகுதியை குறித்துத்தான் சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு பேசியிருந்தாலும், வடக்கின் ஓர் அங்கமான யாழ்ப்பாணத்திலும் நிலைமை இதுதான். அரசாங்கமும், தன்னார்வத்தொண்டு நிறுவனங்களும் இந்த அவல நிலை குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தி அக்கறையோடு செயற்பட முன்வர வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# செய்திகளுக்குப் பரபரப்புத் தேடும் தமிழக ஊடகங்கள்!

அது ஒரு மந்தமான மதியப் பொழுது. சென்னையின் மையப் பகுதியான அண்ணா மேம்பாலத்திலிருந்து மாநகரப் பேருந்தொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகிறது. அந்த நொடியிலிருந்தே "பரபரப்பு" தொற்றிக் கொள்கிறது. "பதற்றம்", "மீட்புப் பணி தீவிரம்" என முதலில் ஒரு தனியார் தொலைக்காட்சியில் "ப்ளாஷ் நியூஸ்" வருகிறது. அது ஒன்றும் மோசமான விபத்தல்ல. உயிரிழப்பும் இல்லை. யாருக்கும் படுகாயம் இல்லை. அதனாலென்ன? இன்னொரு தனியார் தொலைக்காட்சி நேரடிக் காட்சிக்காகத் தங்கள் வாகனங்களை அனுப்புகிறது. வாகனங்கள் போய்ச் சேருவதற்குள் நேயர்களுக்காகக் கணினி வரைகலைக் காட்சி ஒன்றை உடனடியாக ஒளிபரப்புகிறார்கள்.

ஒரு சினிமாவுக்கு நிகரான அக் காட்சியில் பாலத்தின் மையப் பகுதியிலிருந்து - கிட்டதட்ட இருபத்தைந்தடி உயரத்திலிருந்து - பேருந்து விழுந்து நொறுங்குகிறது. பார்வையாளர்கள் உண்மையிலேயே பதற்றம் கொள்கிறார்கள். இன்னும் சற்று நேரத்தில் ஒளிபரப்பப்படவுள்ள விபத்தின் "அழகான" கோரக் காட்சியைக் காண ஆவலோடு அந்த அலைவரிசையிலே காத்திருக்கிறார்கள். ஆனால் பாலத்திலிருந்து இறங்கும் போது நான்கடி உயரத்திலிருந்து தான் பேருந்து கவிழ்ந்திருக்கிறது.

அதனாலென்ன?

விபத்து நிகழ்ந்த பகுதி, அருகில் இருக்கும் அரசு, தனியார் மருத்துவமனைகள் என நான்கு திசைகளுக்கும் செய்தியாளர்கள் முடுக்கிவிடப்படுகிறார்கள். கேள்விகள் உற்பத்தி செய்யப்பட்டுச் செய்தி வாசிப்பவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவை செய்தியாளர்களைத் திணறடிக்கின்றன. கேள்விகள் எல்லாம் தூர்ந்த பிறகு, "யாராவது உளவியல் ரீதியாகக் காயம் அடைந்திருக்கிறார்களா? எக்ஸ்" என்னும் நுட்பமான புதிய கேள்வியைக் கண்டு பிடித்து உற்சாகம் அடைகிறது ஆசிரியர் குழு. பத்து பேர் உயிரிழந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், குறைந்தபட்சம் ஒருவராவது என்பதுதான் அவர்களுடைய வேண்டுதல். அதுபோலவே "ஒருவர் பலி" என மற்றொரு தனியார் தொலைக்காட்சி மேலும் பரபரப்பை ஏற்படுத்துகிறது. ஆனால் அவர்கள் துரதிர்ஷ்டம், அது உறுதிசெய்யப்படாத பொய்யான தகவல்.

அதனாலென்ன?

இன்றைய ஊடகங்கள் மக்களுக்கு அளிக்க விரும்புவது உடனடிச் செய்திகளைத்தாம். உண்மையை அல்ல. அவர்களுக்கு எப்போதும் "பரபரப்பு" ஏற்பட வேண்டும், எதிலும் "பதற்றம்" நிலவ வேண்டும். கொலை "கொடூரமாக" நிகழ வேண்டும் கொள்ளை "நூதனமாக" அடிக்கப்பட்டிருக்க வேண்டும் தீ "மளமள"வெனப் பற்றியெரிய வேண்டும். அப்படி இல்லாதபட்சத்தில் அவர்கள் உருவாக்குவார்கள், காவல் நிலையத்தில் பொய் வழக்கு ஒன்று ஜோடிக்கப்படுவதைப் போல. சமீபத்தில் அஸ்ஸாமில் நடந்த சம்பவமே இதற்கு உதாரணம். இரவு விருந்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய இளம்பெண் ஒருவர் இளைஞர்கள் சிலரால் பாலியல் தொந்தவுக்கு உள்ளாகியிருக்கிறாள். மதுபான பாருக்கு வெளியே நடந்த இச்சம்பவத்தை ஒரு தனியார் தொலைக்காட்சி ஒளிப்பரப்பி பரபரப்பைத் தேடிக் கொண்டது. இதை ஒளிப்பதிவு செய்த நியூஸ் லைவ் என்னும் தொலைக்காட்சிச் செய்தியாளர் தான் இந்த வன் கொடுமைக்கு அவ்விளைஞர்களைத் தூண்டியிருக்கிறார். அதற்கு ஆதாரமான ஒளிப்பதிவை அன்னா ஹசாரே குழுவைச் சேர்ந்த அகில் கோகாய் வெளியிட்டது, மற்ற செய்தி நிறுவனங்களுக்குப் பரபரப்பு தந்த செய்தி. இது போன்ற காட்சிகள் காண்பவர்களுக்கு நுட்பமான உளவியல் சிக்கலை ஏற்படுத்தும் என்பதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. கிளர்ச்சியைத் தூண்ட வேண்டும் என்பது அவர்களின் பிரதான நோக்கம். அதுதான் தொழில் சூத்திரமாகவும் இருக்கிறது.



பிரபாகரன் கொல்லப்பட்ட பின்னர் தமிழகத்திலிருந்து வெளிவரும் நக்கீரன் சஞ்சிகையின் அட்டைப்படத்தில் வெளியான ஒரு பொய்ச் செய்தியைத் தெரிவிக்கும் தந்திரம் இது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழுணர்வுதான் மிக முக்கியமான விற்பனை சரக்கு. தேசியமும், சில ஊடகங்களின் மூலதனமாக இருக்கின்றன.

தமிழக ஊடகங்கள் பயன்படுத்திக்கொண்ட மற்றொரு விஷயம் தமிழீழப் போராட்டம். ஆனால் இந்தக் கால் நூற்றாண்டு போராட்டம் முடிவடைந்தது உண்மையிலேயே இந்தியத் தமிழ் ஊடகங்களுக்கு மிகப் பெரிய இழப்புதான். அதனால்தான் இந்த இறுதிக் கட்டப் போரில் முடிந்தவரை பரபரப்பைக் கொணர்ந்து விட்டனர். உணர்ச்சிமிக்க போராட்டத்தை ஒரு ஹாலிவுட் சினிமாவின் சாகஸம் போலச் சித்தரித்தமை சகித்துக் கொள்ள முடியாதது. புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தனிப்பட்ட வாழ்க்கையும் செயல்பாடுகளும் இங்குள்ள ஊடகங்களால் அளவுக்கு அதிகமாக விதந்தோம்பப் பட்டதும், விமர்சிக்கப்பட்டதும் அபத்தமானவை. போர் குறித்தான நிதர்சன நிலைமைகளைச் சொல்ல இந்தியத் தமிழ் ஊடகங்கள் விரும்பவில்லை. வீரத் தமிழன் என்ற கற்பிதத்தைக் கலைப்பது வியாபாரத்திற்கு உகந்ததல்ல என்று கருதியிருக்கக் கூடும். இறுதி வரை ஓர் அற்புதம் நடக்கப் போகிறது என்றே பிரச்சாரம் செய்தன. போர் பற்றிய உண்மையான செய்திகளைத் தருவதில் இந்தியத் தமிழ் ஊடகங்களைவிட மேற்குலக ஊடகங்கள் காட்டிய அக்கறை கவனம்கொள்ளத்தக்கது. ஆனால் இவர்களுக்கு லாபம் ஒன்றே குறிக்கோளாக இருப்பதுபோல அவர்களுக்கு கிழக்கில் ஐரோப்பாவின் ஆதிக்கம் என்பதுதான் நோக்கமாக இருந்திருக்கிறது.

தமிழுணர்வு, இடதுசாரிச் சிந்தனை இது போன்ற பதார்த்தங்களைச் முறையான விதத்தில் கலப்பது திறமையான வியாபாரத் தந்திரம். இதைச் சரியாகப் புரிந்து கொண்டவை தமிழின் முன்னணி ஊடகங்களாகியுள்ளன. ஒரு கவர்ச்சி நடிகைக்கு எவ்வளவு சதவீதமோ அதே அளவு கருத்துக்கும் இடம் கிடைப்பது ஆரோக்கியமானதுதானே.

ஒரு இருபத்து நான்கு மணி நேரச் செய்தித் தொலைக் காட்சியில் குறைந்தது பத்து செய்தி நேரங்களாவது இருக்கும். அவற்றில் ஒரு மணி நேரச் செய்தி நேரங்களும் அடங்கும். இவை எல்லாவற்றையும் செய்திகளால் இட்டு நிரப்ப வேண்டும். அதுவும் சுவாரஸ்யமான செய்தியாகவும் புதிய செய்தியாகவும் இருப்பது அவசியம். இதற்காகச் செய்தியாளர்களுக்கு மேலும் மேலும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இது தவிர்த்து ராய்ட்டர், ஏஎன்ஐ, ஏபிடிஎன் போன்ற செய்தி நிறுவனங்கள் தேசிய, உலகச் செய்திகளை அளிக்கின்றன. இருந்தும் சில சமயங்கள் செய்திகள் இன்றி எல்லாக் களங்களும் வறண்டு விடுகின்றன. ஆக இது ஒன்றும் அவ்வளவு எளிய காரியமல்ல என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் வேறு என்னதான் செய்வார்கள்? சில சமயங்களில் ஆவிகள் நடமாட்டத்தையும் வினோதமான வேண்டுதலையும் செய்தியாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

சீனாவில் 'ங்டாய் நகரத்திலுள்ள நீர்நிலை ஒன்றில் பெண் சடலம் மிதந்துவருவதாகத் தகவல் வருகிறது. அங்கு மீட்புப் படையினர் செல்வதற்கு முன் செய்தியாளர்கள் குவியத் தொடங்கிவிடுகிறார்கள். அப்பெண் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம், பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப் பட்டிருக்கலாமா? என யூகத்தின் அடிப்படையிலே பல கோணங்களில் செய்திகளைத் தொகுத்து நேரலையாக ஒளிபரப்பத் தொடங்கிவிடுகின்றனர்.

(நாளை தொடரும்)

# யாழ்ப்பாணத்தில் இந்திய உதவியுடன் 30 திட்டங்கள் – உதவி ஸ்தானிகர் தகவல்

யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையமொன்றினை நிர்மானித்தல் வவுனியாவில் இருநூறு படுக்கைகளைக் கொண்ட ஆஸ்பத்திரி, திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் புனரமைததல், துரையப்பா விளையாட்டரங்கைப் புதுப்பித்தல் உட்பட முப்பது வேலைத்திட்டங்கள் இந்திய உதவியுடன் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தின் உதவிஸ்தானிகர் வி.மகாலிங்கம் குறிப்பிட்டார்.


இந்தியாவின் 66வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள துணைத்தூதரகத்தில் நடந்த சுதந்திர தின வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை திருத்தியமைக்கும் பணிகள், யாழ் போதனா வைத்தியசாலை, கிளி-நொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இந்திய உதவியுடனான ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இதைப் போன்று மதவாச்சி - மன்னார், மதவாச்சி - காங்கேசன்துறை பாதையில் ரெயில் தண்டவாளங்களை அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைப் புனரமைப்பு வேலைகள் ஆறு கட்டங்களில் மேற்கொள்ளப்படவிருந்தன. இவற்றில் நான்கு கட்டங்கள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நீருக்குள் அமிழ்ந்திருந்த பத்துக் கப்பல்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. கடற்பகுதியிலிருந்து மண்ணை அகழும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன. பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதைகளை அமைக்கும் பணி 850 மீற்றர்வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

# இஸ்ரேல் சிறையில் இருக்கும் கணவனின் விந்தணுவைக் கடத்தி தாயான பலஸ்தீன பெண்




இஸ்ரேல் சிறைச்சாலையில் இருக்கும் தனது கணவனின் விந்தணுவை கடத்தி வந்து பலஸ்தீன் தாய் ஒருவர் ஆண் குழந்தையை பெற்றெடுத்துள்ளார். பலஸ்தீனின் நப்லூஸ் மருத்துவமனையில் டலாஸ் சிபன் என்ற 32 வயது தாய் நேற்று முன்தினம் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுக் கொண்டார்.

இவரது கணவர் அம்மார் இஸ்ரேல் சிறையில் 32 ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இஸ்ரேல் சிறைச்சாலையில் இருக்கும் பலஸ்தீனர்களுக்கு தனது மனைவியுடனான உறவுக்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை. டலாஸ் சிபன் தனது கணவரை கடந்த 15 ஆண்டுகளாகக் கண்டதில்லை. எனினும் 37 வயதான தனது கணவனின் விந்தணுவை கடத்தி அந்தப் பெண் தாயாகியுள்ளார். எனினும் டலாஸ் சிபானுக்கு தனது கணவர் மூலம் ஏற்கனவே இரு பெண் குழந்தைகள் உள்ளனர்.

ஹமாஸ் அமைப்புடன் தொடர்புபட்டவர் என்ற குற்றச்சாட்டில் 15 ஆண்டுகளுக்கு முன் அவரது கணவர் கைது செய்யப்படும் போது 5 மாத கர்ப்பிணியாக இருந்தார். இந்நிலையில் 15 ஆண்டுகளில் தனது வீட்டில் முதல் முறையாக உண்மையான மகிழ்ச்சியை காண்கிறேன் என்று சிபானின் 16 வயது மகள் பாஷா புன்முறுவலுடன் தெரிவித்தார். இந்நிலையில் இஸ்ரேல் சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகளுக்கு தனது மனைவியுடன் உறவு கொள்ள அனுமதி அளிக்கப்பட வேண்டும் என பலஸ்தீன நிர்வாகத்தின் கைதிகள் விவகார அமைச்சர் சியாத் அபு எயின் குறிப்பிட்டுள்ளார். இந்த அனுமதி இஸ்ரேல் கைதிகளுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இஸ்ரேல் சிறையில் 4,700 பலஸ்தீன கைதிகள் உள்ளனர். இதில் 500க்கு மேற்பட்டோர் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

# அமெரிக்க இராணுவத்தினர் மீது 3,200க்கும் அதிகமான பாலியல் குற்றச்சாட்டுகள்




அமெரிக்க இராணுவத்தினர் மீது சுமார் 3 ஆயிரத்து 200 பாலியல் குற்றச்சாட்டுக்களை பெண் இராணுவத்தினர் தொடுத்துள்ளனர். இது குறைந்த அளவே என்றும் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க இராணுவத்தினர் உலகம் முழுவதும் பல்வேறு ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், சக ஊழியர்களாலே இராணுவத்தினர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவது அமெரிக்க இராணுவத்தினரிடையே அதிகரித்து வருகிறது. இதனால், கடந்த 2011ம் ஆண்டில் மட்டும் 3 ஆயிரத்து 200 பெண் இராணுவத்தினர் தாங்கள் சக ஊழியர்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளதாக புகார் கூறியுள்ளதாக அமெரிக்க இராணுவத்தலைமையகமான பெண்டகன் அறிவித்துள்ளது. இதில், 80 சதவிகித பெண் இராணுவத்தினர் தங்களது பாலியல் துன்புறுத்தல் குறித்து புகார்களை தெரிவிக்க முன்வருவதில்லை. மேலும், புகாரின் பேரில் ஏற்படும் விளைவுகள், எதிர்காலப் பிரச்சனைகள் மற்றும் சட்டத்தின் மீதான அவநம்பிக்கை போன்றவற்றின் காரணமாக அவர்கள் புகார்கள் தெரிவிக்க மறுப்பதாக பெண்டகன் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு சக ஊழியர்களால் பாலியல் பலாத்காரம் மற்றும் துன்புறுத்தல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட படைவீரர்கள், இக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பாதுகாப்புத் துறையின் விசாரணை முறையை மாற்றக்கோரி பெடரல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இராணுவத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் மனித உரிமை மீறல் அவர்களது மனநிலையை கடுமையாக பாதிப்பதாகவும், இதனால் போர் ஆயத்தத்திற்கு தயாராவதில் பின்னடைவு ஏற்படுவதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் செய்தி இதழான தி நியூயார்க் டைம்ஸ் கடந்த 2007ம் ஆண்டு இராக் போரில் ஈடுபட்ட பெண்களிடையே கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது. இதில், போர் மற்றும் பாலியல் துன்புறுத்தல் காரணமாக, அவர்களிடையே காயத்தினால் ஏற்படும் மனஅழுத்த நோய் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. மேலும், ஆப்கானிஸ்தான் மற்றும் இராக்கில் பணிபுரியும் அமெரிக்க பெண் ராணுவத்தினரில் 15 சதவிகிதத்தினர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக் கப்பட்டதற்கான காரணங் கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய சிந்தனை

**அமைதியோடு வாழ்வது உன் கையில்,**
**நீ தவற விட்டதால்தான் நோயாளியாய் வீழ்ந்து போகிறாய்”**
**- *கன்ஃபூசியஸ்***

உனது வாழ்வு, அது உனது கையில்! உன் துயருக்கு நீயே பொறுப்பு. நீயே காரணம். அதனை விட்டுவிட்டு அதிர்ஷ்டம் இல்லை என்று அலட்டிக் கொள்ளாதே.

விதி என்று புலம்பாதே., பிறர் சதி என்று கூச்சலிடாதே!

நீ இடம் கொடுக்காவிட்டால் உன்னை யாரும் கெடுத்துவிட முடியாது. அதுபோலவே யார் எத்தகைய நல்ல விடயங்களை எடுத்துச் சொன்னாலும், நீ உன் மனதில் அந்த விடயத்தில் நம்பிக்கை வைக்காவிட்டால் உன்னை யாராலும் திருத்திவிட முடியாது. யார் வந்து சொன்னாலும் நீ கேட்கமாட்டாய்.

அதுவே, உன் அமைதியான வாழ்வுக்கு நீயே பொறுப்பு என்கின்றனர் அறிஞர்கள்.

யோசித்துப் பாருங்கள். வாழ்வில் நீங்கள் அடையும் துன்பம், துயரம், வறுமை இப்படி எதுவாக இருந்தாலும் அதற்கான காரணம் நீங்களே என அறிவீர்கள். உங்களை ஒருவன் ஏதோ ஒரு வழியில் ஏமாற்றுகிறான். நீங்கள் அவனிடம் ஏமாந்து போகிறீர்கள். நீங்கள் என்ன சொல்வீர்கள். “என்னை ஒருவன் ஏமாற்றிவிட்டான்“ என்பீர்கள். இதனை மாற்றி யோசித்துப் பாருங்கள்.

“நான் ஒருவனிடம் ஏமாந்து போய்விட்டேன்“ என்பதே அது. அப்படி நாம் ஏற்றுக்கொள்வது குறைவு. ஒரு கண்ணாடிக் குவளை கீழே விழுந்து உடைகிறது. உடனே நீங்கள் சொல்வது, “கிளாஸ் உடைந்துவிட்டது”. இது சரியல்ல. கிளாஸை உடைத்தது நீங்கள் தானே.

இப்படிப் பார்க்கும்போது, எதற்குமே பெரும்பாலும், நம் அறியாமை, அவசரம், புரியாத சொற்கள் தான் அல்லது ஏதோவொன்று காரணமாகிவிடுகிறது. நாம் உறுதியாக நின்றால் கீழே விழ மாட்டோம். எனவே உன்னை மாற்றிக்கொள், எல்லாம் சரியாகும். இருந்தபோதும், இங்கே இன்னொன்றையும் சொல்லித்தான் ஆகவேண்டும். மற்றவர்களை வீழ்த்தவென்றே திட்டம்போட்டு செயற்படுபவர்கள் முன்னால் நீ போராடித்தான் ஜெயிக்க வேண்டும்.

# மக்கள் அரங்கம்

**இருள் சூழ்ந்த வீதி**

கூழாவடி அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அருகாமையில் செல்லும் வீதியில் மின்விளக்குகள் எதுவும் இன்றி இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. இந்த வீதியினூடாக சுதுமலை, சாவல்கட்டு, ஆனைக்கோட்டை பகுதிகளுக்கு பயணிக்கும் மக்கள் பெரும் சிரமத்துடனேயே பயணம் செய்கின்றனர்.

மாலை 6 மணிக்குப் பின்னர் தனியார் ரியூசன் வகுப்புகளை முடித்து, இவ் வீதியால் செல்லும் மாணவர்கள், வேலை மு்டிந்து வீடு திரும்புபவர்கள் அனைவரும் கடும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருவதாகவும் சொல்கிறார்கள். வேறு துர் நடத்தைகளும், களவுகளும் இடம்பெற இந்த இருள் சூழ்ந்த வீதி வாய்ப்பளிக்கிறது. தயவு செய்து உரிய தரப்பினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு இவ் வீதிக்கு மின் விளக்குகளை பொருத்தி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**கூழாவடி வாழ் இளைஞர்**
**(சண்டிலிப்பாய்)**

**குளம் புனரமைக்கப்பட வேண்டும்**

மானிப்பாய் உச்சியோடைப் பகுதியில் அமைந்துள்ள கேலன் காமக் குளம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதுள்ளது. இந்தக் குளத்தின் கட்டுக்கள், வாய்க்கால்கள் என்பனவற்றில் திருத்த வேலைகள் எதுவும் செய்யப்படாது பராமரிப்பின்றி மோசமாக அழிவடைந்துள்ளது.

மழை காலங்களில் நீர் இக்குளத்தை வந்தடையாது முழுமையாக நீர் வழிந்தோடி விடுகின்றது. இக் குளத்தில் நீர் இன்றி காணப்படுகின்றது. இந்தக் குளத்து நீரை நம்பி விவசாயம் செய்யும் நூற்றுக் கணக்கான விவசாயிகள் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள். இதனால் விவசாயிகள் வருமானமின்றி பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு உரிய தரப்பினர் இக் குளத்தின் புனரமைப்பு வேலைகளை . மிக விரைவில் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

**உச்சியோடை விவசாயிகள்**
**(சண்டிலிப்பாய்)**

# உரிமை கோரப்படாத சடலங்களை புதைக்க புதிய இடம்

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேதஅறையில் வைக்கப்பட்டு உரிமை கோரப்படாதுள்ள சடலங்களை புதைப்பதற்கு புதிய இடத்தை பெறுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

உரிமை கோரப்படாத சடலங்கள் தற்போது யாழ். பண்ணைப் பகுதியில் புதைக்கப்பட்டு வருகின்றன. குறித்த பகுதி தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருவதால் அதனை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ். போதனா வைத்திசாலையில் இன்று செவ்வாய்கிழமை நடைபெற்ற அபிவிருத்திக் குழு கூட்டத்தின் போது ஆராயப் பட்டபோதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி குழுவின் உப தலைவர் சட்டத்தரணி ரங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# வடக்கின் வளர்ச்சிக்கு வ
# தமிழர் பாரம்பரிய விவசா

விவசாயத் தொழிற்றுறை எனும் போது, அது ஒரு பக்கத்தில் விவசாய உற்பத்திக்கு அடிப்படையான (உள்ளீடுகள், உழவு இயந்திரங்கள், களஞ்சியம் போன்றன) கைத்தொழில்களையும் மறுபக்கத்தில் விவசாய உற்பத்திகளை மூலப்பொருளாகக் கொண்ட கைத்தொழில் களையும் குறிக்கும். இவ் ஆய்வு விவசாய உற்பத்தியை மூலப்பொருளாக கொண்ட கைத்தொழில்கள் பற்றியே ஆராய்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரம் நீண்டகால பாரம்பரியம் மிக்க விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. ஆயினும் ஒரு விவசாய தொழிற்றுறை நோக்கிய விரிவாக்கம் இங்கு குறிப்பிடும் படியாக அபிவிருத்தியுறவில்லை எனலாம். அதாவது, விவசாய உற்பத்தி மூலப்பொருளானது அதிக வருமானந்தரத்தக்க விவசாய அடிப்படையிலான கைத்தொழில் துறை நோக்கி இன்றுவரை சரியாகத் திசை திருப்பப்படவில்லை என்பதே இதன் கருத்தாகும். இலங்கையில் நூற்றாண்டிற்கு மேற்பட்ட வளர்ச்சியைக் கண்ட பெருந்தோட்ட விவசாயத்துறை கூட பண்ட உற்பத்திக் கண்டத்திலிருந்து பதனிடுதல் கட்டத்திற்குக் கூட இங்கு முறையாக அபிவிருத்தி பெறவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இப்பிரதேசத்தில் அதிகம் பரந்துள்ள விவசாயக் கைத்தொழில் நெல்லரைக்கும் ஆலைத்தொழிலாகும். பாரம்பரியவகை ஆலை, ஓரளவு நவீனவகை ஆலை, நவீன வகை ஆலை என இவை கிராமம் தொட்டு நகரம் வரை பரந்துள்ளன. மொத்த நெல் ஆலைகளில் 80 வீதமானவை பாரம்பரிய ஆலைகளே. நெல்லை அரிசியாக மாற்றும் ஒரு சிறுபதனிடல் முயற்சியை மேற்கொள்ளும் இப்பாரம்பரிய ஆலைகள் அதிக தீமையையே விளைவிக்கின்றன.

**அவையாவன:**

அரிசி அதிகளவுக்கு உடைக்கப்படுகின்றது.

அரிசியில் அசுத்தங்கள் காணப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

தவிடு சரியாக நீக்கப்படுவதில்லை.

பெருமளவு புழுங்கல் அரிசியை மட்டுமே இவை அரைக்கின்றன.

ஆலையை இயக்கும் வலு நுகர்வில் சிக்கனம் இல்லை.

நவீன வகை ஆலைகள் மேற்படி குறைகளை நிவர்த்திக்கவல்லன. எனவே இங்கு நெல்லரைக்கும் ஆலைகள் நவீனமயப்படுத்துதல் அவசியமாகும். தமிழர் பாரம்பரியப் பிரதேசமாகிய வடகீழ் மாகாணத்தில் நெல் 202977 கெக்டர் பரப்பில் (2007) விளைவிக்கப்படுகின்றது. இது இலங்கையின் மொத்த நெல்விளைபரப்பில் 24.8 வீதமாகும். (மொத்தம் 100 எனில் 68 வீதம் கிழக்கு மாகாணம் 32 வீதம் வடமாகாணம்) இதனால் நெல்லரைக்கும் ஆலைகளை எவ்வகையிலே விரைவாக நவீன மயப்படுத்தலாம் என்பது பற்றி நாம் அதிக கவனமெடுத்தல் வேண்டும்.

அரிசியை எவ்வாறு அதிகலாபம் தரும் கைத்தொழில-ாக மாற்றலாம் என்பதற்கு "நெசில்ஸ்" உற்பத்திகளாக





வரும் நெஸ்டம் (நேளவரஅ) பாளின்(குழசடைநெ) ஆகிய குழந்தை உணவுப்பொருட்களே தகுந்த எடுத்துக்காட்டுகளாகும். மேற்படி உணவுப்பொருட்களில் இருகைப்பிடியளவான அரிசியோ, கோதுமையோ தான் மூலப்பொருளாக உள்ளது. அத்துடன் சில ஊட்டச்சத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் அதனைப் பெறுவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. இவ் அதிக மதிப்பை அப் பொருள் பெறுவதற்கு அது கைத்தொழில் மயப்படுத்தப்பட்டு பொதியிலடைக்கப்பட்டு சந்தைக்கு வருவதே காரணமாக அமைகின்றது. எனவே விவசாய உற்பத்திகளை கைத்தொழில் மயப்படுத்தும்போது நாம் அதிக வருமானம் பெறமுடியும்.

தெங்குத் தொழில் ஒப்பீட்டளவில் கைத்தொழில் மயமாக்கப்பட்டுள்ளதெனலாம். தேங்காய்த் துருவல், தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், மாஜரீன், வினாகிரி போன்ற உற்பத்திகளும், தும்புத் தொழில் பேன்ற தொழில் மயமாக்கப்பட்ட உற்பத்திகளும் தேசிய மட்டத்திலே ஓரளவு அபிவிருத்தியை எய்தியுள்ளன. ஆனால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இவை குறிப்பிடும்படியான அபிவிருத்தியை இன்னும் எட்டவில்லை.



தெங்குத்தொழில் அபிவிருத்தியானது கிராம மட்டங்களிலே இடம்பெறுவதால் அதிக பயனை விளைவிக்கத்தக்கவை. முக்கியமாக கிராம மட்டத்தில் பலருக்கு வேலை வாய்ப்புகளை அளிக்க முடியும். தெங்கு உற்பத்தியினைத் தொழில் மயப்படுத்துவதோடு அதனை நவீனமுறைக் கைத்தொழில் உற்பத்திகளாக மாற்றுதலும் அவசியமாகும்.

இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யத்தக்க இன்னோர் முக்கிய விவசாய அடிப்படையிலான தொழிற்றுறை சீனி உற்பத்தியாகும். கரும்பு, சில கிழங்கு வகைகள், பனை ஆகிய வளங்களிலிருந்து சீனி உற்பத்தி செய்யப்படலாம். இப்பிரதேசத்தில் காணப்படும் கந்தளாய், கல்லோயா கரும்புச்சீனி உற்பத்தியாலைகளை புனருத்தாரணம் செய்து உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. தேசிய மட்டத்தில் இறக்குமதியாகும் சீனியை இவ் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் குறைக்க முடியும். பொதுவாக வறண்ட வலயத்தில் கரும்புச் செய்கையினை நல்லமுறையில் மேற்கொள்ளக்கூடிய வசதிகள் உள்ளன. இப்பிரதேசங்களில் பாசன வசதிகள் அமைக்கப்பெற்றால் வருடம் முழுவதும் கரும்பு பயிரிடப்படலாம். அத்துடன் இப்பிரதேசத்தில் சீனி உற்பத்திக்கான பொருத்தமான கிழங்கு வகைகள் எவையென ஆராய்ந்து அறிந்து அவற்றினைப் பயிரிட்டு சீனி உற்பத்தியை அதி-கரிக்க முடியும். மேலும் இப்பிரதேசத்தின் முக்கிய பாரம்பரிய வளமான பனை வளத்தைச் சீனி உற்பத்திக்கு பயன்படுத்துவோமாயின் அதிக வருமானமும் வேலை வாய்ப்பும் ஏற்படுமென கருதுகின்றனர்.

பனஞ்சீனி உற்பத்தியானது அதிக உற்பத்திச் செலவை வேண்டுகின்றது. முக்கியமாக எரிபொருட் செலவே அதிகமாக உள்ளது. சூரிய சக்தியை பயன்படுத்துவதன் மூலம் இச்செல-வைக் குறைக்கமுடியுமாயின் உற்பத்திச் செலவு குறைத்து பனை வளத்திலிருந்து இலாப-கரமான முறையில் சீனியை உற்பத்தி செய்தல் சாத்தியமே. சீனி உற்பத்தியுடன் இணைவாக மதுபான உற்பத்தியும் அதிகரிக்கப்படலாம், குறிப்பாக ஏற்றுமதிக்கேற்ற தரத்தில் சாராய உற்பத்தியை அதிகரிக்கலாம். பனைவள அபிவிருத்திச் சபை போன்ற அமைப்புகளும், சமூக நலன் விரும்பிகள் சிலரும் பனைவள உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு அண்மைக்காலங்களில் அதிக முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டு வருகின்றனர். பனைவளத்திலிருந்து பல வகையான அழகுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

வளர்ந்து வரும் சுற்றுலா தொழில் வளரும் போது இவ்வாறான உற்பத்திகள் அதிக வருமானத்தை ஈட்டித் தருமென நம்பலாம்.

எமது பிரதேசத்தில் அதிகளவு அபிவிருத்தி வாய்ப்பைக் கொண்ட இன்னோர் தொழிற்றுறை விலங்கு வேளாண்மையாகும். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நல்ல முறையில் திட்டமிட்டு இவை மேற்கொள்ளப்படலாம். புல்லினங்களை வளர்த்து அதனை விலங்குகளுக்கு கொடுத்து பாலாக,

யாழ்ப்பாணக் குடாநாட்டி
புகையிலை, மிளகாய், வெ
காய்கறிகள், பழங்கள், தி
பெருமளவில் விளைவிக்கப்
உப உணவு உற்பத்தியில்
குடாநாட்டு விவசாயிகளே
எடுத்துக்காட்டாக இலங்கை
உட்பட்ட பரப்பளவில் 38 வீ
பரப்பளவில் 15 வீதமும
அடங்கு


இறைச்சியாகப் பெறுவதில் அதிக வருமானம் உண்டு. திணை வகைகளை கோழிகளுக்குக் கொடுத்து முட்டையாக, இறைச்சியாக நுகர்வதில் அதிக பயன் உண்டு. புல்லும் திணை வகைகளுமே மேற்படி உற்பத்திகளின் விவசாய மூலவளங்களாகும். ஆடு, எருமை,பன்றி,முயல், இறைச்சிக்கான மாடு போன்றனவும் நல்ல முறையிலே எமது பிரதேசங்களில் விரிவாக்கம் செய்யப்படலாம். கிராமம் ஒன்றில் மந்தை வளர்ப்பில் ஈடுபடும் ஒரு நவீன விவசாயி அதன்மூலம் பல நன்மைகளைப் பெறலாம். அவர் தனது வீட்டுத்

தேவைக்கான உயிர் வாயுவை (Biogas) உற்பத்தி செய்யலாம். பயிர்களுக்கு உரம் பெறலாம், பால், இறைச்சி பெறலாம். இப்படி ஒன்றுடன் ஒன்று இணைவாக அபிவிருத்தியுறத்தக்க வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமப் பண்ணைத்திட்ட விருத்தியின் மூலம் அதிக பயன்பெற முடியும்.

இதற்கு சிறந்த உதாரணமாக மன்னார் வவுனியா போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள தனி நபர் விவசாய பண்ணைகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவை ஒருங்கிணைக்கப்பட்ட விவசாய பண்ணைகளாக இயங்கிவருகின்றன. மேற்படி ஒருங்கிணைப்புப் பண்ணை அபிவிருத்தியானது பலருக்கு வழிகாட்ட வல்லது. விலங்கு வேளாண்மை எமது பிரதேசத்தில் இன்று வரை மிகவும் குறைந்த கவனிப்பையே பெற்றுள்ளது. இதனை ஒவ்வொரு கிராமமட்டத்திலும் அபிவிருத்தி செய்ய உழைத்தல் வேண்டும். வீட்டுக்கு ஒரு மாடு, சிறு கோழிப்பண்ணை, ஆடு என்பன வளர்க்க ஊக்கமளிக்கப்படுதல் வேண்டும். நல்ல தரமான இனங்களை அறிமுகம் செய்தல் வேண்டும். எமது கிராமங்களில் உள்ள வேலிகளை மதில்களாக மாற்றுவதை விடுத்து குழைதரக்கூடிய மரங்களை வேலிகளில் நாட்டி அதன்மூலம் விலங்கு வேளாண்மையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமங்களிலும் சுயநிறைவுப் பொருளாதார வளமுள்ள கிராமக் குடும்ப அலகுகளை ஏற்படுத்துவதற்கு இவை பெரிதும் உதவும்.

பால் உற்பத்தியை இன்னும் நவீன தொழிற்றுறை உற்பத்தியாக மாற்ற வேண்டுமாயின் அதனைப் புட்டிப்பால், பால்மா, பட்டர், சீஸ், ஐஸ்கிறீம், யோக்கட், போன்றனவாக மாற்றி உற்பத்தி செய்யலாம். இவை அதிக வருமானத்தை அளிக்கவல்ல உற்பத்திகளாகும். புல் வளர்ப்பில் இருந்து ஆரம்பமாகும் இத் தொழிற்றுறையின் விரிவாக்கமானது சந்தையின் விரிவுக்கேற்ப அதிக வருமானம் தரும் உற்பத்திகளாக வளர்ச்சி பெறத் தக்கவையாகும்.

# லுசேர்க்கும்
# ய நுட்பங்கள்




வடகீழ் மாகாணத்திலே 6.1 வீத நிலப்பரப்பைக் கொண்டதும், அப்பிரதேச மொத்தக்குடித்தொகையில் 36 வீதத்தை உள்ளடக்கியதுமான யாழ்ப்பாணக்குடாநாட்டுப் பகுதியே தோட்டச் செய்கை நன்கு வளர்ச்சியடைந்துள்ள பகுதியாக அமைந்துள்ளது. இப்பகுதியில் இலங்கையில் வேறு எப்பாகத்திலும் இல்லாதவாறு செறிந்தமுறைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இங்குள்ளோர் நவீ[illegible] விவசாயிகள் என கூறத்தக்கவர்கள். யாழ்ப்பாணக்குடாநாட்டு விவசாயிகளைப்போல் நாட்டின் வேறு எங்கும் மிக விரைவாக நவீன அம்சங்களை பின்பற்றும் விவசாயிகளைக் காண்பதரிது. பாரம்பரிய முறையை உடனடியாக விட்டு நவீனமுறையை பின்பற்றக் கூடிய மனப்பாங்கு இங்குள்ள பெரும்பாலான விவசாயிகளிடம் காணப்படுகின்றது. இதனால் நவீனத்துவ முறைகள் இங்கு புகுத்துதல் எளிதாகும்.

**லே உள்ள தோட்டங்களில்**
**ங்காயம், உருளைக்கிழங்கு,**
**ிணை வகைகள் என்பன**
**படுகின்றன. இலங்கையின்**
**கணிசமான பங்கினை யாழ்**
**உற்பத்தி செய்கின்றனர்.**
**யில் வெங்காயச் செய்கைக்கு**
**தமும், மிளகாய்ச் செய்கைப்**
**ம் யாழ் குடாநாட்டிற்குள்**
**கின்றது.**

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உள்ள தோட்டங்களில் புகையிலை, மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறிகள், பழங்கள், திணை வகைகள் என்பன பெருமளவில் விளைவிக்கப்படுகின்றன. இலங்கையின் உப உணவு உற்பத்தியில் கணிசமான பங்கினை யாழ் குடாநாட்டு விவசாயிகளே உற்பத்தி செய்கின்றனர். எடுத்துக்காட்டாக இலங்கையில் வெங்காயச் செய்கைக்கு உட்பட்ட பரப்பளவில் 38 வீதமும், மிளகாய்ச் செய்கைப் பரப்பளவில் 15 வீதமும் யாழ் குடாநாட்டிற்குள் அடங்குகின்றது. எனவே இவ் உற்பத்திகளை விவசாய அடிப்படையிலான கைத்தொழில் உற்பத்திகளாக விரிவாக்கம் செய்வது பற்றி நன்கு சிந்தித்து திட்டமிடதல் இம் மண்ணை நேசிக்கும் அனைவரினதும் கடமையாகும். எடுத்துக்காட்டாக புகையிலை மூலவளத்தைக் கொண்டு சுருட்டுக் கைத்தொழில் விரிவாக்கத்துடன் மாத்திரம் நின்றுவிடாது, அதனை நவீன முறையிலே சிகரெட் உற்பத்தியாக மாற்றி ஏற்றுமதி செய்ய முடியும். இதற்கான நவீன இயந்திரங்களைத் தருவித்து, சிகரெட், புகையிலை உற்பத்தியையும் ஊக்குவித்து விவசாய தொழிற்றுறை விரிவாக்கம் செய்யப்படலாம்.



இப் பிரதேச விவசாய உற்பத்தியில் குறிப்பாக யாழ்குடாநாட்டு உற்பத்தியில் உணவு பதனிடுதல் தொழிற்றுறை நல்ல பயனை நல்குமெனலாம். இவற்றில் முக்கியமாக பழங்கள் காய்கறிகளை பதனிடல், தகரத்தில‍டைத்தல், பொதிசெய்தல் என்பனவற்றின் விரிவாக்கம் பற்றி அதிகம் சிந்திக்கலாம். சில பருவ காலங்களிலேயே சில பழங்களும், காய்கறிகளும் அதிகம் விளைகின்றன. அக்காலத்தில் இவற்றின் உற்பத்திகள் அதிக நிரம்பலை ஏற்படுத்துகின்றன. இதனால் அவற்றின் கேள்வி குறைந்து பழங்கள், காய்கறிகள் பெருமளவு பழுதடையும் நிலையும் தோன்றுகின்றது. எனவே பழங்களையும் காய்கறிகளையும் பாதுகாப்பாக வைப்பதற்கும், நீண்ட நாட்களுக்கு இன்னோர் வழியில் காப்புச்செய்து வைத்து பயன்படுத்துவதற்கும் சிறப்பான சில தொழில்நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படலாம். அவற்றுள் சில பின்வருமாறு.

01.பாதுகாப்பாக நீண்டகாலம் வைத்திருக்கக் கூடிய களஞ்சியங்களை உருவாக்குதல். (மெழுகு பூசுதல் போன்ற நுட்பங்கள் மூலம் பாதுகாப்பளித்தல்)

02.உறையச் செய்வது அல்லது இரசாயனப் பாதுகாப்புச் செய்வது.(உ- ம்: பழங்கள், பழச்சாறு, பழக்கூழ் வடிவிலோ, பல்வேறு வகைப் பழம் பானங்களாக உருமாற்றியோ பாதுகாக்கலாம்)

03.ஊறவைக்கும் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துதல்.(ஊறுகாய்)

04.உலர்த்துவதன் மூலம் பாதுகாத்தல்.(வற்றல் போடுதல்)

மேற்படி பாதுகாப்புமுறைத் தொழில்நுட்பங்கள் பல்வேறு நாடுகளில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. அவற்றினைப் பின்பற்றி எமது பிரதேசத்திற்கு ஏற்றதான பொருத்தமான தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி உணவுபதனிடுதல் தொழிற்றுறையை விரிவாக்குதல் வேண்டும். எமது பிரதேசத்தில் பேணிப்பாதுகாத்து சந்தைப்படுத்தக்கூடிய பழங்களென மாம்பழம்,பலாப்பழம், தக்காளி, பப்பாசி, எலுமிச்சை, தோடை, முந்திரிகை, விளாம்பழம், வாழைப்பழம், அன்னாசி, பனம்பழம் என்பனவற்றை குறிப்பிடலாம். இவற்றை எவ்வழிகளில் பாதுகாத்தல் லாபகரமானது என்பதற்கு ஆய்வுகள் அவசியம். ஒவ்வொரு பழவகையின் பாதுகாப்புப் பற்றியும் தனித்தனி ஆய்வுகள் நிகழ்த்தப்படவேண்டும். பாதுகாத்து பயன்படுத்துவது லாபம் தரத்தக்கது என்பதை நிச்சயித்த பின்னரே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பழச்சாற்றினை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தொழிற்றுறை உற்பத்திகளில் பானங்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட பழச்சாறுகள், நெக்டர் போன்றன உடனடியாகப் புருகத்தக்கவையாகும். பழக்கூழினை அடிப்படையாகக் கொண்டவற்றில் ஜாம், ஜெலி, சட்னி, பழக்குழம்பு என்பனவும் முழுதாக அல்லது வெட்டப்பட்ட பழங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் தகரத்தில் அடைக்கப்பட்ட பழவகைகள், ஊறுகாய் வகைகள் என்பனவும் அடங்கும். எமது பிரதேசத்திலுள்ள பல கிராமங்களிலே சில பருவங்களின் போது பழங்கள், காய்கறிகள் பெருமளவில் உற்பத்தியாகின்றன. தேவைக்கதிகமான இப்பருவகால உற்பத்திகளின் பெரும் பங்கின வீணடிக்கப்படுகின்றன. பருவகால மற்ற காலங்களில் இவை அருமையாகவுள்ளதால் அதிக விலையாக உள்ளன. எனவே மேற்படி உற்பத்திகளின் நிரம்பலை ஒழுங்குபடுத்துவதற்கு, பாதுகாப்பு முறைகளை பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இதற்குப் பொருத்தமான, மலிவான பாதுகாப்புத் தொழில்நுட்ப முறைகளை விருத்தி செய்தல் அவசியம். இதற்கான பல ஆய்வுகளும், செய்திட்டங்களும் விரைவில் மேற்கொள்ளப்படுதல் நற்பலனை விளைவிக்கும் எனலாம்.

பொதுவாக எமது பிரதேச விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் அதே நேரத்தில், அவ் உற்பத்திகளை அதிக வருமானம் தரத்தக்கவையாக நவீனத்துவம் கொண்டவையாக மாற்றுவதற்கு விவசாய தொழிற்றுறை விரிவாக்கம் பற்றி நாம் அதிகம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஒரு நாடோ ஒரு பிரதேசமோ ஒரு கிராமமோ அபிவிருத்தியுறுவதற்கு மேற்படி அபிவிருத்திக்குரிய வழிமுறை சுருக்கமான தந்திரோபமாயமாகும். ஒரு விவசாய உற்பத்தியை சில செயன்முறைக்கு உட்படுத்தி வேறோர் உற்பத்தியாக அல்லது பலவாக மாற்றுதல், அவ் உற்பத்திகளை இன்னமும் சில செயன்முறைக்கு உட்படுத்தி இன்னும் பலவாக மாற்றுதல் போன்ற தொழில் நுட்ப நடவடிக்கைகளே விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கத்தின் பரிணாமமாகும்.

இதன் விளைவாக அதிக வருமானம் லாபம் கிடைப்பதோடு வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும். எனவே விவசாயப் பொருளாதார அடிப்படையை கொண்ட நம் பிரதேசமும் நாடும் எம் போன்ற நாடுகளும் விருத்தியுற மேற்படி அபிவிருத்தித் திறமுறையின்பால் அதிக அக்கறையும், ஆர்வமும் காட்ட வேண்டும்.

இரா.சிவசந்திரன்
(புவியியற் பேராசிரியர்)

தொடர் மின் வெட்டு:

# பிரதான நகரங்களில் குடிநீர் விநியோக சேவை பாதிப்பு

தலைநகர் உட்பட பிரதான நகரங்களில் நீடிக்கும் மின்வெட்டு காரணமாக நீர்இறைக்கும் நிலையங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவ தால் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்விடயத்தை கருத்திற் கொள்ளுமாறு இலங்கை மின்சார சபையிடம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது.

“வரட்சியான காலநிலையைவிட மின்வெட்டு தாக்கத்தை ஏற்படுததியுள்ளது. மின்சாரமின்றி நீர் இறை க்கும் இயந்திரங்களை இயக் குவது கடினமாகியுள்ளது. இது மிக பாரதூரமான விடயம். இது குறித்து இலங்கை மின்சார சபை யின் கவனத்துக்கு நாம்கொண்டு வந்துள்ளோம்“ என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் லால் பிரேம்நாத் தெரிவித்துள்ளார்.



இந்திய குடியரசு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தில் கொண்டாடப்பட்டது. இக் கொண்டாட்டத்தில் துணைத் தூதுவர் மகாலிங்கம் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். (படம்: தீவகம்)

372 குற்றவாளிகள் சிறைகளில் காத்திருப்பு:

# மரண தண்டனைகளை நிறைவேற்ற ஒரு வாரத்தில் அலுக்கோசுகள் நியமனம்

இன்னும் ஒரு வாரத்தில் “அலுக்கோசு” என்றழைக்கப்படும் தூக்குத் தண்டனை நிறைவேற றும் ஊழி யர்கள் நியமனம் செய்யவுள்ளதாக சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ. திசாநாயக்கா தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இலங்கையைப் பொறுத்தவரை மன்னர்காலம் முதல் பிரித்ததானியர் காலம் உட்பட பரம்பரை வழிவந்தவர்களே மேற்படி அலுகோசு பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர்.

நீண்டகாலமாக தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதை இடை நிறுத்தி வைத்திருந்ததன் காரணத்தால் ஏற்கனவே அப்பதவியில் இருந்தவர்கள் ஓய்வு பெற்றதன் பின் புதியவர்கள் நியமிக்கப்படவில்லை.

அண்மையில் கோரப்பட வர்ததமானி அறிவித்தலின்படி 80 பேர் இப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் இருவர் தகுதி அடிப்படையில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யபபட்டு ஒருவர் கண்டி போகம்பறை சிறைச்சாலைக்கும் மற்றவர் வெலிக்கடை சிறைச்சாலைக்கும் நியமனம் செய்யப்படவுள்ளனர். இன்னும் ஒருவார காலத்தில் இந்நியமனங்கள் வழங்கப்பட இருப்பதாக திசாநாயக்கா தெரிவித்தார்.

போகம்பறை மற்றும் வெலிகடைச் சிறைகளில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 844 பேர் மரணதண்டனைக்காகக் காத்திருக்கின்றனர். இவர்களில் 19 பேர் பெண்களாவர். இப்பெண்கள் 19 பேர் உட்பட மொத்தம் 453 பேர் மேன்முறையீடு செய்துள்ளனர். எனவே மேற்படி தொகைபோக மரணதண்டனை நிறைவேற்ற வேண்டியவர்கள் 372 பேர்மீதமாக இருப்பதாகவும் அதனைத் துரிதப்படுத்தும் விடயமாகவே அலுக்கோசுகள் விரைவில் நியமனம் செய்ய உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உபகரணங்கள் வழங்கல்

(தெல்லிப்பளை)

வட மாகாணத்தில் கடமையாற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறியின் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்சசியில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோரிடம் இருந்து விளையாட்டு உபகரணங்களை வட மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.அண்ணாதுரை பெற்றுக் கொண்டார்.

# யாழ். அருணோதயா கல்லூரி பழைய மாணவர் சங்க கூட்டம்

(அளவெட்டி)

அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க தாய்ச் சங்கத்தின் மாதாந்த கூட்டம் கடந்த 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கததின் தலைவரும் பாடசாலையின் அதிபருமான நா.கேதீஸ்வரன் தலமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பழைய மாணவர் .செல்லத்துரை சிவபாலன் கலநது கொண்டார்.

கல்லூரி அதிபர் கல்லூரியின் அண்மைக்கால வளர்ச்சிகளை சுட்டிக் காட்டியதுடன் கல்லூரியின் தேவைகள் தொடர்பாகவும் தனது வேண்டுகோள்களைத் தெரிவித்தார்.

# ஐக்கிய தேசிய கட்சிக்கு மேலும் ஒரு தடை உத்தரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

நுவரெலியா பிரதேச சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட தொழிலாளர் தேசிய சங்க உறுப்பினர் அமிர்தீன் அப்துல் அஸீஸ் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை பரிசீலித்த பின்னரே கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி எம்.வை .எம்.இசதீன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தனது கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்து தன்னை பதவி நீக்குவதற்கு ஐதேக தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் நடவடிக்கை எடுத்து வருவதாக அஸீஸ் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மனு விசாரணையின் பின் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு எதிர் வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை விவகாரம்:

# ஊழியர்களை புறக்கணித்து பட்டதாரி பயிலுநர்களை சேர்க்க வேண்டாம்

## பயிலுநர் மத்திய நிலையம் எதிர்ப்பு

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றாது பட்டதாரி பயிலுநர்களை மின்சார சபைக்கு கடமைகளில் ஈடுபடுத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு பட்டதாரிகள் பயிலுநர் மத்திய நிலையம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பட்டதாரிகள் பயிலுநர் மத்திய நிலையம் மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் என்பன இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.மின்சார சபை ஊழியர்கள் கோரிக்கைகளை முன்வைத்து பல போராட்டங்களை நடத்திய போதும் அவர்களுக்கு பொய் வாக்குறுதிகளே கிடைக்கப்பெற்றுள்ள தென அந்த அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறிருக்க அரச சேவையில் இணைத்துக் கொள் ளப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்களை மின்சார சபையில் கடமைகளுக்கு இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளமை அவர்களையும் பிரச்சினைக்குள் தள்ளுமென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சூரியனைச் சுற்றி செந்நிறத் துகள்?



கிழக்கு மாகாணத்தில் சூரியனைச் சுற்றி செந்நிறத் துகள்கள், ஒளிவட்டங்கள் தென்படுவதாக எழுந்த தகவலினால் நேற்றைய தினம் நாடெங்கிலும் பரபரப்பு ஏற்பட்டது. சூரியனை ஒளிப்படக் கருவி மூலம் வீடியோ எடுத்த போது இக்காட்சி தென்படுவதாக வெளியான தகவல்களையடுத்து பெருமளவானோர் வானத்தை நோக்கி அண்ணார்ந்து அவதானித்ததையும் தமது கையடக்க தொலைபேசி உள்ளிட்ட ஒளிப்பதிவு சாதனங்களை பயன்படுத்தி சூரியனை ஒளிப்படம் பிடித்ததையும் அவதானிக்க முடிந்தது.

# பணம் பறிக்கும் கும்பல் கவனம்

பொதுமக்களின் தொலை பேசிகளுக்கு தொடர்பை ஏற்படுத்தும் சிலர், பல்வேறு பல்தேசிய கம்பனிகளின் அலுவலகங்களிலி ருந்து தாம் உரையாடுவதாக தெரிவித்து பொதுமக்களை ஏமா ற்றியுள்ளதாக வங்கிய முகாமையாளர்கள் தெரிவித்தனர்.

வெளிநாட்டு பயணத் திற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதா கவும் அதற்கான முன் ஏற்பாட்டுக் காக சிறுதொகை பணத்தை வங்கியில்வைப்பிலி டுமாறும் அழைப்பை ஏற்படுத்துவோர் கோருவதால் மக்கள் பலர் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்பிலிட்டு ஏமாந்துள்ளதாக தெரிவிககப்படுகிறது.

கேளுங்கள்
“அரசியல் களம்”
யாழ் FM 92.2 மற்றும்
102 மீட்டர்களில்
சனி மாலை 4.30 மணிக்கு
நிகழ்த்துபவர்
சி.குமாரலிங்கம்.

# தேசியக் கல்வியல் கல்லூரிகளில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், வவுனியா தேசியக் கல்வியல் கல்லூரிகளில் கடந்த 2005 ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான “தேசிய டிப்ளோமா சானறிதழ்“ வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ். தேசியக் கல்வி யற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

யாழ்.கல்வியற் கல்லூரி பீடாதிபதி யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அ த ி த ் த ி ய ா க யா ழ் . ப ல் க லை க ் க ழ க துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சர்வதேச திருமண சேவை



உள்நாடு, வெளிநாடு, இந்து, கிறிஸ்தவர்கள் அனைத்து இனத்தவர்களில் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், SLAS, அனைத்து துறைசார்ந்த பட்டதாரிகள்,அரசு, தனியார்துறை, விவாகரத்தானவர்கள் முதற் கொண்டு அனைத்து மணமக்களின் விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும். விளம்பரத்துடன் நேரில் வருபவர்களுக்கு பதிவுக்கட்டணம் இலவசம். S.K. சிவகரன் [அமைப்பாளர்]
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
42/11, இராமலிங்கம் வீதி (பூங்கனி சோலை அருகில்),
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 0779694009:. 0771450599.
வவுனியா – 0244907956
Email Shivaalaya @ yahoo.com

# வானலை நாதம்

## யாழ். வானொலி நாடகப் பயிற்சிப் பட்டறை இறுதிநாள் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

வடபகுதி மாணவர்களுக்கு வானொலி நாடகம் சார் அறிவினை வளர்க்கும் நோக்குடன் வானொலி நாடகப் பயிற்சி பட்டறையொன்று இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தினால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடாத்தப் பட்டது.

வானொலி நாடக பயிற்சிப் பட்டறையில் மத்தியகல்லூரி, யாழ் ஒஸ்மானியா கல்லூரி, யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகியவற்றைச் சேர்ந்த 19 மாணவர்கள் கலந்து கொண்டு வானொலி நாடகம் பற்றிய அடிப்படைவிடயங்கள் அவற்றுக்கான பயிற்சிகள், வானொலி நாடக எழுத்துருவாக்கப் பயிற்சி, வானொலி நாடக உருவாக்கம் என்பவற்றை பற்றி ஆழமாக பயிற்சிகளை பெற்றுக் கொண்டுள்ளார்.

இப்பயிற்சி பட்டறையில் நிறைவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் மாணவன் பா. கவிராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.எ.எம். முபாரக் மூத்த வானொலி நாடகக் கலைஞர் லூக்கஸ் திருச்செல்வம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத் துறை பொறுப்பாசிரியர் எஸ்.ரி. குமரன் ஆகியோர் ஆற்றிய உரையின் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன்.

"வடபகுதி மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட வானொலி நாடகப் பயிற்சிப்பட்டறையானது பயனுள்ள வகையில் அமைகின்றது. எங்களுடைய மாணவர்களுக்கு நீண்டகாலத்தின் பிற்பாடு கிடைக்கப்பெற்ற அனுபவமாக இதனை கருதுகின்றோம். 1983ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் எமது மாணவர்களுக்கு கிடைத்தது பிற்பட்ட காலங்களில் சில காரணங்களினால் அத்தகைய வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருந்தன. கொழும்பிலிருந்து வருகை தந்து ஒலிப்பதிவு செய்கின்ற வளங்களை பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களையும் இழந்துள்ளோம்.

தற்பொழுது இவ் வானொலி பயிற்சி பட்டறையானது மாணவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாக கருதுகின்றேன். பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களை விரட்டியடித்து பயிற்சி கொடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. மாணவர்கள் மிகவும் ஆர்வமுடையவர்களாக இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டனர். அவர்களை ஒவ்வொரு நாளும் சந்திக்கின்றபோது மகிழ்வோடு தாம் கலந்து கொள்வதாக கூறினாள்.

மிகச்சிறப்பான திறமையும் ஆர்வமும் பொருந்திய மாணவர்களை தெரிவு செய்து பயிற்சி கொடுதமையையிட்டு சந்தோஷமடைகின்றேன். கடமைக்கான நிகழ்வாக அமையாது. ஆர்வத்தோடும் நல்ல உறவோடும் அமைந்த நிகழ்வாக நடந்தேறியமை மகிழ்ச்சிக்குரியது. நிச்சயமாக இதன் தொடர்ச்சியூடாக மாணவர்கள் வானொலி நாடகத்துறையில் சிறந்தவர்களாக வளர்ச்சியடைவார்கள். இதுபோன்ற வாய்ப்புகள் வடபகுதி மாணவர்களுக்கு கிடைக்க வேண்டும். அவர்களுடைய ஆக்கங்கள் அரங்கேற்றப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். அவ்வகையில் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட வானொலி நாடக பயிற்சிப் பட்டறை நிகழ்வானது மிகவும் பயனுடைய ஒன்றாக அமைகின்றது.

யாழ். ஒஸ்மானியா கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக்

"வானொலி நாடகத்திற்கான இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தின் செயற்றிட்டமானது வரலாற்றில் பதியப்பட வேண்டியதொன்றாகும். ஊடகவியலாளர் மன்றத்தின் பணிப்பாளர் எம்.சி. ரஸ்மின் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் காத்திரமான செயற்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

உண்மையில் இவ்வாறான பன்மைத்துவ விழுமியங்களுக்கான வானொலி நாடகப் பயிற்சி பட்டறையானது நாட்டில் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமையும் என கருதுகின்றேன். மூன்று பாடசாலைகளிலிருந்தும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்று கூடியிருக்கிறார்கள். ஒரே மொழியைப் பேசுகின்றோம் மதரீதியாக எமது செயற்பாட்டை வேறுபடுத்தி பார்க்கின்றோம்.

ஒரே மொழியைப் பேசும் நாம் மத ரீதியாக வேறுபடுகின்ற போதிலும் மனிதர்கள் என்ற வகையில் ஒன்றாகச் சேர வேண்டிய தேவையுள்ளது. மனிதத்துவம் என்ற வகையில் நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து வாழ வேண்டிய தேவையும் ஒத்துப்போக வேண்டிய விட்டுக் கொடுத்து போக வேண்டிய தேவையும் இருக்கின்றது. இவ்விரண்டும் கடந்த காலங்களில் இல்லாமையினாலேயே பல துன்பங்களிற்கு முகம் கொடுக்க நேர்ந்தது. கடந்த காலத்தில் அவ்வாறான புறச்சூழல் இல்லாத காரணத்தினால்தான் இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவையெல்லாம் கனவாக நினைத்து எதிர்காலத்தில் நாம் எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்ற வகையில் வாழ்வதற்கு இத்தகைய பன்மைத்துவ கலாசார விழுமியங்களை கட்டி வளர்க்கும் வானொலி நாடக செயற்றிட்டமானது உதவும் என நம்புகிறேன்.

இச் செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்த இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நாடகப் பிரிவிற்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறான வானொலி நாடக பயிற்சிகள் சிறந்த பிரஜைகளை உருவாக்க உதவுவது மட்டுமின்றி எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து வாழ்வதற்கும் இவ்வாறான பயிற்சிகள் உதவும்.

வானொலி நாடகக் கலைஞர் லூக்கஸ் திருச்செல்வம்

வானொலி நாடகத்துறையில் மாணவர்களது ஊக்கம் உற்சாகம், திறமைகளைப் பார்க்கும் போது சந்தோசமாக இருக்கின்றது. இப்பயிற்சியில் மாணவர்கள் எவ்வித வேறுபாடுகளும் இன்றி செயற்பட்டார்கள். முன்பு இவ்வாறானதொரு நிலையிலேயே நாம் வாழ்ந்தோம். இடையில் அவை இல்லாமல் போய்விட்டன.

மீண்டும் அந்த ஒற்றுமை உருவாகியுள்ளது. இதன்மூலமாக எதிர்காலங்களிலும் பல கலைஞர்கள் உருவாகுவதற்கு வாய்ப்பு உள்ளது. இதிலிருந்து பல வானொலி நாடகக் கலைஞர்களும் தோன்ற வேண்டும். உங்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு பலர் ஆர்வமாக இருக்கின்றார்கள். இதனை சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் எதிர்காலத்தில் நிச்சயமாக நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

திறமைகள் இனங்கண்டு கொள்ள வேண்டும். எழுத்துத் திறமை, நடிப்புத்திறமை போன்றவற்றை மேலும் வளர்த்துச் செல்ல வேண்டும். பயிற்சிப் பட்டறையுடன் இதனை முடித்துக் கொள்ளாது உங்களுக்கிடையில் குழுக்களாக இயங்கி நீங்களாகவே பல வானொலி தயாரிப்புக்களை உருவாக்க முயல வேண்டும்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி நாடகத்துறை பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரன்

இலங்கையில் ஏற்பட்ட முரண்பாடான சூழ்நிலைக்கு பிற்பாடு தோன்றிய சமாதான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இலங்கையிலுள்ள இனங்களுக்கிடையில் தொடர்பாடல் புரிந்துணர்வுடன் வாழ வேண்டிய தேவை கட்டாயமாகவுள்ளது. இந்த சூழ்நிலையில் பன்மைத்துவ கலாசாரம் என்ற அடிப்படை யிலான வானொலி நாடகப் பயிற்சி பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டமையானது வரவேற்கப்பட வேண்டிய விடயமாக விளங்குகின்றது.

எங்களுடைய நாட்டில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். தொடர்பாடல் சரியான முறையில் புரிந்துணர்வுடன் அமைக்கப்படும் போது நாங்கள் வளமான எதிர்காலம் உள்ள நாட்டை கட்டி எழுப்பமுடியும். இவ் வானொலி நாடக பயிற்சிப்பட்டறையில் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

வானொலி நாடகப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்கள் ஒற்றுமையாகவும் அன்புறுவுடனும் தங்களுக்குள்ளே விட்டுக் கொழுப்பு மனப்பாங்கோடும் சந்தோஷமாக கலந்து கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் பயிற்சிப் பட்டறையின் ஊடாக எமது மாணவர்கள் வானொலி நாடகம் சார் அடிப்படையான விடயங்களையும் அதற்கான நுட்பங்களையும் தெளிவாக கற்றுக் கொண்டுள்ளார்கள். வானொலி நாடகமானது எங்களுடைய நாட்டைப் பொறுத்த வரையில் வளர்ச்சியடைந்த துறையாக மட்டுமன்றி நாட்டிற்குரிய சொத்தாகவும் விளங்குகின்றது. இலங்கையில் வானொலி நாடகத்துறையின் வளர்ச்சியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் முன்னிலை பெறுகின்றது.

இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் உதவியுடன் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தினரால் நடத்தப்பட்ட வானொலி நாடக பயிற்சி பட்டறையில் எமது மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றமையானது அதி உச்ச வரப்பிரசாதமாக அமைகின்றது.

வெளியகத் தொடர்பு மறுக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண சூழலில் புதிய விடயங்களை அறிய முடியாது இருந்த மாணவர்களுக்கு இத்தகைய பயிற்சிப்பட்டறை ஊடாக புதிய விடயங்களை சிந்திக்க வைத்திருக் கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் எமக்காக இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது வரவேற்க வேண்டிய ஒன்றாக விளங்குகின்றது.

பயிற்சிப்பட்டறையானது மாணவர்களுக்கு மிகமிகப் பயனுள்ள வகையிலே அவர்களது கல்வியோடு இணைந்ததாக எதிர்காலத்தை திட்டமிடுகின்ற செயற்பாடாக அமைந்திருப்பதுடன் காத்திரமான பங்களிப்பை வழங்கும் எனவும் கருதுகின்றேன்."

**தொகுப்பு**
**எஸ்.ரி.குமரன்**

## கலாரசனையும் ஒலிபரப்புத் துறையும்

**வா**னொலி அல்லது ஒலிபரப்பு இன்றைய உலகில் ஒரு பக்குவம் பெற்ற கலைச் சாதனமாகிவிட்டது. சாதாரணமாக மற்றைய சாதனங்களால் வெளிப்படுத்தும் கலையுருவங்களை ஒலி வடிவால் மாத்திரம் - அதுவும் வானொலி மூலம் வெளிப்படுத்துவதற்கு ஒரு பிரத்தியேக கலை உணர்ச்சியும், விசேட பயிற்சியும் அனுபவமும் தேவை. ஒலிபரப்பு நிர்வாகிகளாக இருந்தாலும் சரி, ஒலிபரப்பும் பேச்சாளர், பாடகர், நடிகராக இருந்தாலும் சரி கலாரசனையைப் பற்றி பூரணமாக அறிந்திருத்தல் வேண்டும். எந்த நிகழ்ச்சியை ஒலிபரப்பினாலும் அதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, அந்த நிகழ்ச்சியில் நாம் காணும் பண்பல்ல, அதனைக் கேட்கும் நேயர்களிடத்தில் அது எத்தகைய உணர்ச்சியை, எத்தகைய அனுபவத்தை ஏற்படுத்துகிறது என்பதை ஏற்கனவே ஊகித்துக் கொள்வதுதான்.


வானொலி ஒலிபரப்பு, செவிப்புலன் நுகர்ச்சி என்பதை கவனத்தில் வைத்துக் கொண்டால்தான் சிறந்த நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும், அவற்றை அழகாக ஒலிபரப்பவும் வழிகளைக் கண்டுபிடிக்க முடியும். பேச்சு, நாடகம், இசை எல்லாம் வானொலிக்கு மூலப் பொருள்கள். இவற்றை கலை நிகழ்சிகளாக உருவங் கொடுத்து சிருஷ்டித்து வழங்குபவர்கள் நிலைய நிர்வாகிகள். கேட்டு ரசிக்க வேண்டியவர்கள் நிலைய நிர்வாகிகள். கேட்டு ரசிக்க வேண்டியவர்கள் பொது ஜனங்களாகிய நேயர்கள். அந்த நேயர்கள் உள்ளத்தில் கற்பனையைத் தூண்டி, அழகுச் சுவையை எழுப்பி, ரசானுபவத்தைப் பிறப்பிக்கும் நிகழ்ச்சியாக இருந்தால்தான் அந்த நிகழ்ச்சியில் கலைப்பண்பு இருக்கிறது என்று கருதமுடியும். அதுவே ஒலிபரப்புக் கலையின் நோக்கமும் பயனும். ஏதாவது ஒரு நிகழ்ச்சியை சிருஷ்டிப்பது சுலபம். ஆனால் ரசானுபவத்தை விளைவிக்கும் நிகழ்ச்சியாக சிருஷ்டிப்பதுதான் கடினம். அது கலையம்சம் தெரிந்தவர்களது கையாலேயே முடியவல்லது. அது மாத்திரம் போதாது. ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சி நேயர்களிடத்தில் எத்தகைய விளைவைத் தூண்டவல்லது என்பதையும் உணரக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். நிகழ்ச்சியைக் கேட்டும் நேயர்கள்தான் நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கு உரைகல்.

**சோ.சிவபாதசுந்தரம்**
**("ஒலிபரப்புக்கலை"நூலிலிருந்து)**

நாட்டுப்புறம் பூராவும் அந்த வருடத்திலே ஒரு புரட்சி மனப்பான்மை பரவியிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். இதுவரை அடக்கமாக இருந்த எருதுகள் திடுதிப்பென்று கட்டுக்கடங்காமல் முரண்டிக்கொண்டு கிளம்பின. காட்டு விலங்குகள் போலத் துள்ளிவிழுந்தன. ஆடுகள் வேலிகளை முறித்துக்கொண்டு வெளியேறி க்ளோவர் வயல்களை அளித்தன.

வாளியில் கறந்த பாலை உதைத்துக் கவிழ்த்தன பசுக்கள். வேட்டைக்காரர்களைச் சுமந்து சென்ற குதிரைகள் வேலிகளைத் தாண்ட மறுத்தன. முதுகில் உட்கார்ந்தவர்களை வேலிக்கப்பால் தூக்கி எறிய முயன்றன. இதெல்லாவற்றிற்கும் மேலாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால் இங்கிலாந்தின் விலங்குகள் என்கிற பாட்டின் மெட்டும் வார்த்தைகளில் பலவும் எங்கும் பரவியிருந்தன.

இதெல்லாம் கேலிக்கிடமான விஷயம் என்று எண்ணியவர்கள்





போலவே மனிதர்கள் நடந்துகொண்டார்கள். எனினும் இநதப் பாட்டைக் கேட்கும்போதெல்லாம் அவர்களுக்குச் சினம் பொங்கி, அடக்கமுடியாததாயிற்று. அலட்சியம் செய்வதாக அவர்கள் பாசாங்கு செய்தார்கள். எனினும் தங்கள் காதில் விழும்படியாக இந்தப் பாட்டைப் பாடிய விலங்குகளை அந்த இடத்திலேயே சவுக்கெடுத்து நன்றாக அடித்தார்கள்.


"மிருகங்கள்தான் என்றாலும் இவை இவ்வளவு மட்டமான, அருவருக் கத்தக்க பாட்டை எப்படிப் பாடத் துணிந்தன என்பது எங்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது" என்றார்கள் அவர்கள். ஆனால் என்ன சொல்ல, என்ன செய்தால் என்ன? அந்தப் பாட்டு அடங்குவதாக இல்லை. அடக்கமுடியாத கீதமாகத்தான் அது எங்கும் ஒலித்தது. கருங்குருவிகள் வேலிகளில் உட்காந்துகொண்டு இந்தப் பாட்டைப் பாடின. மரங்களின் உச்சிகளிலிருந்து புறாக்கள் இந்தப் பாட்டைப் பாடின.

சுத்திகளின் ஒலியிலே, ஆலய மணிகளின் ஒலியிலே கூட இந்தப் பாட்டு ஒலிப்பது போல இருந்தது. இந்தப் பாட்டைக் காது கொடுத்துக் கேட்க நேர்ந்த மனிதர்கள் நடுங்கினார்க்ள. தங்கள் எதிர் காலத்தின் விதியை இந்தப் பாட்டு நிர்ணயிக்கிறது என்று எண்ணிப் பயந்தார்கள் அவர்கள். அக்டோபர் மாதத்தின் ஆரம்ப நாட்களில் தானியக் கதிர்களை எல்லாம் அறுத்துக் கட்டுக் கட்டிப் போட்டாகிவிட்டது. சில கட்டுகளை அடிக்கவும் அடித்தாகிவிட்டது. அந்தச் சமயம் புறாக்கள் பல பறந்துவந்து பதட்டத்துடன் விலங்குப் பண்ணையின் முற்றத்தில் உட்கார்ந்தன.

(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!






## கரப்பான் பூச்சி

இந்த நீர்சூழ்வியனுலகில், இயற்கையின் படைப்புக்களான ஆயிரக்கணக்கான ஜீவராசிகளிலே, வெறும் முப்பது ஜீவராசிகள் மாத்திரமே நமது வீடுகளிலோ, அதன் சுற்றுப்புறங்களிலோ வசித்து வருகின்றனவாம். ஒன்றிலிருந்து ஒன்றரையங்குல நீளமுள்ள இந்தக் கரப்பான் பூச்சி மட்டுமே எங்கும் இருக்கின்றன. புல்பூண்டு முளைக்காத இடத்திலும் கரப்பான்பூச்சி வாழ்கின்றனவாம்.

கரப்பான் பூச்சிகள் எதையும் உண்ணக் கூடிய அனைத்துண்ணிகள் ஆகும். ஹீமோகுளோபின் இல்லாததால் இவற்றின் குருதி வெண்ணிறமாக இருக்கும். கரப்பான் பூச்சிகளின் நரம்பு மண்டலம் எளிமையானது. உடல் பலபகுதிகளாகப்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் அதைக்கட்டுப்படுத்தும் நரம்பணுத்திரள்கள் உள்ளன. எனவே தலையை வெட்டிவிட்டால் கூட கரப்பான் பூச்சிகள் இரண்டு வாரத்திற்கு உயிர்வாழும்.

## திமிங்கிலம்



திமிங்கிலம் நீரில் வாழும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இதன் ஒரு வகையான நீலத் திமிங்கிலமே உலகின் மிகப்பெரிய பாலூட்டி என்று கருதப்படுகிறது. திமிங்கிலங்கள் வெப்ப இரத்தப் பிராணிகளாகும். இவை நுரையீரல் மூலமே மூச்சுவிடுகின்றன. இவை வெப்ப இரத்த விலங்குகள். திமிங்கிலங் களில் 75 வகைகள் உள்ளன. உலகிலுள்ள உயிரினங்களுள் மிகப்பெரியதாக வளரக்கூடிய இனம் நீலத் திமிங்கிலம் ஆகும். இது சற்றேறக்குறைய 100 அடி நீளமும் 150 தொன் எடையுள்ளதாகவும் வளரக்கூடியது. நீலத் திமிங்கிலத்தின் நாக்கில் 50 பேர் உட்காரக்கூடிய அளவு இடமிருக்கும். இத்தகைய திமிங்கிலத்திடம் மூர்க்கமான குணங்கள் கிடையாது. இவை மிகவும் சாதுவானவை ஆகும்.

திமிங்கிலங்கள் நீரில் நீந்துவதற்கு ஏதுவாக தம் உடலமைப்பை இருபுறமும் கூர்மையாக மீன் போல தகவமைத்துக் கொண்டுள்ளன. தம் குட்டிகளுக்கு முலைப்பால் ஊட்டுகின்றன. உடலில் கொஞ்சம் மயிரினைக் கொண்டுள்ளன. இவற்றின் தோலின் உட்புறம் ஒரு கொழுப்பு அடுக்கினைக் கொண்டுள்ளன. இது திமிங்கிலங்களுக்கு உடல் வெப்பத்தைத் தக்க வைக்க உதவுகிறது. இவற்றுக்கும் மனிதனைப் போன்றே இதயத்தில் நான்கு அறைகள் உள்ளன. திமிங்கிலங்களின் தலைப்பகுதியில் குழாய் போன்ற மேல் நோக்கிய துளை ஒன்று உள்ளது. இவை இத்துளைகளின் வழியாகவே சுவாசிக்கின்றன.

### குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

### பெற்றதும் நீ விட்டுப் பிரிந்தது ஏன்?



பத்து மாதம்
சுமந்து பெற்றெடுத்த
அன்னையே
காலனவன் வருகையிலே
காலடியில் நான் தவள
சுனாமி எனும் பேரலையால்
எனை விட்டு
மூழ்கிச் சென்றாயே!

ச.வினுஷன்
தரம்-06, யா/உடுத்துறை ம.வி.

### விடுகதைகள்




1.தலையை சீவினால், தாளிலே நடப்பான். அவன் யார்?

2.உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவான். அவன் யார்?

3.தொப்பென்று விழுந்தான் தொப்பி கழண்டான். அவன் யார்?

4.கல் வீட்டுத் தாத்தா மெதுவாக நடப்பார். அவன் யார்?

1.பென்சில் 2.தராசு
3.பனம்பழம் 4.ஆமை

தொகுப்பு: ச.வினுஷன், தரம்-06, யா/உடுத்துறை மகா வித்தியாலயம்

சுடோக்கு எண் 30 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 3 | 9 | 7 | 1 | 5 | 4 | 6 |
| 5 | 6 | 9 | 2 | 4 | 8 | 1 | 7 | 3 |
| 1 | 7 | 4 | 5 | 3 | 6 | 9 | 2 | 8 |
| 3 | 4 | 2 | 7 | 1 | 5 | 6 | 8 | 9 |
| 6 | 8 | 1 | 4 | 9 | 2 | 7 | 3 | 5 |
| 7 | 9 | 5 | 8 | 6 | 3 | 2 | 1 | 4 |
| 2 | 1 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 | 7 |
| 9 | 3 | 6 | 1 | 8 | 7 | 4 | 5 | 2 |
| 4 | 5 | 7 | 3 | 2 | 9 | 8 | 6 | 1 |

சுடோக்கு எண் 31

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 9 | | | | 7 | 3 | |
| | 3 | 7 | | 1 | 9 | | | |
| | 1 | | 4 | | | | 9 | |
| | 2 | | | | | | | |
| | | | 3 | 5 | 2 | | | |
| | | | | | | | 6 | |
| | 8 | | | | 1 | | 7 | |
| | | | 9 | 7 | | 2 | 5 | |
| | 7 | 5 | | | | 3 | | 4 |

# சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகம்

பதினெட்டு வயதிற்குக் குறைந்த ஆண், பெண் இருபாலாரும் சிறுவர் என்று அழைக்கப்படுகின்றனர். Paedo என்பதற்குக் குழந்தை அல்லது சிறுவர் என ஆங்கில அகராதி பொருள் தருகின்றது. Paedophilia என்பது குழந்தைகளின் மீது பாலியல் ரீதியாக ஏற்படும் கவர்ச்சியாகும். இவ்வாறு குழந்தைகளின் மீது பாலியல் உணர்வு கொண்டு நடப்பவர்கள் Paedophile என அழைக்கப்படுகின்றனர். Paedophilia என்பது Paraphilia என்னும் வகையைச் சார்ந்ததாகும். இதன் அர்த்தம் இயற்கைக்கு முரணான பாலியல் கவர்ச்சி என்பதாகும்.

இலங்கையைப் பொறுத்த வரை நீர்கொழும்பு, பெந்தோட்டை, ஹிக்கடுவை போன்ற கடற்கரைப் பிரதேசங்களில் சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகங்கள் அதிகளவில் இடம்பெறுவதாக ஆய்வுகள் தெரிவித்தாலும் அண்மைக்காலங்களில் எமது தமிழ் சமுதாயத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இந்நிலை அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

**சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகம் என்றால் என்ன?**

அதிகாரத்திலுள்ள ஒருவர் தனது அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்து, சிறுவரைத் தந்திரமாக ஏமாற்றி அல்லது கட்டாயப்படுத்தி ஒரு சிறுவனையோ, சிறுமியையோ பாலியல் ரீதியான உறவுக்கு உட்படுத்தல் பாலியல் துர்ப்பிரயோகம் எனப்படும்.

ஒரு நபரொருவர் தொடுகை மூலமோ அல்லது தொடுகை இல்லா முறையிலோ, சிறுவர் ஒருவரை அவரது விருப்பத்துடனோ, அன்றி விருப்பம் இல்லாமலோ எந்தவொரு பாலியல் செயற்பாட்டிலும் ஈடுபடுத்தல் சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகமாகவே கருதப்படும்.

**பாலியல் துர்ப்பிரயோகத்தின் முறைகள்**

**1. தொடுகை இல்லாத முறைகள்**

பாலியல் துர்ப்பிரயோகமானது தொடுகை அல்லாத வகையில் பின்வரும் முறைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

* தங்களுடைய பாலுணர்வைத் தூண்டலடையச் செய்வதற்காக துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர், தமது பாலுறுப்புகளை நிர்வாணமாக்கி சிறுவர்களுக்கு காட்டுதல்.

* சிறுவர்களின் பாலுறுப்புகளை அவர்களாகவே நிர்வாணமாக்கி காட்டுவதற்கு தூண்டுதல்

* சிறுவர்களை நிர்வாணமாக்கி அவர்களை பல்வேறுபட்ட பாலியல் நிலைகளில் நிற்க வைத்துப் படம் எடுத்தல்

* சிறுவர்கள் குளியலறையில் குளிக்கும்போதும், உடை மாற்றும் போதும் ஒளிந்திருந்து பார்த்தல்.

* சிறுவரின் பாலுறுப்புகள் பற்றியும், பாலியல் சம்பந்தமான கருத்துக்கள் பற்றியும் மறைமுகமாகவோ நேரடியாகவோ கூறுதல்

* ஆபாசப் படங்களை (வீடியோக்கள், புகைப்படங்கள்) சிறுவர்களுக்குக் காட்டுதலும் அவை சம்பந்தமாக கலந்துரையாடலை மேற்கொள்ளுதலும்.

**தொடுகை மூலமான முறைகள்**

* சிறுவரின் பாலியல் உறுப்புகள், குதம், மார்பு போன்றவற்றை பாலியல் சிந்தனையுடன் தொடுதல்

* சிறுவரைப் பாலியல் ரீதியாக உதடுகளிலும் பாலுறுப்புகளிலும் முத்தமிடுதல்

* துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர் தனது பாலுறுப்புகள், குதம், மார்பு போன்றவற்றை சிறுவர்களைத் தொடச் செய்து உணர்ச்சிகளைத் தூண்டச் செய்தல்.

* துர்ப்பிரயோகி தன்து விரல்களை, பாலுறுப்பை அல்லது ஏதேனும் உபகரணத்தை சிறுவரின் வாய், குதம், பாலுறுப்பு என்பவற்றில் செலுத்தி சிறுவரின் பாலியல் உணர்வைத் தூண்டுதல் அல்லது சிறுவரைத் தனக்கு அவ்வாறு தூண்டும்படி செய்தல்.

* துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர், சிறுவரைத் தொடுதல், உரசுதல், தடவுதல், முத்தமிடல், கட்டியணைத்தல் அல்லது மடியில் வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

* சிறுவரோடு புணர்ச்சியில் ஈடுபடுவதற்கு முயற்சி செய்தல் அல்லது உடலுறவு கொள்ளுதல்.

பாலியல் துர்ப்பிரயோகத்தில் ஈடுபடும் நபர்கள் (யுடிரளநச) சிறுவரை தம்மோடு அணைத்துக் கொண்டு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ சுய இன்பத்தில் ஈடுபடுவார்கள். இவர்களில் சிலர் சிறுவர்களது பாலுறுப்புகளைக் கையாண்டு மகிழ்ந்து அவர்களுடைய தொடைகளினிடையே விந்தினை வெளியேற்றுவர். இன்னும் சிலர் குதவழிப் புணர்ச்சியில் ஈடுபடுவார்கள். வேறு சிலர் தமது ஆணுறுப்புகளை சிறுவர்களைக் கையாள வைத்து எழுச்சியடைந்து இன்பமடைவர். தம்முடைய அதிகாரத்தைப் பாவித்து சிறுவனை அல்லது சிறுமியை பாலி யற் தேவைகளுக்குப் பயன்படுத்துவர்.

சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகத்தில் பெரும்பாலும் ஆண்களே ஈடுபடுகின்றனர். கட்டிளம் பருவத்தினர் தொடக்கம் 70 வயது வரையானோர் வரை இதில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலான சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகங்கள் அவர்களுக்கு அறிமுகமானவர்களாலேயே மேற்கொள்ளப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக இவை நெருங்கிய உறவினர்களாலேயே முறையில்லாப் புணர்ச்சியாக (Incest) இட்ம்பெற்றிருக்கின்றன. சொந்தத் தந்தை, மாமா, சித்தப்பா, தாத்தா போன்ற உறவுகளால் பல பாலியல் துர்ப்பிரயோக சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன. சிறுவர் இல்லங்கள், அகதி முகாம்கள், கல்வி நிறுவனங்கள், தெரு ஓரங்கள் போன்ற பல்வேறுபட்ட இடங்களிலும் சிறுவர் பாலியல் துர்பிபரயோகங்கள் நடைபெறுகின்றன. சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர் மனநலம் குன்றிய சிறுவர்கள், மாற்று வலுவுள்ள குழந்தைகள் போன்றவர்களையும் விட்டு வைப்பதில்லை. இவர்கள் தமக்கு நிகழ்பவற்றை வெளியில் சொல்ல மாட்டார்கள் என்ற துணிவில் இவர்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.



**சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கான காரணங்கள்**

**1. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளி அதிகரித்தமை**

இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகளுடன் பெற்றோர் அதிக நேரத்தை செலவிடுவதில்லை. தங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடி பிள்கைளின் தேவைகள் என்ன, அவர்களின் பிரச்சினைகள் என்ன என்று கேட்டறிந்து அதற்கேற்ப செயற்படுவதில்லை. பிள்ளைகளும் தங்களின் தேவைகள் என்ன, விருப்பங்கள் என்ன, பிரச்சினைகள் என்ன என்பதை வெளிப்படுத்துவதில்லை. குறிப்பாக பாலியல் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். பெற்றோரும் இத்தகைய விடயங்களை பிள்ளைகளுடன் கதைப்பதற்கு தயாராக இல்லை. இன்றும் பாலியல் சார்ந்த விடயங்கள் மறைபொருளாகவும், சோப் பொருளாகவும் காணப்படுகின்றன. இதன் காரணமாக பல சிறுவர்கள் தாம் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதை அறியாமலே அதற்கு ஆளாகிக்கொண்டிருக்கின்றனர்.

பிள்ளைகள் குறித்து பெற்றோர் அதிக அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டும். சிறுவர் தொடர்பாக பணியாற்றுகின்ற பல்வேறுபட்ட அரச அதிகாரிகள் இருந்தாலும் ஒரு பிள்ளையின் போலித்தனமற்ற உண்மையான ஒரேஒரு பாதுகாவலர் பெற்றோர் மட்டுமே.

**2. பிள்ளைகள் தனிமையில் இருத்தல்**

பெற்றோர் தம் வேலையின் பொருட்டு வீட்டை விட்டுச் சென்றாலும் பிள்ளைகளைத் தனிமையில் விடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் பல பாலியல் துர்ப்பிரயோகச் சம்பவங்கள் பிள்ளைகள் தனிமையில் இருக்கும் போதே மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற. பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்ப வேண்டும். பாடசாலைக்குச் செல்லாமல் தனிமையில் வீட்டில் இருக்கும் போதும் பாலியல் துர்ப்பிரயோகங்கள் இடம்பெற்றிருக்கின்றன. முன்பு இருந்த வாழ்க்கை முறையில் பெற்றோருக்கு அப்பால் பிள்ளைகளை பாதுகாக்க, கண்காணிக்கவென பேரன் பேர்த்திமார், உறவினர்கள் என பலர் இருந்திருக்கிறார்கள். ஆனால் தற்போது அந்நிலை குறைவடைந்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.

சமூகத்தில் மதுபோதைப்பொருள் பாவனையின் அதிகரிப்பு, ஆபாச இணையத்தள பாவனையின் அதிகரிப்பு போன்றனவும் சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றமை காரணமாக இருக்கின்றது.

**பாலியல் துர்ப்பிரயோகத்தினால் ஏற்படும் பாதிப்புகள்**

பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களில் உடல் ரீதியாக, உள ரீதியாக, நடத்தை ரீதியாகப் பல்வேறுபட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன.

**1. உடல் ரீதியான பாதிப்புகள்**

* பாலுறுப்புகளில் (Genitals) காயம், கிழிவு என்பன ஏற்படல் (பெண்ணுறுப்பு கிழிவடைதல்)

* பாலுறுப்புகளில் இருந்து இரத்தம் வெளியேறுதல்

* மார்பு, வாய், உதடு, தொடை, புட்டம் என்பவற்றில் காயங்கள் காணப்படல்

* பாலுறுப்புக்களில் வலியுணர்வு, கடி போன்ற உணர்வுகள்

* சிறுநீர், மலம் கழித்தலில் சிரமங்கள் ஏற்படல்

* அடிக்கடி வயிற்றுக்குத்து, வாந்தி எடுத்தல் போன்ற அசௌகரியமான வெளிப்பாடுகள்

* உணவு உண்ண மறுத்தல்

* நித்திரைக் கோளாறுகள் ஏற்படல்

* உடலியல் ரீதியான பாதிப்புக்களின் பாரதூரமான விளைவாகக் கர்ப்பமடைதல், பாலியல் ரீதியான தொற்று நோய்களுக்கு உள்ளாதல் (Sexually Transmitted Disease- STDS) போன்றனவும் ஏற்படலாம்.

கு.கௌதமன்

(நாளை தொடரும்)



# உலக பார்வை


## அமெரிக்காவில் மீண்டும் துப்பாக்கி சூடு: பொலிஸ்அதிகாரி உட்பட 3 பேர் சுட்டுக் கொலை

அமெரிக்காவில் வீட்டை காலி செய்வதற்கான நோட்டீசை எடுத்து சென்ற கான்ஸ்டபிள் உள்பட 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகம் அருகே வசித்தவர் தாமஸ் கபால் (வயது 35).

இவர் சட்டவிரோதமாக தங்கி இருந்ததால், வீட்டை காலி செய்ய உத்தரவிடப்பட்டது. அதற்கான நோட்டீசை நேற்று முன்தினம் பிற்பகல் 12 மணிக்கு, கான்ஸ்டபிள் பிரையன் பச்மன் (வயது 41) என்பவர் எடுத்து சென்றார்.

அப்போது பிரையன் மீது தாமஸ் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில் ரத்த வெள்ளத்



தில் அவர் சரிந்தார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் கான்ஸ்டபிள் பரிதாபமாக இறந்தார்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டு உடன் வந்திருந்த பொலிசார் உஷாரடைந்தனர். பதிலுக்கு அவர்களும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் தாமஸ் மற்றும் கிரிஸ் நார்த்கிளிப் (வயது 43) என்பவர் பலியாயினர். பல்கலைக்கழகம் அருகில் துப்பாக்கிச் சூடு நடந்ததால் பதற்றம் ஏற்பட்டது. உடனடியாக மாணவர்கள் உஷார்படுத்தப்பட்டனர்.

இது குறித்து காலேஜ் ஸ்டேஷன் பொலிஸ் அதிகாரி ஸ்காட் மெக்கலம் கூறுகையில், துப்பாக்கிச் சூட்டில் 3 பொலிசாரும் ஒரு பெண்ணும் காயம் அடைந்தனர். இந்த சண்டையில் கிரிஸ் நார்த்கிளிப் என்பவர் எப்படி சுட்டுக் கொல்லப்பட்டார். காயம் அடைந்த பெண் அங்கு எப்படி வந்தார் என்பது குறித்து விசாரித்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## ஒன்பது மாத குழந்தையை கொஞ்சி மகிழ்ந்த ஒபாமா



அயோவாவில் நடந்த கண்காட்சிக்கு திடீரென்று சென்று ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மூக்கை 9 மாத குழந்தை தொட்டு பார்த்தது, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடும் தற போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா வாக்கு சேகரிக்க அயோவாவில் 3 நாள் பிரச்சாரம் செய்கிறார்.

நேற்று அவர் பேருந்து மூலம் அயோவா சென்ற போது, அங்கு நடந்து கொண்டிருந்த கண்காட்சியைப் பார்த்து அங்கே பேருந்தை நிறுத்துமாறு கூறினார்.

பின்னர் கண்காட்சி நடந்த இடத்திற்குள் சென்ற அவரைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சுமார் 1 மணி நேரம் அங்கு இருந்த அவர் குழந்தைகளுடன் பேசி மகிழ்ந்தார்.

அப்போது டெபோரா என் பெண்ணின் கையில் இருந்த 9 மாத குழந்தை கோல் நில்சனைப் பார்த்து ஒபாமா அதன் முன்பு குனிந்தார்.

உடனே அந்த குழந்தை அவரின் முகத்தை தன் கையால் தொட்டது. அதன் விரல்கள் தனது மூக்கில் பட்டவுடன் என் மூக்கைப் பற்றி என்ன நினைக்கிறாய். பெரிய மூக்காக இருக்கிறதல்லவா? என்று குழந்தையிடம் கேட்டுச் சிரித்தார்.

அவர் குழந்தைகளுடன் பேசி மகிழ்வதைப் பார்த்த மக்கள், அடுத்த 4 வருடமும் ஒபாமா தான் ஜனாதிபதி என்று கோஷமிட்டனர்.

## பாகிஸ்தானில் இந்துக்களின் கல்லறைகள் ஆக்கிரமிப்பு

இந்துக்கள் கல்லறைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை 30 நாட்களுக்குள் அகற்ற வேண்டும் என்று பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள லாகூரில் இந்துக்கள் கணிசமாக வசிக்கின்றனர்.

இங்கு ஜி.டி சாலையில் புஹூதுவா பகுதியில் இந்துக்கள் கல்லறை உள்ளது. இந்த கல்லறையை ஆக்கிரமித்து சிலர் கட்டிடங்கள் கட்டி உள்ளனர்.

இதை எதிர்த்து இந்து சுதார் சபா பொதுச் செயலாளர் அமரநாத் ரந்தவா, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த மனுவை டிவிஷன் பெஞ்ச் விசாரித்தது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான வக்கீல், லாகூரில் உள்ள இந்துக்கள் கல்லறை நிலத்தை 3 பேர் ஆக்கிரமித்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

இந்துக்கள் தரப்பில் சபா தலைவர் ஹீராலால் கூறுகையில், கடந்த 1984ஆம் ஆண்டு முதல் அந்த கல்லறையை இந்துக்கள் பயன்படுத்த முடியவில்லை. ஆக்கிரமிப்பை அகற்ற கோரி கலெக்டரிடம் முறையிட்டோம். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார்.

இருதரப்பையும் விசாரித்த நீதிபதிகள், கல்லறையில் உள்ள ஆக்கிரமிப்புகளை 30 நாட்களுக்குள் அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

இதுகுறித்து பஞ்சாப் தலைமை செயலர், லாகூர் மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றுக்கு நோட்டீஸ் அனுப்பவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அத்துடன் சிந்து, கைபர் பக்துன்கவா, பலுசிஸ்தான் மாகாணங்களில் உள்ள இந்துக்களின் கல்லறைகளின் நிலை குறித்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கவும், அந்த மாகாண தலைமை செயலர்களுக்கு உத்தரவிட்டனர்.



பீஜிங்கில் நடந்த வடகொரியா சிறப்பு பொருளாதார மண்டலங்களின் வளர்ச்சிக்கான 3வது கூட்டு கூட்டத்தில், சீன வணிகத்துறை அமைச்சர் சென் டெமிங்(வலது) மற்றும் வடகொ?ரிய தேசிய பாதுகாப்பு கமி'ன் துணை தலைவர் ஜங் சாங் தயெக் கலந்து கொண்டனர்.

## கனடாவில் விமானம் விழுந்து நொறுங்கியது: ஒருவர் பலி



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் விமானம் விழுந்து நொருங்கியதில் ஒருவர் பலியானார், மூன்று பேர் காயமடைந்தனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் தெற்குப் பகுதியில் உள்ள கெலோவ்னா என்னும் இடத்திலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் இந்த சம்பவம் நடைபெற்றது.

உடனடியாக கடற்படையினர் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்து நடந்த இடத்திற்கு அருகே சில மைல்கள் தொலைவில், கடந்த வாரம் விமானமொன்று விபத்துக்குள்ளாகி மூவர் இறந்தது குறிப்பிடத்தக்கது.

### மணிக்கு 4,500 கி.மீ வேகத்தில் செல்லும் விமானம்:

## அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்கு ஒரு மணி நேரத்தில் செல்லலாம்


இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இருந்து அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கு 1 மணி நேரத்தில் விமானத்தில் செல்ல முடியுமா? என்ற கேள்விக்கு தற்போது விடை கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் நாசா மற்றும் பெண்டகன் நிதி அளிப்புடன் 140 மில்லியன் டொலர் செலவில் எக்ஸ்-51-ஏ வேவ் ரைடர் என்ற ஜெட் விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் மணிக்கு 4,500 கி.மீ வேகத்தில் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை ஹைப்பர் சோனிக் என அழைக்கின்றனர். இந்த விமானத்தில் பி-52 குண்டு வீசும் விமானத்தின் இறக்கை பொருத்தப்பட்டுள்ளது.


இந்த விமானம் இன்று தெற்கு கலிபோர்னியாவின் எட்வர்டு விமானப்படை தளத்தில் இருந்து சோதனை ஓட்டத்தை தொடங்குகிறது. இது 70 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் திறன் பெற்றது.

இச்சோதனை வெற்றி பெற்றால் விமான வரலாற்றில் இது புதிய மைல்கல் ஆக கருதப்படும்.




## ஆப்கானில் வெடிகுண்டு தாக்குதல்: 51 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதலில் 51 பேர் உயிரிழந்தனர், 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.




ரம்ஜான் பண்டிகைக்காக ஷொப்பிங் செய்வதற்காக நகரின் பல்வேறு பகுதியிலிருந்து மக்கள் கடைவீதிகளுக்குச் சென்றனர். மக்கள் நெரிசல் மிகுந்த அந்த நேரத்தில் அடுத்தடுத்து வெடிகுண்டுகள் வெடித்தன. இதில் 11 பொலிசார் உள்பட 36 பேர் உயிரிழந்தனர்.

இதே போன்று குண்டுசின் மாகாணத்தின் ஆர்ச்சி மாவட்டத்தில் மோட்டார் சைக்கிளில் வைக்கப் பட்டிருந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியதில், 10 பேர் உயிரிழந்தனர்.

மேலும் படக்ஷன் மாகாணத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் மாவட்ட ஆட்சியர் மற்றும் 4 பாதுகாப்பு படையினர் உயிரிழந்தனர். இதில் பலர் படுகாயமடைந்ததாக காவல் துறை அதிகாரி முஸா ரசௌலி தெரிவித்துள்ளார்.

# வல்லரசு நாடுகளுக்கு இணையாக நாங்களும் செவ்வாயில் ஆராய்ச்சி நடத்துவோம்: சுதந்திர தினத்தில பிரதமர் உரை

செவ்வாய் கிரகத்திற்கு விண்கலத்தை அனுப்பி வல்லரசு நாடுகளுக்கு இணையாக நாங்களும் ஆராய்ச்சியை தொடங்குவோம் என சுதந்திர தின விழாவில் கொடியேற்றி வைத்து பிரதமர் மன்மோகன் சிங் பேசினார்.



இந்தியாவின் 66வது சுதந்திர-தின விழா நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்று காலை தேசப்பிதா மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்திய பிரதமர், தொடர்ந்து முப்படை தளபதிகளை சந்தித்தார். பின்னர் 7.34 மணிக்கு கொடி ஏற்றினார்.

தலைநகர் புதுடெல்லியில் உள்ள செங்கோட்டையில் தேசியக்கொ-டியை ஏற்றி வைத்து மக்களுக்கு மத்தியில் பிரதமர் உரையாற்றியதாவது: இந்தியா செவ்வாய்கிரகத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்காக விரைவில் விண்கலமொன்றை அனுப்பும் என்றும் இதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது எனவும் தெரிவித்தார்.

சுகாதாரத்தை பொறுத்தவரை இந்தியா போலியோ இல்லாத நாடாக மாறியுள்ளது என்று பேசிய பிரதமர், நாட்டில் பண வீக்கத்தை கட்டுப்படுத்துவதும் வறுமையை ஒழிப்பதும் அவசரத்தேவையாக உள்ளது என்றார்.

உணவு தானியங்கள் வீணாவது நாட்டின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. உலக பொருளாதாரம் வறுமை நிலையை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

பருவ மழை குறைவான காரணத்தால் விலைவாசி உயர்ந்துள்ளதாகவும் நடப்பாண்டில் இந்திய பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்றும் அதற்கான நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது எனவும் கூறினார்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் மின் உற்பத்தியை பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என றும் ஐந்தாண்டுகளில் மின் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதி கூறினார்.

நாட்டில் அரசியல் கட்சியினரி-டம் ஒற்றுமை இல்லாததால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கிறது. லோக்பால் மசோதாவை நிறைவேற்ற அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்பு தேவை என்றும் பிரதமர் பேசினார்.

# இந்திய செய்திகள்

## வெளிநாட்டு பயணத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கை மிஞ்சிய பிரதிபா பாட்டீல் சாதனை



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பாட்டில், தன்னுடைய பதவிக்காலத்தில் ரூ.205 கோடி செலவில் 252 முறை வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

தனது பதவிக் காலத்தில்(2008-2011) அரசு முறை பயணமாக 18 நாடுகளுக்கு பிரதிபா பாட்டில் சென்றுள்ளார்.

இந்த பயணத்திற்கு மத்திய அரசின் செலவு ரூ.205 கோடி ஆகும். இதில் சிறப்பு விமானத்தை இயக்க மட்டும் 104 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தன் பதவிக்காலம் முடியும் தருவாயில் செஷல்ஸ் தீவுகள், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு பிரதிபா பயணம் மேற்கொண்டார்.

ஆனால் இதே காலத்தில் (2008-2011) பிரதமர் மன்மோகன் சிங் 108 முறை வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி 106 முறை வெளிநாடு பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே பிரதிபா பாட்டில் தனது குடும்பத்தாருடன் அடிக்கடி வெளிநாடு பயணம் மேற்கொள்வதாக ஒரு குற்றச்சாட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தினத்தில் தொடர் குண்டுவெடிப்பு

இந்தியா முழுவதும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வரும் நிலையில் நேற்று மணிப்பூர் மாநிலத்தில் தொடர் குண்டு வெடிப் புகள் நிகழ்ந்துள்ளது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தலைநகர் புதுடெல்லி உட்பட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மணிப்பூர் மாநிலத்தில் குண்டுவெடித்துள்ளது உள்ளூர் பயங்கரவாதிகளின் சதியாக இருக்கலாம் என கருதபபடுகிறது.

மணிப்பூர் தலைநகர் இம்பாலில் 3 இடங்களில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளால் அம்மாநில மக்கள் மிகுந்த பதற்றமடைந்துள்ளனர்.

இக்குண்டுவெடிப்புகளில் உயிர் சேதம் எதுவும் ஏற்படாவிட்டாலும் 4 பேர் படுகாயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

இது தவிர தவ்பால் என்ற மாவட்டத்திலும் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

சுதந்திர தின விழாவை சீர்குலைக்க பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ள சதி என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.



கறுப்பு பணத்தை மீட்க வலியுறுத்தி டில்லியில் உண்ணாவிரதம் துவங்கிய யோகா குரு ராம்தேவ், நேற்று உண்ணாவிரதத்தினை பழச்சாறு அருந்தி நிறைவு செய்தார்.

## நாட்டின் முதன்மையான மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதே எனது லட்சியம்: முதல்வர் ஜெயலலிதா

நாட்டின் 66வது சுதந்திர தினமான நேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, சென்னை ஜார்ஜ் கோட்டையில் கொடியேற்றி வைத்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.



தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவதுடன் கூடுதலாக 11 சதவீதம் வளர்ச்சியை பெறுவதே தனது லட்சியம் என்று தனது சுதந்திர தின பேருரையில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

இன்னும் 10 ஆண்டுகளில் இந்தியாவின் ஒட்டு மொத்த வளர்ச்சி விகிதத்தில் தமிழகத்தின் வளர்ச்சி 20 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்க வேண்டும். அதற்காகவே 2023 தொலைநோக்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் தனது ஆட்சியில் நடந்த தமிழகத்தின் வளர்ச்சி குறித்து பேசிய முதல்வர், தமிழகத்தின் உணவு தானிய உற்பத்தி 106 லட்சம் மெட்ரிக் தொன்னாக உயர்ந்துள்ளது. மும்முனை மின் சாரத்தால் 1,37,000 ஏக்கர் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பா சாகுபடி வழக்கமான பரப்பளவில் நடைபெற வாய்ப்பு உள்ளது. அனைத்து துறைகளிலும் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அடுத்த சில மாதங்களில் காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படும்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பை அதிகரிக்க பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுதந்திரம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பதற்காகவே அரசு செயல்பட்டு வருகிறது.

இந்தியாவை வல்லரசாகவும் அதில் தமிழகத்தை முதன்மை மாநிலமாகவும் உருவாக்க எனது அரசு செயல்பட்டு வருகிறது என்றார்.

## டிவிட்டரில் கருணாநிதி

திமுக தலைவர் கருணாநிதி சமூக வலைத்தளமான டிவிட்டரில் கணக்கு தொடங்கி, தன் கருத்துகளை வெளியிடவுள்ளார்.


அரசியல் தலைவர்களில் பெரும்பான்மையோர் சமூக வலைதளங்களில் தமக்கென்று கணக்கு ஒன்றை தொடங்கி அதில் தங்களது கருத்துக்களை பதிவு செய்து வருகின்றனர்.

இதற்கு முக்கிய காரணம், நாட்டின் பெரும்பாலான இளைஞர்கள் இந்த சமூக வலைதளங்களோடு இணைந்திருக்கின்றனர். எனவே இவர்கள் தங்களது கருத்துக்களை படித்து தம் கட்சியின் பக்கம் வருவார்கள் என்ற நம்பிக்கையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் திமுக தலைவர் கருணாநிதி தற்போது டிவிட்டர் பக்கத்தில் இணைந்து தனது கருத்துக்களை வெளியிடவுள்ளார்.

டிவிட்டர் கணக்கில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மிக அதிகமான வாசகர் வட்டத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் தேசிய கொடியை ஏற்றினார் சுனிதா



சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இந்தியாவின் தேசியக் கொடியை சுனிதா வில்லியம்ஸ் ஏற்றி, இந்தியர்களுக்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றி வருகின்ற சுனிதா வில்லியம்ஸின் தந்தை இந்தியர் ஆவார்.

எனவே இந்திய பூர்வீகத்தை கொண்டவரான இவர், சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் ஏற்றி இந்தியாவிற்கும் இந்திய மக்களுக்கும் பெருமை தேடி தந் திருக்கிறார்.

4 மாதகால ஆய்வுப்பணிக்காக சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியுள்ள சுனிதா, சுதந் திர தினத்தை முன்னிட்டு இந்தியர்களுக்கு சுதந்திர தின வாழ்த்துக்களை கூறியுள்ளார்.

இந்திய நாட்டின் ஒரு அங்கமாக இருப்பதை நினைத்து தான் பெருமை கொள்வதாகவும் இந்த சுதந்திர தினத்தில் தன்னை இணைத்துக்கொள்வதில் மிகவும் பெருமையடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

## கலவரத்தையடுத்து

## அசாமில் நிலநடுக்கம்: அதிர்ச்சியில் மக்கள்

கன மழையைத் தொடர்ந்து வெள்ளம், கலவரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட அசாம் மாநிலத்தில் நேற்றிரவு 8.47 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுகோலில் 3.2 என்ற அளவில் பதிவான இந்நில நடுக்கம் மிதமான நிலநடுக்கமே ஆகும்.

ஆனால் ஏற்கனவே இந்த வருடத்தில் அசாம் மாநிலம் வெள்ளம், கலவரம் போன்ற துயரங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நிலநடுக்கத்தை உணர்ந்த அசாமிகள் மிகவும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தின் மையம் அசாமின் கார்பி அங்லாங் என்ற பகுதியில் நிலைகொண்டிருந்த தாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# இலங்கை 20 – 20 போட்டியில் மேட்ச் பிக்சிங்: தொடருக்கு பாதிப்பு ஏற்படுமா?

இலங்கையில் நடைபெறும் உள்ளூர் டுவெண்டி-20 போட்டிகளில் மேட்ச் பிக்சிங் நடப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல் போல, இலங்கை பிரிமியர் லீக்(எஸ்.எல்.பி.எல்) டுவெண்டி-20 போட்டிகளை நடத்த இலங்கை கிரிக்கெட் வாரியம் கடந்தாண்டு முயற்சித்தது. இந்திய வீரர்கள் விலகல் காரணமாக கடைசியில் தொடர் ரத்தானது.

இம்முறை இந்திய வீரர்கள் இல்லாமல், கிறிஸ் கெய்ல், சாகிப் அல் ஹசன், அப்ரிதி போன்றவர்களை கொண்டு தொடர் நடத்த திட்டமிட்டனர். காயம் காரணமாக கெய்ல், சாகிப் போன்றோர் கடைசி நேரத்தில் விலகினர்.

இதனிடையே இலங்கையிலிருந்து வெளியாகும் ”டெய்லி மிரர்” பத்திரிகைக்கு ”டேப்” ஒன்று கிடைத்துள்ளது. அதில் எஸ்.எல்.பி.எல் தொடரில் மேட்ச் பிக்சிங் செய்வது தொடர்பாக பேச்சுகள் பதிவாகியுள்ளதாம். பெரும்பாலும் இவை இந்தியில் இருப்பதால், முழு விவரத்தை டெய்லி மிரர் வெளியிடவில்லை.

இந்த டேப் தற்போது சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின்(ஐ.சி.சி) ஊழல் தடுப்பு கண்காணிப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது குறித்து எஸ்.எல்.சி.யும் விசாரணை நடத்துகிறது என்றாலும், எவ்வித தகவலும் வெளியாகவில்லை.

இதுகுறித்து தொடர் நிர்வாக அதிகாரி சந்தீப் பாம்மர் கூறுகையில், ஊழல் புகாரால் தொடருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இது ஊழல் தடுப்புக் கண்காணிப்புக் குழுவை எச்சரிக்கையாக இருக்க செய்யப்பட்ட ஏற்பாடாக கூட இருக்கலாம்.

# மன்னிப்புக் கேட்டால், அணியில் இடம்: பீற்றர்சனுக்கு இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை




தனது சக வீரர்களிடம் பகிரங்க மன்னிப்பை கெவின் பீற்றர்சன் வேண்டி நின்றால் அவருக்கு இங்கிலாந்து அணியின் மீண்டும் இடம் கிடைக்கப்பெறும் என இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் உள்ளக வட்டாரங்களை ஆதாரம் காட்டியே இங்கிலாந்து ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.

இங்கிலாந்தின் அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ட்ரோஸ், அணியின் பணிப்பாளர் அன்டி பிளவர் ஆகியோருக்கு எதிரான குறுஞ்செய்திகளை அனுப்பினார் என இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை கெவின் பீற்றர்சன் மீது சந்தேகமுற்றுள்ள நிலையிலேயே இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

தென்னாபிரிக்காவிற்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்ட கெவின் பீற்றர்சன் மீண்டும் அணியில் இடம் பெற வேண்டுமாயின் சக வீரர்களிடம் மன்னிப்புக் கோருவதே ஒரே வழி என இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை அவருக்குத் தெரிவித்துள்ளது. குறுஞ்செய்திகளை அனுப்பியதை ஏற்றுக் கொண்டு, அவை கோபத்தின் விளைவாக அந்தத் தருணத்தில் இடம்பெற்றது என்பதை அவர் தெரிவிக்க வேண்டும் என இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை எதிர் பார்க்கின்றது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக டுவெண்டி டுவெண்டி தொடருக்கான அணியை அறிவிப்பதற்கான இறுதி நாள் எதிர்வரும் சனிக்கிழமை எனும் நிலையில் அதற்கு முன்னர் கெவின் பீற்றர்சன் மன்னிப்புக் கோருவாராயின் அவர் அந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை - கெவின் பீற்றர்சனுக்குத் தெரிவித்துள்ளது.

# ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் றுகுண ரோயல்ஸ் வெற்றி



உத்துர ருட்ராஸ் அணிக்கெதிராக இடம்பெற்ற இப்போட்டியில் றுகுண ரோயல்ஸ் அணி டக்வேர்த் லூயிஸ் முறையில் 35 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற உத்துர ருட்ராஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய றுகுண ரோயல்ஸ் அணி 16 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது.

20 ஓவர்கள் கொண்ட போட்டியாக ஆரம்பித்த இப்போட்டியில் றுகுண ரோயல்ஸ் அணி 14.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் போது மழை குறுக்கிட்டதன் காரணமாக போட்டி இடை நிறுத்தப்பட்டது.



மீண்டும் ஆரம்பிக்கும் போது 16 ஓவர்கள் கொண்ட போட்டியாக இது ஆரம்பிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக ஆரொன் ஃபின்ச் 48 பந்துகளில் 65 ஓட்டங்களையும், ஜிஹான் ரூபசிங்க 35 பந்துகளில் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் உத்துர ருட்ராஸ் அணி சார்பாக கைல் மில்ஸ், ஜெஹான் முபாரக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.


திருத்தியமைக்கப்பட்ட இலக்காக 16 ஓவர்களில் 154 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உத்துர ருட்ராஸ் அணி 15.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் உத்துர ருட்ராஸ் அணி சர்பாக பர்வீஸ் மஹரூப் 17 பந்துகளில் 32 ஓட்டங்களையும், ஜெஹான் முபாரக் 18 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக லசித் மலிங்க 4 ஓவர்களில் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஜெரோம் ரெய்லர், அடில் லக்ீத்த, ‘கிட் அப்ரிடி, டானியல் ஹரிஸ், ரமித் ரம்புக்வெல்ல ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக றுகுண ரோயல்ஸ் அணியின் தலைவரான லசித் மலிங்க தெரிவானார்.

# குவித்தோவா சாம்பியன்



ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் பெத்ரா குவித்தோவா சாம்பியன் பட்டம் வென்றார். பைனலில் சீன வீராங்கனை நாலியுடன் மோதிய குவித்தோவா 75 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். அடுத்த செட்டில் கடும் நெருக்கடி கொடுத்த நாலி 62 என்ற கணக்கில் வென்று சமன் செய்தார். கடைசி செட் ஆட்டத்தில் நா லியின் சர்வீஸ்களை அதிரடியாக முறியடித்து புள்ளிகளைக் குவித்த குவித்தோவா 75, 26, 63 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.


# பாகிஸ்தான் அணியில் யுனிஸ், குல் நீக்கம்



ஆஸ்திரேலிய அணியுடன் ஒரு நாள் தொடரில் மோதவுள்ள பாகிஸ்தான் அணியில் அனுபவ வீரர் யூனிஸ் கான், வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் இருவரும் நீக்கப்பட்டுள்ளனர். விக்கெட் கீப்பர் கம்ரான் அக்மலுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஷார்ஜா, அபுதாபி, துபாயில் நடக்கவுள்ள இந்த தொடரில், இரு அணிகளும் 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டியில் விளையாட உள்ளன. முதல் ஒருநாள் போட்டி ஷார்ஜாவில் ஆகஸ்ட் 28ம் தேதி நடக்கிறது. பாகிஸ்தான் அணி: மிஸ்பா உல் ஹக் (கேப்டன்), நசீர் ஜம்ஷத், முகமது ஹபீஸ், அஸார் அலி, ஆசாத் ஷபிக், உமர் அக்மல், கம்ரான் அக்மல் (விக்கெட் கீப்பர்), ஷாகித் அப்ரிடி, சோகைல் தன்வீர், அய்ஸாஸ் சீமா, சயீத் அஜ்மல், இம்ரான் பர்கத், சோயிப் மாலிக், அப்துர் ரகுமான், ஜுனைத் கான், அன்வர் அலி.

# சிறந்த கால்பந்து வீரர் விருது மெஸ்ஸி, றொனால்டோ போட்டி


ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீரர் விருதுக்கான இறுதி பரிந்துரை பட்டியலில் பார்சிலோனா கிளப் வீரர்கள் லயனல் மெஸ்ஸி, ஆண்ட்ரெஸ் இனியஸ்டா, ரியல் மாட்ரிட் வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு றொனால்டோ, ஸாவி ஹெர்னாண்டஸ் ஆகியோரின் போட்டியை முறியடித்து லயனல் மெஸ்ஸி விருது பெற்றார். மொனாக்கோவில் ஆகஸ்ட் 30ம் தேதி நடைபெறும் விழாவில், இந்த ஆண்டுக்கான விருது பெறும் வீரர் யார் என்பது அறிவிக்கப்படும். கடந்த சீசனில் மெஸ்ஸி 50 கோல், றொனால்டோ 46 கோல் அடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# ரியோவில் ஒலிம்பிக் கொடி

லண்டன் ஒலிம்பிக் போட்டி நிறைவடைந்ததை அடுத்து, அடுத்த போட்டி நடைபெற உள்ள பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகருக்கு ஒலிம்பிக் கொடி விமானம் மூலம் நேற்று எடுத்துச் செல்லப் பட்டது. விமானத்தில் இருந்து கொடியுடன் இறங்கிய ரியோ நகர மேயர் எடுவார்டோ பயசுக்கு மக்கள் உற்சாகக வரவேற்பளித்தனர். லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பிரேசில் வீரர், வீராங்கனைகள், “ஒலிம்பிக் கொடியுடன் நாடு திரும்புவது மறக்க முடியாத மகிழ்ச்சியான அனுபவம்“ என்று பெருமிதத்துடன் கூறினர். பிரேசில் அணி 3 தங்கம், 5 வெள்ளி, 9 வெண்கலம் என மொத்தம் 17 பதக்கங்கள் வென்றது குறிப்பிடத்தக்கது.


இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 16.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது




# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்

சண்முகா!
தேரேறி பக்தர்களுக்கு
அருட்காட்சி தாருமையா...

**16.08.2012**





## நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் அருளாசிச் செய்தி

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று தேர்த் திருவிழா. அழகன் முருகன் சித்திரத் தேரிலே ஆறுமுகப் பெருமானாக ஆரோகணிக்கின்ற அற்புதக் காட்சியை இன்று நல்லூரிலே காணலாம்.

மஹோற்சவத்திலே தேர்த் திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். அந்த வகையில் இன்று சண்முகப் பெருமான் அநியாயங் களையும் அக் கிரமங்களையும் அழித் தொழிக்கும் பொருட்டு நல்லையம் பதியிலே தேரேறிவருகின்றான்.


முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற முருகன், எல் லோரும் சுகமே வாழ வேண்டும் என்ற பரந்த நோக்கில் வழிபடும் அடியார் பெருமக்களுக்கு தமது அருட்கடாட்சத்தினை இன்று அள்ளிச் சொரிகின்றான். எனவே இன்றைய நன்னாளில் நல்லைக் கந்தன் தேர்விழா சிறப்புற நிகழ அவனது பாதார விந்தங்களை வழுத்தி, அனைத்து அடியவர்களுக்கும் அருளாசிகளை நல்கிவாழ்த்தி மகிழ்கின்றோம்.

## தேரேறிவந்து வேலால் வினை முடிப்பாய்

நல்லைப்பதி வாழும் ஞானத் தமிழ்த் தலைவா!
தில்லைக்கிறை தந்த செல்வா! எம் சிந்தையெலாம்
அல்லற்படுவ தறிந்திலையோ! அப்பா! நீ
எல்லையிலாக் கருணை மழை பொழிந்தருள்!
ஈனர் செயுஞ் செயலை இல்லையெனச் செய்த
ஞானத் தனிச் சுடரே - நல்லூரா! நீ!
போனத் தவச் செல்வர் செல்லப்பர், யோகரெனும்
காணற்கரிய பிறவிகளின் கடவுளப்பா!
சிந்தை மகிழச் சினந் தணியக் கருணைபுரி
மைந்த குகனே! வடிவேலா! வரந்தருவாய் - எமது
முந்தை வினை களைந்து முழுதும் நலந்தருக!
கந்தனிறையே! கருத்தில் எமைக் காப்பாய்!
ஞாலமெலாம் நினைந்துருகி நாளும் உன் திருவடியை
நீள நினைக்கும் நிலை வேண்டும்! நல்லூரா!
கோலக் குறத்தி மணவாளா! கொற்கையினாய்!
காலமெலாம் எம்மினத்தைக் கார்.!
பட்டதுயர் விட்டொழியப் பாரிக்கும் பராபரனே!
இட்டமுடன் தேரில் எழுந்தருளும் ஆறுமுகா! - உன்
கட்டளைக்காய் எப்பொழுதும் காத்திருக்கும் சேனாபதியே!
முட்டறுக்க வந்திடுவாய் முந்தி!
நைந்துருகும் மெய்யடியார் நாளும் உன் திருச்செவியில்
சந்தமுடன் ஓதும் தமிழ்கேட்டு மகிழ்ந்தவனே! - முன்பு

## நல்லூர்க் கந்தன் இரதம் வரும் காட்சி

உடம்பிடிச் செங்கைக்
குமரேச
வள்ள
லுருள்நெடுந்தேர்
தடம்பிடித் தோங்குந்
திருநல்லை
வீதி தனில்வருமால்
வடம்பிடித் தீர்த்திட
வம்மின்கள்
வம்மின்கள்
தொண்டரெலாம்
இடம்பிடித் திட்டிருப்
பீர்வீடு நல்கும்
இணையடிக்கே!
-நவாலியூர்
சோமசுந்தரப்
புலவர்




பக்தர்கள் புடைசூழ தேரேறி வாரீர்...

**யோகாஸ் நகை அகம்**

**Yogas Nagai Aham**



யாழ். நகரில் தரநிர்ணயத்துடனும்
குறைந்த சேதாரத்துடனும்தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

205/2, ராஜா காம்லெக்ஸ்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0212229269, 0776845450

**நல்லூர் கந்தன் எக்ஸ்பிரஸ்**

**Nallur Kanthan Express**

நல்லையில் உறையும்
கந்தா போற்றி...



யாழ்– கொழும்பு பிரயாண வசதிகள்
மேற்கொள்ள நாட வேண்டிய
இடம் நல்லூர் கந்தன் எக்ஸ்பிரஸ்



குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத வாகனம்.
சீர் செய்யக் கூடிய சீற் (இருப்பிட) வசதி

கொழும்பு
No. B1-S1, Bloemedhal Flates, Kotahena,
Colombo. T.P. 0776212948,
0771517405, 0112445700

யாழ்ப்பாணம்
No. 352, Hospital Road,
Jaffna. Tel: 0771517407
0112445700

சண்முகப் பெருமானுக்கு அரோகரா...

**ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ்**

37, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
சகலவிதமான பலசரக்கு பொருட்களை பெற்றுக்கொள்ள
நாடுங்கள் ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ்.
மொத்தமாகவும், சில்லறையாகவும் தரமான
பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்பு: 0750489957

**ரதி ஸ்ரோர்ஸ்**

ஆறுமுகா தேரேறி ஓடிவா...

சகல விதமான பலசரக்குப்
பொருட்களும் சிறந்த
தரத்துடன் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
ரதி ஸ்ரோர்ஸ்



**லிப்ரா உணவகம்**

அறுசுவை உணவுகளை
சுடச்சுட பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
லிப்ரா உணவகம்
விசேட ஓடர்கள்
செய்து தரப்படும்.



174,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 6784. (பெருமாள் கோவில் முன்பாக)



ஒப்பிட்டுப் பாருங்கள்...!
ஒத்துக்கொள்வீர்கள்...!

**சிறிராம்**
ஜுவல்லர்ஸ்

தங்க பவுண்
நகை
வியாபாரம்



யாழ்.நகரிலேயே! யாராலும் தரமுடியாத
தர நிர்ணயம்
மிகமிகக் குறைந்த...
சேதாரத்துடன் தங்கநகைகள்

இல. 193, 158, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 8334

வாவா முருகா வடிவேல் முருகா...



ALL KINDS OF PRINT SOLUTION

**Konica**

Fram Making
Duro Frame
Box Frame
Box&Light Fram

UV Coating



ALBAM MAKING Leather Story
Book wooden
Boxes Fabric Albums Rexen Albums

PhotoGraphy
& Videography
ALbum
Designing



DIGITAL BANNER PRINTIG

GALEXY BANNER PRINTING



Photo Printing

Dealer Board
Light Bord

Indoor
Hight
Quality Print

14, Sri Vengadesan Veethy, Jaffna. Tel 021 222 3493 E-mail: sridigitalb@gmail.com



# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்

சண்முகா!
தேரேறி பக்தர்களுக்கு
அருட்காட்சி தாருமையா...

**16.08.2012**



## தேரேறி வருகிறான் நல்லைக் கந்தன்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவங்களில் சிறப்புப் பொருந்திய இரதோற்சவம் இன்று பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. இலட்சோப இலட்சம் மக்கள் நல்லைக் கந்தனின் தேர்ப்பவனியில் கலந்து கொள்கிறார்கள் அவன் திருவருளுக்கு பாத்திரமாகி நாடெங்கும் பல திசைகளிலிருந்து அடியவர்கள் நல்லூரில் கூடும் திருக்காட்சி சிறப்பானது.

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவனாக வலிமையும், அழகும், அன்பும், அருளும் பொருந்திய பெருங் கடவுளென கந்தபுராண காவிய நாயகனாக போற்றப்படுபவன் முருகப் பெருமான். திருப்புகழ் நாயகனாக தாரகன், சிங்கன், சூரன் செருக் கடக்கிய செம்மலாக, சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்'' என்ற வரிகளுக்கு இன்றும் தனிப்பெரும் தெய்வமாக சரவணத்தில் உதித்த ஆறுமுகவனாக, திருத்தணிகை, பழனி, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய் திருப்பரங்குன்றம் என்றும் ஆறு படை வீடுகளிலும் அமர்ந்து அருள்புரியும் தலைவனாக பெருமைபெறும் வேற்பெருமான், அழகிய சித்திரத்தேரினிலே ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுதலைத்தந்து தேச நலன் காக்க - நல்லைக் கந்தனாக தேரில் வருகின்ற திருக்கோலம் அற்புதக் காட்சியாக அமைந்து விடுகின்றது. இன்று நல்லையம்பதி இந்திர விழாப் போல காட்சியளிக்கின்றது. இங்கு எந்த மயமும் கந்தமயமாகவே இருக்கிறது. சிவபெருமானுடைய ஐந்து முகமும், உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவமும் சக்தியும் கலந்த ஒருதிருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது புராணவரலாறு.

இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாக திருஅவதாரம் செய்தான் என்பது மற்றொரு கதை. நான்கு திசைகளாகிய இடங்கள், மேல், கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானுடைய திருவருட்பார்வை செல்கின்றது. என்பது அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குச் சொல்கின்றது.

இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுக சுவாமியே இன்று அடியார்களை அரவணைத்துக் காத்து இரட்சிப்பதற்காக தேரேறி வருகின்றான். தமிழ் மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கு உலகெங்கும் அருளாட்சி புரிபவன். நல்லூரிலும் பன்னெடுங்காலமாக அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்றான். வைதாரையும் வாழவைத்து வேண்டுவார் வேண்டும் வரமெலாம் வாரி வழங்குபவன். அலங்காரக் கந்தனாக ஆறுமுகத்துடன் பன்னிரு கரத்துடன் தன்னை நாடுவோரைக் காத்தருள எழில் பொங்கும் கலைத் தேரில் ஆரோகணித்து வருகிறான். நல்லூர் மட்டுமல்ல உலகமே அவனின் பேரருட் திறத்தினால் கட்டுண்டு நிற்கிறது. எங்கும் அரோகரா ஒலி வானைப் பிளக்கிறது. பக்தி பரவசமான சூழலில் அடியார்கள் வடம்பிடித்து தேரிழுத்து வரும் திருக்காட்சி கந்தபுராண கலாசாரத்தில் பெருமைகளை வருவித்து நிற்கிறது. அவனருளாலே அவன் தாள் பணிந்து நல்ல வண்ணம் வாழ நல்லைக் கந்தனை பிரார்த்திப்போமாக!

- *மதுரகவி, காரை எம்.பி. அருளானந்தன்*

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முத்தமிழால் வைதாரை யும் வாழ வைக்கின்ற கலியுக வரதனாகிய கந் தப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக் கின்ற நல்லூரிலே இன்று தேர்த் திருவிழா நிகழ் கிறது. அழகன் முருகன் இன்று அடியார்க்கருளும் ஆறுமுகப் பெருமானாக அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணிக்கின்றான்.

வழிபடும் அடியார்களின் துன்பங்க ளையும் துயரங் களையும் இன்னல் களை யும் இடுக்கண்களையும் நீக்கும் நோக்கில் முருகன் இன்று அலங்காரக் கந்தனாக அருட்காட்சி தருகின் றான்.

ஸ்ரீ சங்கபோதி புவனேக பாகு சண்பகப் பெருமாளி னால் கட்டப் பெற்ற இந்த நல்லூர் கந்தசு வாமி கோயில் சரித்திரப் பிர சித்தியுடன் திகழ்வதோடு சகல மதத்தவர்களும் இன மத பேதமின்றி ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் ஒருமன தாக வழிபாடாற்று கின்ற ஒரு புனிதத் தன்மை யையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

**"அருவமும் உருவுமாகி**
**அநாதியாய்ப் பலவாய்**
**ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப்**
**பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர்**
**முகங்களாறும் கரங்கள்**
**பன்னிரண்டுங் கொண்டே**
**ஒருதிரு முருகன்**
**வந்தாங் குதித்தனன்**
**உலகமுய்ய"**

என்ற கச்சியப்பரின் திருவாக்குக்கமைய ஆறு குழந்தைகளாகத் தோன்றி, உமையவள் ஆசையோடு அரவணைக்க, பன்னி ரண்டு கைகளுடன் ஆறுமுகப்பெருமானாக ஐயன் அவ தாரஞ் செய்தான் என்பது வரலாறு. அந்த ஆறுமுகன் சரவணன் இந்த நல்லூர்க் கந்தன் ஆலயத்தில்

(தொடர்ச்சி II ஆம் பக்கம்)

அருள்வேல் வடிவில் எழுந்தருளி வீற்றிருந்து, வழிபடும் அடியார்களின் துன்பந் தீர்த்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்றான்.

மூலஸ்தானத்திலே இருக்கின்ற அந்த வேலுக்கு ஓர் அருட் சக்தி உள்ளது. சொல்ல முடியாத பேரின்பத்தை அள்ளிச் சொரியும் காந்த சக்தி - ஓர் ஈர்ப்புச் சக்தி இருக்கின்றது. "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என்றபடி இந்த நல்லூர் முருகன் அடியார் வேண்டுவதையெல்லாம் அப்படியே நிறைவேற்றி விடுகின்றான். தம்முடைய நேர்த்திகள் பூர்த்தியானதும் பக்தர்கள் இங்கே படையெடுக்கின்றார்கள்.

**"தொல்லை வினை தீர்க்கும்**
**தூயவனே முருகா!**
**இல்லையெனாது வரமீந்தருளும்**
**சண்முகனே! குகனே!!**
**கல்லையொத்த மனமும்**
**கசிந்துருகக் காட்சி தந்து**
**நல்லையிலே எழுந்தருளி**
**நமக்கருளும் கந்தா - சரணம்!"**

என்று நம்பிவந்து வெம்பி அழுது நிற்பவர்க்கெல்லாம் தன்னருளை வாரி வழங்கி அள்ளிச் சொரிகின்றான் நல்லைக் கந்தன்.

இன்று தேரிலே திருவீதியுலா வருகின்ற கந்தன் வள்ளி தெய்வயானை சமேதராக தங்க நகைகள் மின்னித் தெறிக்க அலங்கார பூஜிதனாக அருட்காட்சி தரும் அழகே தனி.

இன்றைய தேர்த் திருவிழா நாளில் சைவமக்களாகிய [illegible] முருகனைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து இதுவரை நாளும் பட்ட துன்பம் விலகி, இனியாவது சிறப்புடன் வாழ எமக்குத் திருவருட்கடாட்சம் வழங்க வேண்டுமென்று வணங்கி போற்றித் துதித்து நிற்போமாக.

– *சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்*

## கந்த சஷ்டி விரதச் சிறப்பு

முருகப் பெருமானுக்குரிய விரதங்களில் மிகச் சிறந்தது கந்தசஷ்டி விரதமாகும்.


ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்த வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு நாட்கள் கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. மாதம் தோறும் சஷ்டி திதியிலும் விரதம் இருக்கலாம். "சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்" என்பதற்கு "சஷ்டியில் விரதம் இருந்தால் அதன் அருள் அகப் பையில், அதாவது உள்ளத்தில் வரும்" என்பதுதான் உண்மையான பொருளாகும்.

இவ்விரதம் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் மகத்தான விரதமாகும். முதல் நாள் அமாவாசை முதல் தொடர்ந்து ஆறுநாட்களும் அனுட்டிக்கப்படும். இவ்விரதத்தில் சிலர் மூன்று வேளையும் உண்ணா நோன்பு இருப்பர். சிலர் பகல் மட்டும் விரதம் இருந்து இரவில் பால், பழம் உண்டு விர தம் மேற்கொள்வர். விரத நாளில் தர்ப்பை அணிந்து சங்கல்பம் செய்துகொண்டு ஆறு நாட்களும் முழு உபவாச விரத மிருந்து இறுதி நாளில் தர்ப்பை யை அவிழ்த்து தாம்பூலத் தட்சணையுடன் அர்ச்சகரிடம் அளித்து விரதத்தை நிறைவு செய்பவர்களும் உண்டு. இவர்களில் பலர் முருகன் ஆலயத்திலேயே தங்கி விரதம் இருப்பர்.

உண்ணா நோன்பு மட்டுமல்லாமல் மௌன விரதம் இருப்போர்களும் உள்ளனர். விரத காலத்தில் முருக நாம ஜெபம், கந்த புராணம் படித்தல் நற்பலன் அளிக்கும். ஆறாம் நாள் கந்தசஷ்டி அன்று துயிலாமல் விழித்திருந்து முருகன் பெருமைகளை நினைந்தும், பேசியும் வழிபடுதல் சிறப்பு. முழு உபவாசம் இருக்க முடியாதவர்கள், கந்தசஷ்டி தினத்தில் மட்டுமாவது உபவாசம் இருத்தல் நன்மையைத் தரும். ஏழாம் நாளன்று நீராடி, முருகனை வழிபட்டு வெல்லமும், பச்சைப் பயறும் கலந்து களி செய்து உண்டு விரதத்தை முடிக்கலாம். ஆறு நாள்களும் கந்த புராணத்தை முழுமையாகப் படிக்கலாம்.

கந்தர் சஷ்டிக் கவசம், ஸ்கந்த குரு கவசம், சண்முக கவசம் போன்றவற்றை பாராயணம் செய்யலாம். திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் கலிவெண்பா, வேல் மாறல் பதிகம், திருவடித் துதி முதலியவற்றைப் பாராயணம் செய்தலும் சிறப்பு தரும். ஆதிசங்கரர் அருளிய சுப்ரமண்ய புஜங்கத்தை உள்ளன்போடு பாராயணம் செய்தால் எண்ணிய காரியம் வெற்றி பெறும். ஆறு நாட்களும், ஆறு காலங்களும் உண்மையாக முருகனை பூஜித்து வழிபடுவோருக்கு வேண்டு வரம் கிட்டும் என்பது மட்டுமில்லை, முருகனது அருட்காட்சியும் கிடைக்கும்.

## தேர் காண வாருங்கள் நல்லைக்கு



தேர் காண வாருங்கள் - கந்தனைத்
தேரி னில் பாருங்கள்
நல்லையின் வேலன் நம்மை ஆள்பவன்
எல்லையில் உருவம் காட்டியே வாறான்
அல்லல் அறுக்க சண்முகமாய் வாறான்
நல்லைக் கந்தன் தேரேறி வாரான்

சித்திரத் தேரில் சின்மய மாய்க்கந்தன்
பத்தரைக் காத்திட பாரெல்லாம் உய்ந்திட
எத்திசை யும்நோக்கி ஆறுமுகன் வாறான்
முத்தமிழ் வளர்த்த முதல்வனைத் தொழுங்கள்

ஆறுமுகமும் அணிமுடி ஆறும் ஔசதமான
நீறிடும் நெற்றியும் நீண்ட வேலுடன்
ஆறிருதிண் புயத்து அழகிய மார்புடன்
கூறுமடியார் வினைதீர்த் தென்றும் வருகிறான்

வீதிகள் தோறும் சைவஅடி யார்குழுமிட
வீதிகள் வெளியே கும்பங்கள் தாங்கிட
ஆதியாம் மூர்த்தி அபிஷேக கந்தன் வாரான்
ஓதியுணர்ந் தருள் பெற்றிட வாறான்

கையில் வேலைத் தாங்கியே வாறான்
கையை அபயமாய் காட்டியே வாறான்
மையல் கொள்ளும் சக்திகள் அருகிருக்க
வையகம் போற்றும் சண்முகன் வாறான்! (தேர் காண...)

- *சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்*

### நல்லூர் இரதம் வரும் காட்சி

செல்லூர் பொதிய மலைதா னகத்தியன் செந்தமிழின்
சொல்லூ ரமுதஞ் சுவைத்திட வேவந்த தோற்றமென்ன
பல்லூரவரும் பராவும் பலவலங் காரமுடன்
நல்லூ ரிரதம் வருங் காட்சி காண்பவர் ஞானிகளே!

- **புலோலி தியாகராசபிள்ளை**
**(திருநல்லூரலங்காரம்)**

### எல்லோரும் நம்பிவந்து தாள் பணிவோம்!

நல்லூரின் நாயகனே ஞானவடி வேலவனே முருகா
பல்லோரும் பணித்தேத்தும் சுப்ரமண்யனே ஈசன்மகனே
எல்லோரும் உனையே நம்பிவந்து தாள் பணிந்தோம்
பல்லாண்டு நாம்வாழ மலர்ப் பதமருள்வாய் கந்தா!


- **சிவநெறிக்கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்.**



### நல்ல மனது உனக்கு தருகிறான்!

நல்ல மலரெ டுத்து
நல்லூரை நாடி வா
நல்ல மனமெ டுத்து
நல்லூரா னடி வணங்கு
நல்ல மாலை தொடுத்து
நல்லூரா னுக்கு கொடு
நல்ல மனது னக்கு
நல்லூரான் தரு கிறான்!

- **வசந்தி துதிகரன், நயினாதீவு**



# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்



## நல்லூரில் இன்றைய சிறப்பு நிகழ்வுகள்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சித் தொடரில் இன்று இரதோற்சவத்தை முன்னிட்டு பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. காலை சங்கீத பத்மஸ்ரீ கலாபூசணம் எஸ்.ஈ. பத்மநாதன் வழங்கும் சங்கீதக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து ஆசிரிய ஆலோசகர் என்.ரி. சுரீந்திரன் "தேரின் மகத்துவம்" என்ற பொருளிலும், இளம் சைவப் புலவர் சரோஜினிதேவி சிவஞானம் "உதித்தனன் உலகம் உய்ய" என்ற பொருளிலும் ஆற்றும் சிறப்புச் சொற்பொழிவுகளும், நல்லூர் கண்ணன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

மாலை நிகழ்வின்போது பொ. சந்திரவேல் "உள்ளம் பெருங் கோயில்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார். சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

**துர்க்காதேவி மணி மண்டபத்தில்**

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று ஏ.கே. கருணாகரன் வழங்கும் இன்னிசை விருந்து இடம்பெறுகிறது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின்போது கே. குகபரன் (வயலின்) எம். சிதம்பரநாதன் (மிருதங்கம்) என். சதீஸ்குமார் (முகர்சிங்) ஆகியோர் பக்க வாத்தியம் வழங்குவார்கள். (க)

**நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில்**

இன்று இரதோற்சவத்தையொட்டி காலை 10.00 மணிக்கு பக்தி இசை கானம் இடம்பெறும். பாடல்: கங்கேஸ், ஆர்மோனியம்: அரியரத்தினம், தபேலா: நெல்லை ஸ்ரீஸ்கந்தராசா. இதனைத் தொடர்ந்து 11.00 மணிக்கு சைவப் புலவர் செ. கந்த சத்தியதாசன் "முருகப் பெருமானின் திருப்பெருவடிவம்" என்ற பொருளில் நிகழ்த்தும் கதாப்பிரசங்கம் இடம்பெறும்.

சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் தெய்வீகப் பேருரைத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் "தமிழ் வடிவாய் வந்த தமிழ் தலைவா போற்றி" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக காலஞ்சென்ற சங்கீத வித்துவான் க. இராமநாதனின் புதல்வியும் மாணவியுமான செல்வி. யதுநந்தினி வழங்கும் இன்னிசை விருந்து இடம்பெறும். (க)

## முருகன் உறையும் நல்லையம்பதி

உலகநாயகனாம் முருகப் பெருமான் எழுந்தருளியிருந்து தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள் காட்சியினை அள்ளி வழங்குகின்ற தலமாக நல்லையம்பதி விளங்குகின்றது. முருகு என்றால் அழகு. அழகிலும் அழகு நல்லைக் கந்தனானவன் எங்கள் பண்பாட்டின் தெய்வமாக விளங்குகின்றான்.

நல்லையம்பதியின் சிறப்பு மிக உயர்ந்தது. ஈழத்தில் நடமாடும் கோயில்களாக விளங்கும் யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையில் வந்த செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி போன்ற ஞானவான்கள் தரிசனம் செய்து நடமாடிய திருத்தலமாக இது விளங்குகின்றது.

சிறப்புப் பொருந்திய நல்லைக் கந்தனுடைய மகோற்சவப் பெருந்திரு விழா வின் இரதோற்சவ நன்நாள் இன்றாகும். விழாக்கோலம் பூணும் நல்லைக் கந்தனுடைய மகோற்சவம் காண இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்துவரும் பக்தர்களின் திருக்கூட்டத்தினால் நிறைந்து காட்சி தருகின்ற அற்புதத் தலமாக நல்லையம்பதி விளங்குகின்றது.

தேரின் அமைப்பை ஆராய்ந்து அவதானிப்போமாயின் அதன் முழுத் தோற்றமும் கொழுந்து விட்டெரியும் அக்கினியின் அமைப்பை நிகர்க்கும். இக் கருத்தை உள்ளடக்கியே "சாற்றியிடும் அக்கினியிலே சங்காரம்" எனக் கூறப்படுகின்றது. ஈசனின் திருக்கரத்திலே ஏந்தியிருக்கும் அக்கினி சங்காரத்தைக் குறிக்கின்றது.

மானுடசரீரமே இரதம், பிரபஞ்சப் பொருள்களெல்லாம் மானிட சரீரத்திலுண்டு. இந்திரியங்கள் அனைத்தும் தேவர்கள் எனப்படுகின்றன. அஞ்ஞானத்தில் உழலும் சீவாத்மன் பிரம்மதேவன் ஆகிறான். அவன் பெற்றுள்ள அறிவு வேதங்களாகின்றன. சிவனருளால் சிவஞானம் உதயமாகும் போது முக்குணமயமான இவையாவும் அழிந்து பட்டுப் போகின்றன. சீவாத்மா சிவத்தில் லயமாகின்றது. குணாதீதத்திலிருப்பது சிவம். பல பிறவிகளில் படாத பாடு பட்டு ஜீவாத்மா தன்னை பக்குவப்படுத்துகின்றது. முற்றிலும் பக்குவமான பின்பு பரஞானம் கிட்டுகின்றது. பரஞானம் அடையப் பெறுபவர்கள் எல்லோரும் எக்காலத்திலும் திரிபுரதகனம் செய்து வருகின்றார்கள்.

**"அப்பணி செஞ்சடை யாதி**
**புராதனன்**
**முப்புரஞ் சென்றன னென்பர்**
**கள் மூடர்கள்**
**முப்புரமாவது மும்மல காரிய**
**மப்புர மெய்தமை**
**யாரறிவாரோ"**


என திருமந்திர பாடல் சுட்டுகின்றது.

பிரபஞ்சம் முழுவதும் பீட சக்தியாகவும் அவற்றில் மறைந்திருப்பதே சிவசொரூபம் என்ற நினைவுடனும் இரதத்திலே இறைவனை நாம் தரிசிப்பதனால் சிறந்த பலனை அடையலாம் எனக் குறிப்பிடுகின்றது. இத்தகு சிறப்புப் பொருந்திய தேர்த் திருவிழாவினை தரிசிப்பவர்களுக்கு சிவ புண்ணியப் பேறு கிடைக்கின்றது.


**"கருணை கூர் முகங்கள்**
**ஆறும் கரங்கள்**
**பன்னிரண்டும் கொண்டே ஒரு**
**திரு முருகன்**
**வந்தாங் குதித்தனன் உலகம்**
**உய்ய"**

என்ற பாடல் கூற்றுக்கிணங்க ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும், வேற்படையும் உடையவனாய் வள்ளி தெய்வயானை என்னும் தேவியரை இருமருங்கிலும் கொண்டு தோற்றமளிப்பவன் முருகப் பெருமான். அழியா அழகும் அன்பும் கருணையும் உடையவனாகவும் என்றும் இளையவனாகவும், அறியாமை இருளை நீக்கி அறிவை வளர்ப்பவனாகவும் விளங்குகின்றான். இத்தகு சிறப்பு வாய்ந்த நல்லைக் கந்தனுடைய இரதோற்சவ நன்னாளிலே வழிபாடாற்றுவதன் ஊடாக முருகப் பெருமானின் திருவருட் பேற்றினை பெற்றுய்வோமாக!

*சைவப்புலவர்*
*எஸ்.ரி.குமரன், எம்.ஏ.*
*(ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)*



அருள்மிகு நல்லைக் கந்தனின் எழில்மிகு கோபுரம்



நல்லைக் கந்தன் ஆலயத்தின் தெற்கு வாசல் இராஜகோபுரம் கடந்த ஆண்டிலேயே (2011) அமைக்கப்பட்டது. இந்த இராஜ கோபுரத்தின் கும்பாபிஷேகம் கடந்த வருட மகோற்சவ காலத்தின் போது - கார்த்திகை உற்சவ தினமான 2011 ஆகஸ்ட் 21ஆம் திகதியன்று நடைபெற்றது.

ஒன்பது தளங்களைக் கொண்டதாக இந்த இராஜகோபுரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## நல்லைக் கந்தனின் மகோற்சவப் பெருவிழா

யாழ். குடாநாட்டிலுள்ள முப்பெரும் படைவீடுகளில் ஒன்றான நல்லையம் பதியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இலங்கையிலுள்ள கந்தகோட்டங்களுள் தனித்துவம் வாய்ந்த நல்லைக் கந்தன் திருக்கோயில் அமைந்திருக்கும் நல்லூர் பிரதேசம் வரலாற்றுப் பெருமையும் ஆன்மீகச் சிறப்பும் கொண்டது. தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தின்போது நல்லூர் இராசதானியாக அமைந்திருந்தது. தமிழ்த் தெய்வமாகப் போற்றப்படும் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள வகையில் மேலும் பல திருக்கோயில்கள் அமைந்திருப்பதும், அத்தகைய புனிதமான பிரதேசத்திலிருந்து ஒலிக்கும் ஆலய மணியோசை இந்து மக்களுக்கு எந்நேரமும் இறைசிந்தனையைத் தோற்றுவித்துக் கொண்டிருப்பதும் தெய்வீகமானது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த பெருமைகுரியது நல்லூர். யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் தோன்றிய கடையிற் சுவாமிகள் நடமாடிய புண்ணிய பூமி. இவரது சீடரான செல்லப்பா சுவாமிகள் நல்லூர் தேரடியில் வாழ்ந்தவர். இவரது சீடரான யோகர் சுவாமிகளும் நல்லைக் கந்தன் திருவருள் பெற்றவர். இத்தகைய ஞான பரம்பரையினருக்கும் நல்லூருக்கும் இடையிலான தொடர்பு மேன்மையானது. இத்தகைய தனித்துவமிக்க நல்லூரிலே நாவலர் பெருமானின் நினைவாக மணி மண்டபம், கலாசார மண்டபம் என்பன முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இலங்கையின் ஒரேயொரு சைவ ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், துர்க்காதேவி மணிமண்டபம், அகில இலங்கை இந்து மாமன்றம் உட்பட பல சமய கலாசார மன்றங்கள் என்பன நல்லூருக்கு நற்சிறப்பை ஏற்படுத்துகின்றன.

நல்லை நகரிலே இந்து ஆலயங்கள் பல இருந்தாலும் நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு ஒரு தனித்துவமுண்டு. நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தில் நல்லூர் பிரதேசம் மட்டுமல்ல, யாழ்ப்பாணக் குடாநாடே புனிதம் பெற்று தெய்வீகப் பக்திக் கோலமாகக் காட்சிதரும் சிறப்பைக் காணலாம். விரத அநுட்டானத்துடன் பக்தர்கூட்டம் நல்லூரை நாடிவரும். திருநீற்றுப் பொலிவும் தெய்வீகக் காவடிகளும் எல்லையில்லாத பேரின்பத்தைத் தரும் அற்புதக் காட்சிகள். ஆலயத்தின் நேரந்தவறாத பூசை ஒழுங்கு சிறப்பாகச் சொல்லத்தக்கது.

நல்லைக் கந்தனின் இரதோற்சவப் பெருவிழா இன்று (16ஆம் திகதி) நடைபெறுகிறது. நாளை தீர்த்தோற்சவமும், நாளை மறுதினம் (18ஆம் திகதி) பூங்கா வன உற்சவமும் இடம்பெறுவது டன் இவ்வருட மகோற்சவப் பெருவிழா நிறைவடைகிறது.

- சூரியர்

## தேர்வடம் தொட்டுப் பார்

சூரிய சந்திரர் போல் நேரம் பிசகாத
சுந்தர ஆலயம் நல்லூர்,
நேரிய முகாமையும், நித்திய
நைமித்தியமும்
நியமமதாய் உள்ளது நல்லூர்,
வீரியம் பேசும் விண்ணர்கள் கூட
வியக்க வைப்பது நல்லூர்,
கூரிய அம்பாயினும், கோடியாயினும்
கும்பிட வைப்பதும் நல்லூரே
சீரிய பக்தரைச் சிந்திக்க வைத்து
சித்திக்க வைப்பதும் நல்லூர்,
சீறிய பாம்பென சினங்கொண்டவர்
சிந்தையை அடக்குவது நல்லூர்,
தேரினில் உலாவர, தேசம்
விடியுமே
தோக்ஷங்களும் நீங்குமே நல்லூரில்,
தேறிய வாழ்வுகாண, தேர்வடம்
தொட்டுப்பார்
தீராத பேராசை தொற்றாது நல்லூரில்.

**- கே.எஸ்.சிவஞானராஜா**
**கொக்குவில்.**

## நேரிய வாழ்வு மலரட்டும்


நடேசன் மைந்தன்,
நமக்கு அருள்வதற்காய்,
நல்லையில் தேர் மீதில்
வல்வினைகள் போக்குகின்ற
வள்ளி தெய்வானை மணாளன்,
நாயகியரோடு தேர் மீதில்,
பல்லாயிரவராய் பக்தர்கள்,
சூழ்ந்திட, மாடங்கள் கோபுரங்களுமே,
மலைத்துக் கொள்ள,
மாதர்கள் கற்பூர தீபங்கள் ஏத்திட,
காவடிகளும் கொஞ்சமல்லவே,
இசைக் கருவிகள் பல பலவாய்
இசைக்க பாடல்களும் ஆடல்களுமே,
வானூர்தியும் புக்ஷ்பங்களைச் சொரிய,
சண்முகப் பெருமான் சரித்திரமாய்
விளங்குகின்ற நல்லூரிலே,
தேரேறி வருகின்றார்.
ஆறுமுகசுவாமி! உன் திருக்காட்சியில்,
இன்னல்கள் யாவும் விலகியே,
நேரிய வாழ்வு தேசத்தில் மலரட்டும்!-

**செல்வி. க. கமலாம்பிகை**
**மீசாலை.**

## அல்லலுறுவோரை காத்திடுவாய்!

இரந்துன்னை வேண்டு கின்றோம் நாமும்
வரந்தருவாய் மாயவன் மருகா
கரந்தனில் வேலை எப் போதும்
நிரந்தரமாய்கொள்வதால் நீவேலன்
பரம் தனின் உருவமாயிருந்தாலும்
உரம் தனில் உனக்கிணையுண்டோ
சிரம் தனை தாழ்த்துகிறோம் உலக
அரங்கிலே அல்லலுறு வோரை காப்பாய்!

**-திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்**



# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்

சண்முகா!
தேரேறி பக்தர்களுக்கு
அருட்காட்சி தாருமையா...

**16.08.2012**



## நல்லை ஆதீனத்திற்கு புதிய கட்டிடம்

### மூன்றுமாத காலத்தில் நிறைவுபெறும் என்கிறார் சச்சிதானந்தன்

நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு பின்புறமாக மேற்கு வீதியில் அமைந்திருக்கிறது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம். இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமாக பெருமை பெறும் நல்லை ஆதீனம் அறுபதுகளின் ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. மணி ஐயர் என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டுவந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமி கள் ஆதீனத்தின் ஸ்தாபக ராக வும், முதலாவது குருமகா சந்நி தான மாகவுமிருந்த, ஆதீன செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றார்.

அப்போது வாடகை வீட்டில் இயங்கிவந்த ஆதீனத்தை மேலும் சிறப்பான வகையில் நடத்துவதற்கு உதவும் முகமாக நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் பின்புறமாகவிருந்த கட்டிடத்தை (இப்போது ஆதீனம் இயங்கும் இடம்) மழவராயர் குடும்பத்தினர் 1966 ஆம் ஆண்டில் முதலாவது குருமகா சந்நிதான சுவாமிகளுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள். இந்தக் கட்டிடம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை நிர்வகித்துவரும் மாப்பாண முதலியார் பரம்பரையினர் பிறந்து வளர்ந்த வீடு என்றும், இது பின்னர் பலதர்மகாரியங்களைச் செய்து வந்த புத்தூர் மழவராயர் குடும்பத்திற்கு கைமாறியது என்றும் சொல்லப்படுகிறது.

1981ஆம் ஆண்டில் முதலாவது குருமகா சந்நிதான சுவாமிகள் திடீரென சமாதியடைந்தார். அப்போது ஆதீனத்தின் இளவரசாகவிருந்த சின்ன சுவாமிகள் இரண்டாவது குருமகா சந்நிதான-மாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டு பதவி ஏற்றார். இவரே இப்போது ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளாக ஆதீனத்தை வழிநடத்தி வருகிறார்.

நல்லை ஆதீனக் கட்டிடம் பழைமையானதாகவும், வசதிகள் குறைந்த நிலையிலும் இருந்ததால், அதனை மீள்நிர்மாணம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆதீன சுவாமிகள், சமய நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வெளிநாடு செல்லும் வேளைகளில் அங்குள்ள புலம்பெயர் இந்து மக்களுக்கு ஆதீன கட்டிட குறைபாடுகள் பற்றி எடுத்துச் சொல்லி வந்தார்.

இவ்வேளையில் ஆதீன சுவாமிகளின் வேண்டுகோளை ஏற்று உதவுவதற்கு பெரிய பிரித்தானியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்நாட்டு இந்து மக்கள் ஒன்றிணைந்து முன்வந்தார்கள். இதற்காக பெரிய பிரித்தானியாவில் ஆதீனக் கட்டிடப் புனருத்தாரண நிர்வாகக் குழுவொன்று கடந்த ஆண்டு (2011) நடுப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்டது.

இந்தக் குழுவின் ஆரம்ப செயற்பாடாக கடந்த ஆண்டு (2011) நவம்பர் மாதம் 7ஆம் திகதியன்று, ஆதீனத்தின் புதிய



ந.சச்சிதானந்தன்

கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக குழுவின் தலைவர் உட்பட குழுவின் ஏனைய உறுப்பினர்கள் பலரும் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்கள்.

நல்லை ஆதீனம் இயங்கிவந்த அதே இடத்திலேயே புதிய கட டிடம் அமைக்கப்பட்டு வருவதுடன் அது அடித்தளமும் மேல்மாடியும் கொண்டதாகவும் தோற்றம் பெறவிருக்கிறது.

பெரிய பிரித்தானியா - நல்லை ஆதீனக் கட்டிட புனருத்தாரணக் குழுவின் செயலாளராக இருப்பவர் நடராஜா சச்சிதானந்தன். இணுவில் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர், இலண்டன் சிவன் கோயில், பிரித்தான-ியா சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், லுயிசம் தமிழ்ப் பாடசாலை என்பன உருவாகு வதற்கு மூல காரணமாக இருந்தவர் என்பதுடன், இலண் டன் மாந-கரில் சைவ மாநாடுகள் பலவற்றை நடத்துவதற்கும் பெரிதும் உதவி வந்துள்ளார்.

இவரை தமிழ்நாதம் சார்பாக சந்தித்தபோது நல்லை ஆதீன கட்டிடப் பணி சம்பந்தமான தகவல்களை அறிய முடிந்தது.

பெரிய பிரித்தானியாவில் இயங்கும் - நல்லை ஆதீனக் கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழு அங்குள்ள சைவாலயங் களிடமிருந்தும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் சைவப் பெருமக்களிடமிருந்தும் நிதியுதவிகளைப் பெற்று ஆதீனக் கட்டிடப் பணியை செய்து வருகிறது. இந்தக் குழுவின் தலைவராக எஸ். பாலசிங்கம், உபதலைவராக வைத்திய கலாநிதி எஸ். சோமசேகரம் செயலாளராக ந. சச்சிதானந்தன், உப செயலாளராக வைத்திய கலாநிதி கணன் ஸ்ரீதரன், பொருளாளராக வே. சிவசுந்தரம், உப பொருளாளராக செ. செல்வராசா, ஒருங்கிணைப்பாளர்களாக கலாநிதி அ. தேவசகாயம், தா. யோகநாதன் ஆகியோருடன் நிர்வாக உறுப்பி னர்களாக வேறு பலரும் இணைந் திருந்து ஆதீனக் கட்டிடப் பணியை முன்னெ டுத்துச் செல்வதற்கு உதவி வருகி றா ர்கள் என்று சொல்கிறார் ந. சச்சிதானந்தன்.

ஆதீன கட்டிட வேலைகள் எண் பது சதவீதமான வை நிறைவு பெற்றுள்ள நிலை யில் மிகுதி வே லைகள் இரண டொரு மாதங் களில் பூர்த்தியாகும் என எதிர்பா ர்க்கப்படுகிறது. இந்த நிலை யில் அண்மையில் இலண்டனில் நடைபெற்ற புனருத்தாரண நிர்வா கக் குழுவின் கூட்டத்தில் ஆதீ னக் கட்டிடத் திறப்பு விழா இலண்டன் நிர்வாகக் குழுவினால் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்படலாம் என்பதுடன், திறப்பு விழாவையொட்டி சிறப்பு மலரொன்றும் வெளியிடப்பட விருப்பதாகவும், புனருத்தாரண நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான அ. சிறிசற்குணம் மலர் தயாரிப்பு மற்றும் வெளியீடு தொடர்பான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் இவர் தகவல் தருகிறார்.

ஆதீனக் கட்டிட வேலைகளை மேற்கொள்ளும் பொறுப்பு ஊரெழு ஜெயசன்ஜன் கட்டிட நிர்மாண நிறுவனத்திடம் ஒப்படைத்திருப்பதாகவும், அகில இலங்கை இந்து மாமன்றம் இணைப்பாளராகவிருந்து, கட்டிட வேலைகளை மேற்பார்வை செய்து வருவதாகவும், ஆதீனக் கட்டிட



வேலைகளுக்கு மொத்தமாக இரண்டு கோடி ரூபாவுக்கும் மேலாக செலவாகும் என மதிப்பிட்டிருப்பதாகவும் குழுவின் செயலாளர் நடராஜா சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

- அ. கனகசூரியர்


சண்முகப் பெருமானுக்கு அரோகரா...

**முத்தையா பேக்கரி**

சகலவிதமான கேக் வகைகளும், பாண், தவிட்டுப்பாண், திருமண வைபவங்களுக்கு ஓடர்களும் செய்துகொடுக்கப்படும்.

முத்தையா பேக்கரி,
337, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 0771310841.

**பிரணவா நகைத் தொழிலகம்**

சகல விதமான ஓடர்களும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்

மக்கள் குறைதீர்க்க வாருமையா...

யாழ். நகரில்
தரநிர்ணயத்துடனும்
குறைந்த சேதாரத்துடனும்
தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.

இல: 68/C, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 8465


நல்லூர் வீதியில்
உன்னருள் வேலவா!

நல்லூர் வீதியில்
திருநீறு வேலவா நல்லூர் வீதியில்
முருகநாமம் வேலவா
நல்லூர் வீதியில் அன்னப்பிரசாதம்
வேலவா
நல்லூர் வீதியில் உன்னருள்
வேலவா!

- சைவப்புலவர் நித்திய தசீதரன்


**ARUN TRAVELS**

வாவா முருகா
வடிவேல் முருகா...

* யாழ்-கொழும்பு பிரயாணப் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
* அகில இலங்கை சுற்றுலா வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
* உள்ளூர் போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படும்.
* விமான நிலையத்துக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படும்.
* குளிரூட்டிய, குளிரூட்டப்படாத வாகன வசதிகளுக்கும் நாடவேண்டிய இடம்.

அருண் றவல்ஸ் தொடர்பு: 0779603016, 0771658146

**கௌதமி பேக்கரி & கூல்பார்**

சகல விதமான சிற்றூண்டி வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம் கௌதமி பேக்கரி & கூல்பார்.

விசேட வைபவங்களுக்கு ஓடர் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புக்கு: 0771653770
இல. 446, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
இல. 11 ஏ.பி.லேன்இ முஸ்லிம் தெரு, நாவாந்துறை.
கிளை அலுவலகம்: அண்ணா சிலையடி, குருநகர், யாழ்.